காவேரி

சர்வதாரி - மாசி

665
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS
198063

யந்திரீக விவசாயம்

தற்சமயம் இந்தியாவில் விவசாயம் கிரமமாக இயந்திரங்களின் உதவியால் செய்யப்பட்டு வருகிறது. புராதன கலப்பைகளுக்கு பதிலாக, டிராக்டர்களும் மற்றும் நவீன இயந்திர கருவிகளும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

நிலத்தின் விளைவுத் தன்மையை அதிகரிக்க, எருவு தயாரிக்கும் ஆலைகளும், நீர்பாசன திட்டங்களும் பெரும்பாலும் சாதகமானவை. விவசாயத்திற்கு தேவையான இயந்திர சாதனங்களை அளிப்பதில், எஃகு இன்றியமையாதது.

ஒரு டிராக்டர் உழுவதை பண்டித நேரு பார்வையிடுகிறார்.

டாடா எஃகு

தி டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஸேல்ஸ் ஆபிஸ்:

23B, நேதாஜி சுபாஷ் ரோடு,

கல்கத்தா.

நாளை வருவது இன்றே

உலகப் பெயர்பெற்ற இந்த வியாபாரக் குறி டன்லப் ஸ்தாபனத்தின் நேர்மைக்கு ஓர் அறிகுறி. இது எங்கு காணப்பட்டாலும், வியாபாரப்பொருள்களின் மீதானாலும் சரி, விளம்பரங்களிலானாலும் சரி, அப்பொருள் அல்லது அவ்விளம்பரத்தின் நாணயத்தை அறிவுறுத்துகிறது. டன்லப் முதன் முதலாக நடைமுறையில் உபயோகிக்கக்கூடிய காற்றடைத்த டயர்களைத் தயாரித்தார்கள். இன்றும் பல வருஷ அனுபவத்தின் பயனாக நாளைவருவதை இன்றே செய்துகாட்டுகிறார்கள்.

டன்லப்

DX-333 TM.

போர்ன்-வீடாவிலுள்ள கால்ஷியமும் விடமின்களும், வளரும் குழந்தைகளுக்கு வலுவான எலும்புகளும், கெட்டியான சதையும் வளர உதவுகின்றன. பெரியவர்களுக்கு நிம்மதியான ஆழ்ந்த உறக்க மளித்து ஜீவசக்தி ததும்பச் செய்கின்றன.

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.

KB 2 TM

காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

தி யுனைடெட்

கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்றமூலதனம்	....	ரூ.	8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ.	45,00,000
நடைமுதல் நிதிகள்	...	ரூ.	49,00,00,000
			க்கு மேல்

•

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா (வைஸ்—சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா (வைஸ்—சேர்மன்)

ஆநந்த சரண் லா

பைஜ்நாத் ஜலான்

கோவிந்த்லால் பங்கூர்

மதன்மோகன் R. ரூயியா

மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா

மோதிலால் தபூரியா

நவீன் சந்த்ர மபட்லால்

P. D. ஹிமத்சிங்கா

R. L. நோபனி

B. T. தாகூர்—ஜெனரல் மானேஜர்

•

இந்தியா, பாகிஸ்தான், பர்மா, மலேயா முதலிய இடங்களில் உள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் ஊர்களிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன. உலகம் முழுவதும் ஏஜன்ஸி ஏற்பாடுகள் அமைத்துள்ளோம். இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் திறமை மிக்க சேவை புரிந்து வருகிறது, எங்கள் பாங்க்.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

•

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.



எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி,

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்ச்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

இன்றுவரை நிகரற்றது.

கிடைக்கக்கூடிய சந்தன அத்தர்களில் மைசூர் சந்தன அத்தர்தான் மிக உயர்ந்ததும் சுத்தமானதும் ஆகும். வைத்திய உபயோகத்திற்கோ அல்லது சோப், இதர வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கோ 'மைசூர்' பெயர் கொண்ட சந்தன அத்தருக்கு மிஞ்சியது ஒன்றுமில்லை.

மைசூர் சந்தன அத்தர்

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

ரூ. 500 இனும்!

ஓர் அதிசயமான புதுமை!!

மாயசக்திவாய்ந்த மோதிரம்

மாந்த்ரீகம், வசியம் முதலிய சக்திகளின் உதவியால் இந்த மோதிரம் தயாரிக்கப் படுகிறது. இது ஓர் அதிசயக்கருவி! இதை அணிபவர் எவ்வளவு கஷ்டம் அல்லது தாங்கமுடியாத துயரத்தை அனுபவிப்பவராயினும் சுகம் அடைவர். இம்மோதிரம் உங்களை எல்லாவித அபாயங்களினின்றும், பிணியினின்றும் காப்பாற்றவல்லது. கிரக தோஷங்களும் நீங்கும். இம்மோதிரம் அணிபவர் தாம் விரும்பு பவரை வசியப்படுத்தவும், தன் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரவும் சக்தி பெறுகிறார். காதல், வழக்கு, மற்றும் தொழில் அல்லது வியாபாரத் துறை களில் அமோக வெற்றி பெறுவதுடன் ஏராளமான பொருட்செல்வமும் அடையக்கூடும். சுருங்கக் கூறுமிடத்து, உங்களுக்கு எப்பொழுதும் உற்ற துணைவனாக விளங்கக் கூடியது இம்மோதிரம்! ஒரு முறை உபயோகித்தால் இதன் அபூர்வ இயல்புகள் விளங்கும்! முதல் நாளிலேயே வெற்றியின் அறிகுறிகள் தோன்றும்!!

ஒரு மோதிரத்தின் விலை ரூ. 2—0—0   மூன்று மோதிரங்களின்விலை ரூ. 5—0—0

(பாக்கிங் தபாற்செலவு வேறு)

MAHAKALI ASHRAM

No. 247, :: KANPUR.

அசைவிலொரு அதிசயம்



பஞ்சணையில் படுத்துறங்கும் சுகத்துக்கு ஈடானது 1948 ப்யூக் சவாரி. எந்த ரஸ்தாவானாலும் சரி, காற்றில் மிதப்பதுபோன்ற சுகமான ஓட்டம். துளி ஆட்டம், அசைவு இருக்க வேண்டுமே! ஊஹூம், கிடையவே கிடையாது. புதுக் கார் வாங்குமுன் ஒரு தடவை இந்த 1948 ப்யூக்கில் ஏறிச்சென்றுபாருங்கள். அதன் சுகம் அப்பொழுது தெரியும்.

1948 ப்யூக் ஸூபர்

Buick

SUPER

சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்

மவுண்ட் ரோடு, சென்னை.

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் லிமிடெட்

மதுரை, திருச்சி, திருநெல்வேலி, புதுக்கோட்டை.

சலவை வேலை சுலபமாகிறது. காவேரி பார் சோப் ஏராளமான நுரையை அளித்து, உங்கள் துணிகளில் இருக்கும் நுண்ணிய அழுக்கையும் எளிதில் அகற்றி சுத்தமாக்குகிறது. காவேரி சோப்பின் மிருதுவான அழுக்கெடுப்புத் தன்மை ஆடைகளை அழிக்காமல், வெளுக்க வெளுக்க வெகுநாள் உழைப்பை அவைகளுக்கு அளிக்கிறது.

காவேரி
பார் ஸோப்

தயாரிப்பவர்கள்:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிட்

மேட்டூர் அணை :: சேலம்

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:-

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்,

திருச்சிராப்பள்ளி.

பூரண விற்பனை ஏஜெண்டுகள்:

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்,

120, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ் - 1.

<u>மூன்று தலைமுறைகள்</u>

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

பிரசித்தி பெற்ற இடம்

★

ரோஸின்
(எல்லாவிதம்)

டர்பன்டைன்
(முதல் தரம்)

சூடம்
(U. S. A. & ஜப்பான்)

அராபிக்
கோந்து (GUM)

பாதரசம்

பச்சைக் கற்பூரம்

குங்குமப்பூ
(சுத்தமானது)

V.H.R. பெருங்காயம்

★

உங்களுடைய தேவைகளுக்கு
எழுதவும்

★

வர்ஜீவன்தாஸ் ஹிர்ஜி & கோ.
194 கோவிந்தப்பநாயக்கன் தெரு,
மதராஸ்.

போன் No. 3478 :: தந்தி "SANTHOSH"

(ஹெட்டாபீஸ்: பம்பாய்)

பொருளடக்கம்

சர்வதாரி மலர் 8 — மாசி இதழ் 7

கவிகள் இல்லையே — 11
ரா. ஸ்ரீ. தேசிகன்

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் — 14
ராமய்யா

க்ருதி மணிமாலை — 19
கடாம்பி ராமசுப்பன்

நடிகையின் துறவு — 20
சிவநந்தி

அறுந்த தந்தி — 24
விஜயஸ்ரீ

விமர்சனம் — 30

ஒரே வரி — 32
சௌரி

கர்நாடக ஸங்கீதம் — 39
கலாதாஸன்

பச்சைக் கிளி — 44
சாரி

பறக்கும் கணக்கு — 49
சிப்பி

பட்டண் பெருமை (தொடர் கதை) — 57
கே. எம். முன்ஷி

ஹம்பி — 72
டாக்டர் வே. ராகவன்

அகப் பகை — 80
வே. ரங்கராஜன்

விருப்பம் என்ன — 84
ஆர். எஸ்.

ரஜியா — 89
ஹரிணி

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

மேன்மையின்

பெருமை அநேக வருஷ
உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



★

சைக்கிள்கள்

சைக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு

நம்பி வாங்க

இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :: மதராஸ்-1.

தந்தி:—"சைக்கிள்ஸ்" போன்: 3168

காவேரி

சர்வதாரி மலர் 8	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	மாசி இதழ் 7

கவிகள் இல்லையே

ரா. ஸ்ரீ. தேசிகன்

கீழ்வானம் வெள்ளென்று வெளுத்துக் கொண்டிருந்தது. துயிலெழுந்த பறவைகள் சிறகுதறிப்பறக்கத்தொடங்கி விட்டன. வைகறைக் காற்றும் விரி கின்ற மலர்களின் மணங்களைக் கவர்ந்து வந்தன. என்றும் என்னோடு வருகிற நண்பர் வந்தாரில்லை. நான் ஒரு சோலைவழியாய்த் தனியே போய்க் கொண்டிருந்தேன். ஏதோ இருளில் மொத்தையாய்க் கிடந்த மலையின் எழில் கள் பூவின் இதழ்கள்போல ஒவ்வொன் ருகத் தோன்றின. இதற்குள் மலைச் சிகரத்தின் மீது காலைக் கதிர்கள் துள்ளி விளையாடி விட்டன. தாவி ஓடி வருகிற அருவிகளின் இன்னிசை என் செவியில் மதுரமாய் ஒலித்தது. நான் ஒரு பாறை மீது உட்கார்ந்தேன். பக்கத்தில் களுக் கெனச் சிரித்து நகரும் நீரோட்டங் களோடு என் சிந்தையும் திரிந்து கொண் டிருந்தது.

கவிகள் இல்லாத நிலையில் இயற்கை பேச்சற்றல்லவா கிடக்கும். அதற்குச் செவியையும் கண்ணையும் கொடுத்தவர் கவிகள்தாமே என்ற எண்ணம் என் மனத்தில் எழுந்தது. ஆம்; அதமட்டுமா? புறத்து இயற்கை நாடகந்தான உயிர் பெற்றெழுகின்றது அவர்கள் கையில்? அகத்தில் துயிலுகின்ற பல்லாயிர உணர்ச்சிகளும் விழித்தெழுகின்றன, பேசுகின்றன அவர்கள் இல்லையேல், எந்த நிகழ்ச்சியும் ஊமனுர் கண்ட கனவு போல ஆகுமன்றோ? என்று எண்ணி எண்ணி, உட்கார்ந்திருந்தேன். சூழ்நிலை வனப்பும் கணந்தோறும் வளர்ந்து கொண்டேயிருந்தது.

"என்ன சீக்கிரம் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டீர்களா?" என்ற குரல் என்பின் எழவே, என் சிந்தையும் கலைந்தது; திரும்பிப் பார்த்தேன். என் நண்பர் புன்னகையோடு நிற்கக் கண் டேன்.

"வாருங்கள், எப்பொழுது ஊரிலிருந்து வந்தீர்கள்?" என்றேன்.

"நேற்றிரவே வந்துசேர்ந்தேன். அகத் தில் விசாரித்ததில் உலாவப்போய்விட்ட தாகச் சொன்னுர்கள்."

"நாம் நிதம் புறப்படுகிற நேரத்திலே தான் வீட்டை விட்டகன்றேன்."

"வந்த அலுப்பில் தூங்கிவிட்டேனே?" என்றுர்.

"அப்படித்தானிருக்கும்" என்று பதி லளித்தேன்.

"இயற்கை எப்படிக் காட்சி அளிக்கி ருள் பார்த்தீர்களா?" என்றேன்.

"ஆம் உண்மைதான்: அதோ நிலத்தை உழுகின்ற குடியானவனுக்கு இத்தகைய அழகு தோன்றுகிறதா?"

"அவன் மூடின கண்கள் திறந்தால், அவன் அடைபட்டிருந்த செவிகள் திறந் தால் தெய்விகக் காட்சிகள் தோன்றும்; அமரகீதங்கள் ஒலிக்கும். நாம் நதிக்கரை யில் உட்கார்ந்துகொண்டே தண்ணீர்க்கு

அழுகின்றோம்; உள்ளொளியை மறந்து ஊரெல்லாம் அதைத்தேடுகின்றோம்; அமிருதத்தை வைத்துக்கொண்டு மரணவாழ்வை நாடுகின்றோம். வீணை என்ன செய்யும்? அதைப் பேசும்படி செய்கிறது நம்முடைய பழகியவிரலன்றோ? ஒரு பெருங் காப்பியத்தை மூடன் கையில் கொடுத்தால் என்ன பயன் தரும்? இயற்கைக் காப்பியத்தைப் படிக்கிற கவிகள் தாமே அதன் நுணுக்கமான சுவைகளை அறிய முடியும்'' என்று உருவகங்களுக்கு மேல் உருவகங்களாய் அடுக்கிக்கொண்டே போனேன்.

''என்ன, அத்தனை சக்தி வாய்ந்தவர்களா கவிகள்?'' என்றார் என் நண்பர்.

இதைப் பற்றிக் கீழத் தெரு மண்டபத்தில் பேசுவோம். இரவு எட்டு மணிக்கு வாருங்கள் என்றேன்.

''அப்படியே செய்கிறேன்'' என்றார் என் நண்பர்.

நாங்கள் ஏதோ விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே வீடு சேர்ந்தோம்.

இரவு எட்டு மணியிருக்கும். நிலவோ காய்ந்து கொண்டிருந்தது. இதற்குள் என் பாட்டி, என் தாயார் எல்லோரும் வீட்டுக் காரியங்களை முடித்துக் கொண்டு கீழத் தெரு மண்டபத்திற்குப் போய் விட்டனர். மண்டபம் நிறைந்து விட்டது. தெருவிலும் ஜனங்கள் மொய்த்து விட்டனர். இராமாயண சாஸ்திரி இன்னும் வரவில்லை. அவர் வரவை மிக்க ஆவலுடன் ஜனங்கள் எதிர் பார்த்தனர்.

சாஸ்திரியாருக்கு ஒரு தனி ஆசனம் அமைக்கப் பட்டிருந்தது. அவருக்குப் பக்கத்தில் குத்து விளக்கெரிந்தது. ஊதுவர்த்தியின் மணம் எங்கும் பரந்தது. இராம படம் மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. படத்தருகில் தேங்காய், பழங்கள், வெற்றிலை, பாக்கு முதலியவை விளங்கின. இராமாயண சாஸ்திரி சரிகைச் சால்வையைப் போர்த்திக்கொண்டு எட்டரை மணிக்கு வந்தார். மரியாதைக்குச் சற்று எழுந்து நின்றபின், அனைவரும் தம் தம் இடத்தில் அமைதியாய் உட்கார்ந்தனர். தம்புராவை மெல்ல மீட்டினார் சாஸ்திரியார். அந்தப் புனித நாதம் எல்லோர் உள்ளத்திலும் கரந்து மெல்லச் சென்றது. என் நண்பரும் கதை தொடங்கும் தறுவாயில் வந்து சேர்ந்தார். இனிய குரலில் சுலோகத்தைத் தம்புராச் சுருதிக்கிணங்கக் கானம் செய்தார் அவரும்.

ஆனால் என்ன செய்தி? என்றார் என் நண்பர்.

கதையைக் கேளுங்கள்; உண்மை விளங்கும் என்றேன்.

''பஞ்சவடியில் இராமன் சீதாப்பிராட்டி யாரோடு வசிக்கின்றார் என்று நேற்றுச் சொன்னேன். அதோ தெரிகிறது பாருங்கள் ஆசிரமம்; அந்த ஆசிரமத்தை அலங்கரிக்கிற ஒரு தூய மலர்போலச் சீதை அங்கே நிற்கிறாள். அகத்தியர் அந்த இடத்தை எப்படிச் சித்திரித்திருக்கிறார் பார்த்தீர்களா?

ஓங்குமர னேங்கிமலை யோங்கிமண
லோங்கிப்
பூங்குலை குலாவுகுளிர் சோலைபுடைவிம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதொர்
குன்றின்
பாங்குருள தாலுறையுள் பஞ்சவடி மஞ்ச
கன்னியிள வாழைகனி யீவகதிர் வாலின்
செந்நெலுள தேனெழுகு போதுமுள
தெய்வப்
பொன்னியென லாயபுன லாறுமுளபோதா
வன்னமுள பொன்னிவளொ டன்பின்
விளையாட''

என்ற பாடல்களை உணர்ச்சி ததும்பப் பாடினார். கம்பர் கண்ணோடு பாருங்கள்; எத்தனை அழகு நம்முன் விரிகின்றது நோக்குங்கள்.

''அந்த மலைக் கருகில் போய்க்கொண்டிருக்கிறாள் தேவி. அங்கே ஒரு புள்ளி மான் வருகின்றது; சற்றுத் தோன்றுகின்றது; சற்று மறைகின்றது. அதைப் பிடித்துத் தரும்படி வேண்டுகிறாள் அவளும்.

''லக்ஷ்மணா, இந்த மிருகத்தின் மயிர் வரிசைகளைப் பார். இதன் பொன் புள்ளிகளைப் பார். இது வாயைத்திறந்தால் இதன் நாக்கு மேகத்தினின்று வெளி

வரும் மின்னற் கொடிபோல விளங்கு கிறது'' என்ற கருத்தடங்கிய சுலோகத்தை யாழொத்த குரலில் படித்துக் கொண்டே உரையும் செய்தார்.

ஜனங்கள் எங்களூர் நிலாத் துயிலும் மண்டபத்தில் இல்லை. பஞ்சவடிக்குக் கற்பனைச் சிறகு கொண்டு பறந்து விட்டனர்.

'என்ன, மங்களம், பார்த்தாயா?' என்று என் பாட்டி என் தாயாரைக் கேட்டாள்.

இதைத்தான் கம்பநாட்டாரும் பாடுகிறார் என்று,

என்னெக்கு மென்ன லாகு மிளையவ
விதனை நோக்காய்
தன்னெக்கு முவமையல்லாற் றனையொக்கு
முவமை யுண்டோ
பன்னக்க தரள மொக்கும் பசும் புன்மே
படரு மென்னு
மின்னெக்குஞ் செம்பொன் மேனி
வெள்ளியின் விளங்கும் புள்ளி

என்ற பாட்டை இசையுடன் பாடினார்.

கதை மேலே சென்றுகொண்டிருந்தது. வஞ்சமான் மூலம் ஏமாற்றித் தூக்கிச் செல்லுகிறான் சீதையை இராவணன். அவன் மடியில் மின்னல் போலத் துவள்கின்றாள் அத் தெய்வ நங்கை என்ற செய்தியைச் சொன்னதும், ''மங்களம், அந்தப் பாவிக்கு அழிகிற காலம்டி'' என்றாள் என் பாட்டியும்.

எல்லோரும் கண்ணீர் வடித்தனர். சீதைபால் அவர் உள்ளங்கள் விரைந்தன. என் நண்பரைப் பார்த்து என்ன நினைக்கிறீர்கள் என்றேன்.

உண்மை விளங்கிற்று?

எத்தனையோ நாளுக்கு முன் நடந்த விஷயம் எப்படி மனதைத் தொடுகின்றது பாருங்கள்?''

''ஆம் நேரே நிற்கிறதுபோல எல்லாம் தோன்றுகின்றன'' என்றார் என் நண்பர்.

''அதுதான் கவியின் வேலை'' என்றேன். மறுநாட் காலையில் பஞ்சாப் அக்கிரமங்கள் பத்திரிகையில் வந்தன. என் பாட்டிக்குப் படித்துக் காண்பித்தேன்.

அந்தப் பாகவதர் எப்படி வர்ணித்தார் பார்த்தாயா? மங்களம், என்று என் தாயாரிடம் பேசிக்கொண்டிருந்தாள். என் சொல் அவள் செவியில் விழவில்லை. சற்று நேரங் கழித்து வழக்கம் போல் என் நண்பர் வருவதற்குமுன் மலை அடிவாரத்திற்குப் போனேன். அங்கே ஓர் அமானுஷ்ய எழிலைப் போர்த்து விரிந்து கிடந்த இயற்கைக் காட்சிகளின் வனப்பைப் பருகிக்கொண்டிருந்தேன்.

என் நண்பர் அங்குப் பேப்பரும் கையுமாக வந்தார்.

''எத்தனை வைதேகிகளையும் பாஞ்சாலிகளையும் தூக்கிச் செல்லுகிறார்களே. அந்த அநாதைப் பெண்களுக்காக உள்ளம் நைந்தார்களில்லையே'' என்றார்.

''கண்கள் கண்டிராத சீதைக்குக் கண்ணீர் வடித்தவர்களுக்கு உணர்ச்சி இல்லாமலில்லை. அதைத் தட்டி எழுப்பவல்ல ஒரு வால்மீகி இல்லை; ஒரு வியாஸரில்லை.''

''கவிகள் இல்லையே, கவிகள் இல்லையே'' என்று அந்த அருவியும் விரி சோதியில் நாட்டைக் கண்டு நகுவதுபோலச் சிரித்தோடிற்று. நாங்களும் சிந்தையில் ஆழ்ந்து நின்றோம்.

ஜெனரல் கரியப்பா



அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

இரண்டு மாதங்களாக நானும் அம்மாஞ்சியும் அஞ்ஞாத வாசத்தில் இருந்து வருகிறோம். ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டோமே தவிர மூன்றாவது மனிதருடன் பேசவில்லை; கடிதங்கள் எழுதுவதில்லை. கிடைத்த கடிதங்களுக்குப் பதில் எழுதுவதில்லை. காவேரி ஆசிரியர் எங்களுக்கு எழுதிய கடிதங்களுக்கும் பதில் எழுதவில்லை. காரணம் என்னஎன்பீரோ? ஒன்றுமேயில்லை, நாங்கள் இருவரும் ரஸிகர்கள்தான். சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருப்பது எங்களால் ஆகாத காரியம். பிறர்பேச்சைக் கேட்பதிலும் நாங்கள் பேசிப் பிறரைக் கேட்கச்செய்வதிலும் எங்களுக்கு எப்பொழுதும் அதிக ஆசை. எனினும் அஞ்ஞாத வாசத்தில் பற்றுதல் எங்களுக்கு ஏன் ஏற்பட்டது? சொல்லட்டுமா?

டிஸம்பர் மாதத்திலும் ஜனவரி மாதத்திலும் நமது மாகாணத்தில் நடந்த சம்பவங்களாலும், அவைகளைக் குறித்து நிகழ்ந்த சர்ச்சைகளாலும் பலவித பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விஷயங்களாலும் நாங்கள் இருவரும் கலகலத்துப் போய்விட்டோம். குடைபூண்ட இயந்திர ராட்டினத்தில் ஒரு சிறு குழந்தையை உட்காரவைத்து இருபது முறை சுழற்றினபின், அக்குழந்தையை நிற்க வைத்தால் அது என்ன செய்யும்? அதின் கண்கள் சுழலும், உடம்பு தள்ளாடும், வாய் சிறிது திறந்து ஜொள்ளு வழியும், கைகள் சோர்வுறும், கால்கள் ஆடிக் கொண்டிருக்கும். அதுபோலவேதான் நானும் அம்மாஞ்சியும் இரண்டு மாதங்களாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதுவாபூலோகம், இவர்களா மானிடர் என்று சொல்வதுபோல் நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இத்தகைய திகைப்பில் உங்களையும் எதற்காக இழுக்க வேண்டும் என்றுதான் காவேரியில் சென்ற மாதம் ஒன்றும் எழுதாமல் இருந்து விட்டேன். ஆனால் காலைக் கட்டிக் கொண்ட சண்டிக் குழந்தை போல் ஆசிரியர் என்னை விடமாட்டேன் என்கிறார். காவேரிப் பத்திரிகையின் முதலாவது இதழ் வெளி வந்தது முதல் நானும் ஏதாவது கன்னா, பின்னாவென்று எழுதிக் கொண்டிருக்கிறேன். பத்திரிகைக்குத் திருஷ்டிப் பரிகாரமாக என்னுடைய கட்டுரையும் வெளிவந்து கொண்டிருக்கிறது. அதிமேதாவிகள் கூடியிருக்கும் ஒரு கூட்டத்திலும் ஐந்து வாக்குகள் அசட்டு ரஸமாக வீசினால் வாயைத் திறந்து சிரிப்பதற்கு அவகாசம் ஏற்படும் என்பது ஒரு கொள்கை. அதற்காகத் தானோ என்னவோ, அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களும் வெளிவரட்டும் என்று ஆசிரியர் விரும்புகிறார் போலும்.

ஜனவரி மாதம் 2ஆம் தேதி "இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்ற பத்திரிகையில் ஒரே பத்தியில் இரண்டு விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன. முதலாவது என்னவென்றால் நமது கவர்னர் ஜெனரல் ராஜாஜி, பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலுக்கு புதிய வருஷத்தை அனுசரித்து வாழ்த்து வாக்குகள் தந்தி மூலமாக அனுப்பி வைத்தாராம். புதிய வருஷத்தில் நமது மக்களுக்கும் பாகிஸ்தான் மக்களுக்கும் அந்நியோந்நியம் அதிகரிக்கட்டும் என்றும் நிகழ்ந்த காலத்தில் கொடுமைகளெல்லாம் மறந்துபோக வேண்டும் என்றும் வாழ்த்தியதாக விளம்பரம் வந்தது. அடுத்தாற்போல் சென்னை மாகாணத்தில்

அதிகாரிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு கட்டளை இட்டனராம். என்னவென்று? புதிய வருஷம் நமக்கன்று, வெள்ளையர்களுக்கே. நமது புதிய வருஷம் தமிழ்ப் புதிய வருஷமும் தெலுங்குப் புதிய வருஷமுமே. அப்பொழுது மாத்திரமே நமதுமாகாணத்தில் வாழ்த்து வாக்குகள் அனுப்பக்கூடும். ஜனவரி மாதம் முதல் தேதியன்று வாழ்த்து வாக்குகளை அனுப்பிவைப்பது அஸம்பாவிதம் என்றனராம். இதைப் படித்தபின் நானும் அம்மாஞ்சியும் ஒருவரை யொருவர் பார்த்துத் தலைகளை ஆட்டினோம். அம்மாஞ்சி சொல்லுகிருன்:- "ஆபதோத்தாரண சாஸ்திரியார் என்பவர் சித்திரை மாதம் முதல் தேதியன்று தமது சம்பந்தியான வேங்கட நாராயண சோமயாஜுலுக்குப் புதுவருஷத்திய வாழ்த்து அனுப்பினுர் என்று வைத்துக்கொள்வோம். (ஆபதோத்தாரணர் தமிழர். அவருடைய அருமை மகன் எக்கச்சக்கமாக, தெலுங்கு தேசத்தில் சோமயாஜுலுவினுடைய மகளைக் கலியாணம் கட்டிக்கொண்டுவிட்டார்.) வேங்கட நாராயண சோமயாஜுலுவோ அந்த வாழ்த்து இதழை மேஜையின் மேல் வைத்து மூடிவிட்டார். ஏன் என்ருல் அதற்குப் பதில் தம்முடைய வருஷப் பிறப்பான யுகாதி பண்டிகையன்றுதான் பிரதி உத்தரம் அனுப்ப வேண்டும் என்கிற கொள்கை. இந்தச் சங்கடத்தில் இரண்டு குடும்பத்தினருக்கும் அபரிமிதமான மனஸ்தாபங்கள் ஏற்பட்டுவிடும். இதனிடையில் சோமயாஜுலுவினுடைய மகன் ஹைதராபாதில் ஒரு முகம்மதியப் பெண்ணை மணம் செய்துகொண்டுவிட்டார். அந்தப் பெண்ணின் தகப்பனுர் தமிழ் வருஷப் பிறப்பு, யுகாதி பண்டிகை இரண்டையும் அனுஷ்டிக்காமல் இட்முபாரக் என்பதைக் கைப்பற்றிச் சும்மாவிருந்துவிட்டார். மனஸ்தாபத்தில் மூன்ருவது குடும்பமும் சேர்ந்துகொண்டது. ஒருவருக்கொருவர் கடிதங்கள் எழுதும்பொழுது மாத்திரம் 1—1—1949 என்றும் 8—3—1949 என்றும் தேதிகள் போட்டு வழங்குவதில் குறைவில்லை. இங்கிலீஷ் மாதம் முதல் தேதியன்று ஒவ்வொரு குடும்பத்தினரும் தீவிரமாகச் சம்பளப் பட்டியை அங்கீகரிப்பதிலும் குறைவே கிடையாது. வருஷம் அந்தி என்பதும் வருஷப்பிறப்பு என்பது காலப் பிரமாணத்துக்கு ஏற்பட்டதே அன்றி வேறொன்றுமில்லை. பிரிவினைகளை அதிகப் படுத்தக் கூடாது என்பதாகக் கருத்து இருக்கும்போது பல வகுப்பினர் அந்நியோந்நியத்துடன் வாழ்ந்து சந்தோஷப்பட வேண்டிய நமது நாட்டில் மேற் கூறிய சிறிய விஷயத்திலேயே அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் நாம் கடைத்தேறுவது எப்படி? இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு முதல் தாரத்தை இழந்த ஒருவன், இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு முதல் புருஷனை யிழந்த ஒருத்தியை, மணம் செய்து, அவள் மூலம் மற்றும் இரண்டு குழந்தைகளை ஈன்றெடுத்த பின், "உன் குழந்தைகளும் என் குழந்தைகளும் நம்முடைய குழந்தைகளுடன் சண்டையிடுகிருர்களே, அதற்கென்ன விமோசனம்" என்று கேட்டானும். அது போல்தான் இருக்கும் நமது கதி.

அபிப்பிராய பேதங்களுக்கும் சாஸ்திர சம்பிரதாய கலா அபிவிருத்தியில் ஈடுபட்ட மக்களில் ஏற்படும் சர்ச்சைகளுக்கும், நூதன இயக்கங்களுக்கும், அவைகளால் விளையும் களையவாரங்களுக்கும் நமது மாகாணத்தில் எல்லையே கிடையாது. நமது மாகாணத்தை விட்டு வெகு வருஷங்கள் வெளி மாகாணங்களில் உத்யோகம் செய்து, சமீபமாகத் திரும்பவும் நமது மாகாணத்துக்கு வந்து, டிஸம்பர் மாதத்தில், சென்னைப் பட்டணத்தில் நடக்கும் விழாக்களைக் கண்டு களிக்க வேண்டிச் சென்றிருந்த ஒரு ரஸிகர், பதினைந்து நாட்களில் தமது பொறிகலங்கிப் போனதாகவும் தாம் அனுபவித்த கஷ்டங்கள் பல என்றும் முறையிட்டார். சங்கீத விழாக்களென்ன, நாட்டியக் கச்சேரிகளென்ன, கண்காட்சிச் சாலையென்ன, இவைகளின் இடைகளில் டீ பார்ட்டிகளும் டின்னர்களும் என்ன! நண்பர் திரும்பி வந்த போது ஒரு காதில் ஒரு கேள்விக் கருவி, கண்களில் புதிய கண்ணுடி, வாயில் புதிய பல் வரிசை, வயிற்றுக்குப் பிளாஸ்திரி இவைகளுடன் திரும்பி வந்தார். அவர் முறையிட்ட மாதிரியே எழுதுகிறேன் கேளுங்கள்.

ஏழு தலைமுறைகளுக்கும் போதும் ஸ்வாமி நான் பட்ட சங்கடம். என்னு

டைய நண்பர்கள் ஆவேசம் பூண்ட பூசாரிகள்போல் நடந்து கொண்டனர். ஒரு நாளில் ஒரு கச்சேரி கேட்போம் என்று எண்ணங் கொண்ட என்னை நான்கு கச்சேரிகளுக்கு இழுத்துச் சென்றனர். சுத்த கர்நாடக சங்கீதம் அரைமணி நேரம், வட இந்திய சங்கீதம் கால்மணி நேரம், போதும் போதும் இந்த மாட்டு வண்டிச் சங்கீதத்தை இன்னும் எத்தனை நேரம் கேட்பது என்பவர் ஒருவர். தமிழிசைக்கு இழுத்துச் சென்றவர் மற்றொருவர்; அங்கிருந்து நாட்டியக் கச்சேரிக்குப் போகலாமென்று குண்டுக்கட்டாகக் கட்டியும் தூக்கப்பட்டேன். நெல்லிக் காய்களும் எள்ளுருண்டைகளும் பிஞ்சில் பழுத்து வெம்பிப்போன சிசுக்களும் அபாரமான பதங்களைப் பிடித்து, தையல் மெஷினில் ஆடும் ஊசியைப் போல் ஆடிக்கொண்டிருக்கும் காட்சியைக் காணவேண்டியிருந்தது. இதையும் அனுபவித்தேன். கடைசியாகக் கண் காட்சிச்சாலையையும் கண்டுவிட்டுத்தான் போகவேண்டும் என்று என் தலையில் எழுதியிருந்தது. கண்களுக்கும் காட்சியா? எங்கே பார்த்தாலும் வளையல்கள், ரிப்பன்கள், சோப்புகள், கூந்தல் தைலங்கள், மரத்தால் செய்த பொம்மைகள், இவைகளைத்தவிர வேறொன்றும் காணவில்லை. ஐஸ்கிரீம் சாப்பிடுவதும் ஒரு நாகரிக சம்பிரதாயமாகக் காணப்பட்டது. அதனல் விளைந்த தீங்குதான் என்னுடைய பற்களைப் பறிகொடுத்தது. கடைசியாக டீபார்டிகளிலும் என் வயிற்றைக் கெடுத்துக் கொண்டு நான் படும் அவஸ்தை இந்த வருஷம் முழுதும் என்னைப் பிடிக்கும்போல் இருக்கிறது.

இத்தனை வித இயக்கங்களில் ஈடுபட்ட பிரமுகர்கள் ஒருவரையொருவர் பழிக்காமல் இருப்பார்களா? அதுவும் கிடையாது. வடஇந்திய சங்கீத வித்வான்களைச் சங்கீத வித்வத் சபை 22ஆவது மகா நாட்டில் ஆதரித்ததற்காக வித்வத் சபையை எவ்வளவு பழித்தனர். அவர்களெல்லாம் இங்கு வருவானேன், தேசிய சங்கீதத்தில் நமக்கென்ன பற்றுதல், கிழவர்களில் வித்வான்கள் அநேகர் நம்மிடையில் இருக்க, தொண்டு கிழங்களாக வட இந்தியாவிலிருந்து எதற்காக வரவழைக்க வேண்டும், என்றெல்லாம் கேள்விகள் கேட்கப்பட்டன. கர்நாடக சங்கீதத்துக்கும் தேசிய சங்கீதத்துக்கும் அடிப்படையான சம்பிரதாயங்கள் ஒன்றே என்று அங்கீகரிக்காத ஆட்களுடன் சம்வாதம் செய்து என்ன லாபம்? அது மாத்திரமல்ல. இன்னும் ஒரு கேள்வி. தேசிய சங்கீதத்தில் ஈடு பட்ட வித்வான்கள் தொண்டு கிழங்களானுலும் ச்ருதி, சாதகம், சம்பிரதாயம் என்பதைச் சற்றேனும் வழுவாமல் மூன்று அல்லது நாலு மணி நேரம் கச்சேரி செய்கிருர்கள். கர்நாடக சங்கீதத்தின் தௌர்ப்பாக்கியமோ, ச்ருதி லயத்தில் பற்றுதல் இல்லாததாலோ அல்லது சாதகக் குறைவினுலோ, அல்லது யோகாப்பியாச முறையில் தேகத்தைப் போஷிக்காததினுலோ, கர்நாடக சங்கீத வித்வான்களில் பலர் வயோதிகர்கள் ஆனவுடன் கச்சேரிகள் செய்யத் தகுந்த சக்தியை இழந்து விடுகிருர்கள். அவர்கள் பயிற்சி செய்விக்கும் யோக்யதையுடன் இருந்து வருகிருர்களே யொழிய, சம்பிரதாய மார்க்கத்தில் இரண்டு மூன்று மணி நேரம் தாக்குப் பிடித்து ரம்யமாகக் கச்சேரி செய்யும் சக்தியற்றவர்களாகிருர்கள். கர்நாடக சங்கீதம் பெரும்பாலும் "Chamber music" என்பதற்கு லாயக்கான விஷயம். சங்கீதத்தைப் பயிற்சி செய்தவர்கள் அனைவரும் கச்சேரி யோக்யதையுடன் தான் இருக்க வேண்டுமா? இந்தக் கேள்விக்கு நியாயமான பதில் ஏற்பட்டால் தக்ஷிணுதி சங்கீத கலா அபிவிருத்தி மேன்மைப்படும். பேசும் திறமையுள்ளவர்களில் இரண்டு வகை இல்லையா? சிலர் பத்துப் பேரை வைத்துக் கொண்டு சாமர்த்தியமாகப் பேசி, தம்முடைய அபிப்பிராயங்களை வற்புறுத்தத் தகுந்த யோக்யதையுள்ளவர்களாயிருக்கிருர்கள். மற்றும் சிலர் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்து கர கோஷம் பெறத் தகுந்தவர்களாயிருக்கின்றனர். அது போலவே சங்கீதத்திலும் உண்டு. சங்கீதத்தில் முதல் ரகம் ஆட்கள் தான் அதிகம். கலைவிருத்திக்கு அவர்களே தேவை. கச்சேரி செய்யத் தகுந்தவர்கள் கேவலம் (பெரும்பாலும்) டாம்பீகர்களாகவே ஆவார்கள், ரஸானுபவம் என்பது நூற்

றுக்கு நூறு முதல் பாகத்திலே தான். அதினால் தான் நானும் அம்மாஞ்சியும் கச்சேரிகள் கேட்பதை விட்டுவிட்டோம். அனுபவசாலிகளில் அநேகர் எங்களுடைய தன்மையுள்ளவர்களே என்று திண்ணமாகச் சொல்லலாம்.

அகில இந்திய ரேடியோ ஸ்தாபனங்களில் திருச்சிராப்பள்ளியில் இருந்து மாலே வேளைகளில் ஒலிபரப்பும் நிகழ்ச்சிகளைப் பற்றி நிந்தனையாகச் சமீபத்தில் பிரசுரித்ததை நீங்கள் படித்திருக்கலாம். நிகழ்ச்சிகளில் வழங்கப்படும் பாஷை கொச்சைப் பாஷை என்றும் சுத்தத் தமிழ் அல்ல வென்றும் அத்தகைய கொச்சைப் பாஷையினால் நாட்டுப்புறத்திலுள்ள ஜனங்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுவிட்டதாகவும் வதந்தி. கிராமியமாக ஒரு அரை மணி நேரம் நிகழ்ச்சிகளை நடத்தியதால் பாஷைக்கு அகௌரவம் என்பதோ அல்லது கிராமவாசிகளுக்கு இகழ்ச்சி என்பதோ எப்படி ஏற்பட்டுவிட்டது என்பது எனக்கு விளங்கவில்லை. சில வருஷங்களாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் புத்தகங்கள் அனைத்துக்கும் செல்வாக் கேற்பட்டது எதனால் என்றால் அவைகள் எழுதப்பட்டுள்ள எளியநடையினால்தான். அதுபோலவே ஒவ்வொரு தினத்திலும் சில நிமிஷங்களுக்குக் கிராமிய நடையில் நிகழ்ச்சியை நடத்துவதால் விஷயங்களை கிரஹிக்கத்தகுந்த வசதி அதிகரிக்கிறதே ஒழிய அதனால் பாஷையின் கௌரவம் குறைந்துவிடும் என்று சொல்வது அங்கீகரிக்கத் தகாத நிந்தனை. ஒவ்வொரு பாஷையிலும் இத்தகைய அம்சம் உண்டு. B. B. C. ரேடியோவைக் கவனியுங்கள்; அதுபோலவே New York ரேடியோவையும் கவனியுங்கள். ஆங்கிலத்தில் கொச்சையான கிராமிய நடையில் பலவித நிகழ்ச்சிகள் நடைபெறுவதைக் கேட்கலாம். கேவலம் செய்திகளை இந்த நடையில் வெளிப்படுத்துவதில்லை என்று ஒப்புக்கொள்வோம். அது எதனால் என்றால் செய்திகளைக் கேட்டுக் கிரஹித்துப் பயன் படும் மக்கள் மேல் நாட்டில் 90 சதம் உண்டு; அவர்கள் அனைவரும் வாக்காளர்கள்; பிரபுத்துவத்தில் நடக்கும் விஷயங்களைப் பத்திரிகைகளிலும் பிரசங்கங்களிலும் படித்தும்கேட்டும் தங்களுடைய மனோபாவங்களைப் பூர்த்திசெய்யத்தகுந்த தன்மையுள்ளவர்கள். நம் தேசத்திலோ வாக்காளர்களில்பெரும்பாலார் எழுதவும் படிக்கவும் தெரியாதவர்கள். மறுமலர்ச்சித் தமிழில் அவர்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொன்னால் கிரஹிக்கத் தகாதவர்கள். ஆகவே அவர்கள் செவிக்கு ஊட்டும்போது, அவர்களுக்கு வழக்கமான நடையில் பேசுவது தவறுதலா? இரண்டு வயதுள்ள ஒரு குழந்தையைப் பார்த்து, “உன் தாயைக் கேட்டுச் சிற்றுண்டி ஏதேனும் வாங்கிப் புசித்துவிட்டு வா” என்று சொன்னால் அது என்ன செய்யும்? பேந்தப்பேந்த முழிக்கும். அதற்குப் பதிலாக, “அம்பி, அம்மாகிட்ட போய், அப்பிச்சி கொடுக்கச் சொல்லி, வாங்கி மாம்மு சாப்புட்டுட்டு வா” என்றால் குழந்தை துள்ளிக் கொண்டுபோய் “அப்பிச்சி மாம்மு, அப்பிச்சி மாம்மு” என்று சந்தோஷமாகக் கேட்குமல்லவா?

சென்ற மாதத்தில் ஒரு நாள் பத்திரிகை ஒன்றில் மேன்மை வாய்ந்த உத்யோகஸ்தர் ஒருவர் கவர்ன்மெண்ட் சிப்பந்திகளுக்குச் செய்த உபன்னியாசத்தைப்பற்றி விமரிசனப் படுத்தியிருந்தது. அவர் சொன்னதில் ஒன்றாவது “கவர்ன்மெண்ட் சிப்பந்தி ஒருவராவது ஆபீஸில் குறிப்பிட்டிருந்த மணிக்குமேல் உட்கார்ந்திருக்கக் கூடாது. ஒவ்வொரு சிப்பந்திக்கும் வருஷம் ஒன்றுக்கு ஒரு மாதம் வீதம் வலுக்கட்டாயமாகச் செலவு(விடுமுறை) கொடுக்கப்படவேண்டும். அந்தச் செலவில் அவர்களுக்கு இந்தியா முழுதும் சுற்றிப்பார்க்கும்படியாகக் கட்டணமற்ற ரயில்வே டிக்கட் கொடுக்கப்படவேண்டும். அப்படி நடந்தால் கவர்ன்மெண்ட் சிப்பந்திகள் அனைவரும் வெகு சுறுசுறுப்பான ஆட்களாகக் காணப்படுவார்கள்” இதைப் படித்து, நிஜமாகவா என்கிறான் அம்மாஞ்சி. குறிப்பிட்டிருக்கும் நேரத்திற்குமேல் ஆபீஸில் உட்கார்ந்திருக்கக் கூடாது என்ற நிபந்தனை மாத்திரம் போதுமா? குறிப்பிட்டிருக்கும் நேரத்தைக் கடந்துவரலாகாது என்று சொல்லவில்லையே. “கவர்ன்மெண்டு சிப்பந்திகளுக்கு மாத்திரமா இந்தச் செல்வாக்கு” என்று கேட்கிறான், “இதர ஆபீஸ்களில் வேலை செய்யும் சிப்பந்திகளைக் குறித்து

ஒருவரும் அநுதாபப் படவில்லையே'' என்றும் கேட்கிறான். "ஐயோ, கட்டண மில்லாத டிக்கட்டா'' என்றும் கேட்கிறான். "பொது ஜனங்கள் ரயில் பிரயாணத்தில் படும் அவஸ்தைக்கு இந்தக் கஷ்டமும் சேரவேண்டுமா'' என்றும் கேட்கிறான். பிள்ளையில்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாட வேண்டுமா? "அடுத்த வீட்டுப் பிராமணரே, பாம்பைப் பிடியும். அல்லித் தண்டுபோலிருக்கும்'' என்று பிரபுத்துவத்திற்கு உபதேசம் செய்பவர் அநேகரை நாம் காணலாம்.

டிஸம்பர் மாதம் 24ஆம் தேதியன்று பத்திரிகையில் ஒரு எச்சரிக்கை நான் படித்தேன். அதாவது சினிமா படங்களில் ஹிந்து தெய்வங்கள், தேவதைகள் இவர்களைக் குறித்துப் படங்கள் எடுப்பதால் அவர்களிடம் பொதுஜனங்களுக்குஉள்ள மதிப்பும் பக்தியும் குறைந்து விடுவதாகவும் இனி புராண சம்பந்தமான படங்கள் எடுக்கப்படலாகாது என்றும் சர்க்கார் அபிப்பிராயப்படுவதாக அறிந்தோம். புராண சம்பந்தமாக எடுக்கப்படும் படங்களால் ஜனங்களுக்குத் தேவதா விசுவாசம் குன்றி விடுகிறதா என்பதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லத் தயாராயில்லை. ஆனால் புராண சம்பந்தமான பேசும் படங்கள் பிடிக்கப்படலாகாது என்று சொல்லி விட்டால் வெகு திருப்திகரமான சம்பிரதாயம் ஏற்படும் என்று அம்மாஞ்சியும் நானும் அபிப்பிராயப்படுகிறோம். தெய்வங்களும் தேவதைகளும் தற்காலத்து மறுமலர்ச்சித்தமிழில் பேசுவதும் சங்கடமான சங்கீத முறையில் பாடுவதும் எவ்வளவு அசம்பாவிதமாக இருக்கின்றது என்று சொல்ல முடியாது. எவ்வளவு சீக்கிரம் இந்தக் கஷ்டம் நிவாரணமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு மேன்மை.

1949-ஆம் ஆண்டு

உங்களுக்கு வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றைய தினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிடலாமே! இன்றே ஒரு கார்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப்போகும் லாபம், நஷ்டம், எந்த வியாபாரத்தின் மூலம் எந்தவிதமாக ஏற்படப்போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம்எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேறுவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாகப் பலன் குறித்து ரூ. 1—4—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

★

தபால் செலவு தனி.

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

Shree
Swami Yogiraj Jyotish Asram,
C. K. PHAGWARA. (Kapurthala State)

க்ருதி மணிமாலை

(தியாகராஜ நூற்றாண்டு நினைவு நூல்)

நான்கு பாகங்கள்

ஆசிரியர்: **R. ரங்கராமானுஜ ஐயங்கார்**
சபர்மதி, ஸேட்காலனி,
எழும்பூர், மதராஸ்.

மேற்கூறிய புத்தகங்களைப் பிரசுரித்த ஆசிரியரான ஸ்ரீ R. ரங்கராமானுஜ அய்யங்கார் சங்கீத அபிமானிகள் பெரும்பாலாருக்கும் பரிச்சயம்உள்ளவராயிருப்பார். பல பத்திரிகைகளில் சில வருஷங்களாகச் சங்கீதத்தைக் குறித்து, கட்டுரைகள் எழுதியவர்; ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களின் கீர்த்தன மாலை என்ற புத்தகத்தை 1934-ல் பிரசுரப்படுத்தினார்; பிறகு 1941-ல் ஸ்ரீமதி லலிதாங்கியினுடைய "புரந்தர மணிமாலை" என்ற புத்தகத்தையும் வெளிப்படுத்தினார்.

அநேக வருஷங்களாகப் பிரபல சங்கீத வித்வான்களுடைய சம்பிரதாயங்களை அறிந்தவராகவும், சுமார் 12 வருஷங்கள் காலஞ்சென்ற வீணை தனம் அம்மாளிடம் சங்கீத அப்பியாசத்தைச் செய்தவராகவும், நாம் அறிந்த ஐயங்கார் அவர்கள், வீணை வாத்யத்தைச் சம்பிரதாயத்துடனும் வெகு அழகாகவும் வாசிக்கும் வைணிக வித்வான்,

மேற்கூறிய "க்ருதி மணிமாலை" என்கிற புத்தகத்தை ஸ்ரீ த்யாகராஜ நூற்றாண்டு நினைவு நூலாக வெளிப்படுத்திய பெருமையை ஐயங்கார் அவர்கள் ஒருவருக்கே செலுத்த வேண்டும். இத்தகைய நூலைச் சாதாரணமாக பிரசுரிப்பது என்றால் பலபேருடைய உதவியும் வேண்டிவரும்; ஏராளமான பணத்தொகையும் செலுத்த வேண்டிவரும். ஒன்றுமேயில்லாமல் இந்தப் பெரிய காரியத்தை எடுத்துப்பூர்த்திசெய்தபெருமையைச் சங்கீத அபிமானிகள் ஒரே ஒருவிதமாகத்தான் பாராட்ட முடியும். எப்படியென்றால் புத்தகங்கள் வெளிவந்தவுடன் அவைகளை வாங்கி, தத்தம் உபயோகங்களுக்கோ அல்லது சங்கீதப் பயிற்சியில் ஈடுபட்ட இளம் வித்வான்களுக்கும் வித்வாம்சிகளுக்கும் பரிசுகளாக அளிக்கவோ செய்யவேண்டும்.

ஆனால் நடந்த விஷயம் எப்படி? இப்புத்தகங்களின் முதல் பாகப் பிரதிகள் பூராக விலையாய் விட்டன; அப் பாகத்தின் விலை ரூ. 6-8-0, இரண்டாவது பாகம் ரூ. 9—8—0, மூன்றாவது பாகம் ரூ. 9—8—0, நான்காவது பாகம் ரூ. 10—0—0. இவைகள் இன்னும் விலையாகவில்லை. அவைகளுக்காகச் செலவழித்த பணத்தை இன்னும் ஆசிரியர் மீட்கவில்லை. சங்கீத அபிமானிகளுக்கோ நமது மாகாணத்தில் குறைவே கிடையாது. சங்கீதத்துக்காகப் பலவித மார்க்கங்களில் பணத்தை வீசும் ஆட்களுக்கும் குறைவே கிடையாது. ஆனால் சம்பிரதாய சங்கீதத்தில் ஈடுபட்டுப் பகீரதப் பிரயத்தனத்தைக் கைப்பற்றி ஈடேற்றியஒரு ஆசிரியரை உற்சாகப்படுத்தவோ கௌரவப் படுத்தவோ பொதுமக்களைக் காணவில்லை.

புத்தகங்கள் எப்படிப் பட்டவை என்பீரோ முதல் மூன்று பாகங்களில் ஸ்ரீ த்யாகய்யர்வாளுடைய உருப்படிகள் நானூறு அடங்கியுள்ளன. நான்காவது பாகத்தில் தீக்ஷிதர், சாமா சாஸ்திரியார், க்ஷேத்ரக்ஞர் இவர்களுடைய உருப்படிகள் 150 அடங்கியுள்ளன. உருப்படிகளில் அநேகம் சாதாரணமாகப் பிரசாரத்தில் இல்லாதவைகளாகவும் இருக்கின்றன. சுமார் 35 வருஷங்களாக நான் கர்நாடக சங்கீதத்தைக் கேட்டு வருகிறேன். நான் சிறியவனாக இருந்தபோது ஒரு சில பிரபல வித்வான்களிடத்தில் சிக்ஷையும் சொல்லிக்கொண்டேன். முப்பது வருஷங்களுக்குமுன் பிரசாரத்தில் இருந்த உருப்படிகள், எனக்குத் தெரிந்தவை, பல இப்பொழுது பாடக் கேட்பதே அரிதாயிருக்கிறது. எனினும் க்ருதி மணிமாலையில் நான் கேட்டிராத அநேக உருப்படிகளைப் பார்வையிட்டேன். அக்ஷரங்கள் தெலுங்கிலும் தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. க்ஷேத்ரக்ஞருடைய பதங்களை ஸ்வரப்படுத்தி, "Notation" சகிதமாக இதுவரை வெளிப்படுத்தியதாக அறியவில்லை, செவ்வனே பதங்களைப் பாடும் திறமையில் ஸ்ரீமதி தனம்மாள் ஒருவரே வரனெடுத்து விளங்கினார். அவருடைய சம்பிரதாயத்தில் அப்பியாசம் செய்த ஸ்ரீரங்கராமானுஜயங்கார், இந்த நூலை வெளிப்படுத்துவதற்குத் தகுந்த யோக்யதை உள்ளவர். ஆகவே இந்தப் புத்தகங்களைக் குறித்தோ, இவர்களுடைய பெருமையைக் குறித்தோ, அதிகமாக எழுதமுடியாது. எவ்வளவு சொன்னாலும் பொருந்தும்.

சங்கீத அபிமானிகள் அனைவரும் இப்புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் படித்து அனுபவித்து ஆசிரியரைக் கௌரவப்படுத்துவது கலா அபிவிருத்திக்காகச் செய்யும் சடங்கில் ஒரு சிறிய பாகமே யாகும்.

திருச்சிராப்பள்ளி. கடாம்பி ராமசுப்பன்.

நடிகையின் துறவு

'சிவநந்தி'

1

பாண்டிய நாட்டின் பழம் பெரும் நகரமாக விளங்கிய கொற்கைக்கு ஒரு நாள் சென்றிருந்தேன். இன்று அது ஒரு குக்கிராமம். மாடமாளிகைகள், கூடகோபுரங்களுடன் விளங்கிய அக்கொற்கை இன்று அப்பெருமைக்கு அடையாளமான சுவடு எதுவும் இல்லாமல் குடிசை வீடுகள் நிறைந்த பட்டியாக இருக்கிறது. உலகத்தின் பல பாகங்களுக்கு முத்துக்களையும் நவரத்தினங்களையும் வாரி வழங்கும் களஞ்சியமாக இருந்த அந்நகரம் இன்று வறுமை உழலும் இடமாகக் காட்சி கொடுக்கிறது. புத்த பெருமானது கொள்கைகளை ஆசியா நாடுகளுக்கெல்லாம் பரப்பிவந்த ஜீவஸ்தானமாக விளங்கிய அந்நகரம் இன்று பூகோளபடத்தில் பெயர் பெருத ஊராகி விட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாகப் புத்தர் பெருமானின் இரண்டு சிலைகள் மட்டும் பழஞ்சின்னங்களாக உள்ளன. பழங்காலத்துக் கொற்கையின் மாண்புகளை அச்சிலைகள் மட்டும் சொல்லக் கூடுமானல் ஆராய்ச்சிக்காரர்களுக்கு நல்ல உதவியாக இருக்கும். ஆயிரக்கணக்கான மக்களால் வணங்கப்பட்ட அச்சிலைகள் இன்று கவனிப்பாரற்று மழை, பனி, காற்று, வெயில் முதலிய பல சிதோஷ்ணங்களையும் அமைதியாக அனுபவிக்கின்றன. அஹிம்சா மூர்த்திக்கு எல்லாம் ஒன்று தானே!

கொற்கையில் அந்நாளிலே ஹாஸ்யம், சோகம், இன்பம் முதலிய பல ரஸங்கள் நிறைந்த சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. கர்ண பரம்பரையாகக் கூறப்படும் காதல் கதைகளில் ஒன்று கற்பனை உலகத்திலிருந்து ஆராய்ந்து இங்கே புது மெருகேற்றித் தரப்பட்டிருக்கிறது,

2

கோவலன் மனைவி கண்ணகியின் கோபத்தால் நெடுஞ்செழியன் இறந்தான். அவன் மனைவி கோப்பெருந்தேவி உடன் கட்டையேறிச் சதியானள். அதற்கப்புறம் வெற்றிவேற் செழியன் அரசனுனன். அவன் மனதில் அமைதியேற்படாததால், எரிந்து சாம்பராய்ப்போன மதுரைமீது வெறுப்படைந்து தன் தலை நகரைக் கொற்கைக்கு மாற்றிக் கொண்டான். அவன் வந்ததிலிருந்து கொற்கை சீருஞ்சிறப்பும் மலியப் பெற்று ஒப்பற்ற நகரமாக விளங்கியது.

வெற்றிவேற் செழியனுக்குப் பிறகு அவனுடைய இரு குமாரர்களில் இளையவனுன செயதுங்கபாண்டியன் கொற்கையையும் அருகிலுள்ள பெரும் பகுதியையும் பாகம் போட்டு எடுத்துக் கொண்டு தனியரசு செலுத்தி வந்தான். மூத்த குமாரனுன இரண்டாவது நெடுஞ்செழியன் மீண்டும் மதுரைக்குப் போய் முடி சூட்டிக்கொண்டான்.

செயதுங்கபாண்டியன் நல்ல கட்டழகன். இளவயதிலேயே தமிழிலும், பிற கலைகளிலும் வல்லவனுனன். தன் தந்தையைப் போலவே பிற மதத்தினரும் அமைதியாக வாழ்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தான். எனவே புத்த மதம் வெகு வேகமாய்ப் பரவிற்று. பவணந்தி முனிவர் என்ற புத்த சந்நியாசி ஒரு பெரிய மடத்தை நிறுவி, தர்மப் பிரசாரம் செய்து வந்தார். அவருடைய தேஜஸ்ஸையும், அறிவாற்றலையும் கண்டு வியந்த மக்களில் பலர் பௌத்தரானர்கள். சிங்களத்தீவு, பர்மா, சைன முதலிய இடங்களுக்கெல்லாம் பிரசாரகர்களைத் தயார் செய்து அனுப்பிப் புத்த ஜோதியை வளர்த்தார்.

சங்கீதம் என்றுல் செயதுங்கனுக்கு உயிர். பரந்த இசை ஞானத்தோடு பாடும் வன்மையும் பெற்றிருந்தான். சதா பாட்டுத் தான். சாப்பாடு, நித்திரை இரண்டையும் மறந்து கூட இசையில் ஈடுபட்டிருப்பான். ஈயொன்று தேன் வெள்ளத்தில் சிக்கி நகர முடியாமல் தத்தளிப்பதுபோல இவனும் இசைப் பெருக்கில் சிக்கிக் கிடந்தான். அடிக்கடி பிரபல சங்கீத வித்வான்களை வரவழைத்துக் கச்சேரிகள் கேட்பான். குடிகளின் வரிப்பணத்தில் பெரும்பான்மையான பாகத்தைத் தனது இசைத் தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்கே செலவழித்தான்.

ஒரு நாள் கன்யாகுமரியில், அம்மன் சன்னிதியின் முன்பு ஆதிரைச் சிவந்தி என்ற தருண மங்கை தான் கற்றுத் தேர்ந்த பரத நாட்டியத்தை அரங்கேற்றப் போகிருள் என்ற ஒரு செய்தி பரவிற்று. நாஞ்சில் நாட்டிலே புகழ் பெற்ற தாமரைக் கண்ணியின் மகள் நடன மாடப் போகிருள்

என்றால் பார்க்க ஆசைப் படாதவர்கள் தான் யார்? செயதுங்கனால் சும்மா விருக்க முடியுமா? எனவே மாறுவேடம் புனைந்து ஒன்றிரண்டு அந்தரங்க மனிதர்களுடன் சென்று அரங்கேற்றத்தைக் கவனித்தான். என்ன அற்புதமான அழகு! பொன்னிற மான மேனி. வெகு லாகவமாக வளைந்து கொடுக்கும் உடல். ஆளை விழுங்கும் கண்கள். குயிலினும் இனிய குரல். புன்முறுவல் செய்யும்பொழுது அவளைப் பார்க்கிறவர்கள் எப்பேர்ப்பட்ட தவசிகளானாலும் சரி, அப்படியே தம்மை மறந்து பரவசமாகி விடுவார்கள். மனித ஜாதியிலே தவறித் தோன்றிய அமர கன்னிகையா அவள்? இவ்வாறு அனேகர் நினைத்தார்கள். உயர்ந்த பின்னணி சங்கீதம் இனிது முழங்க, இமையாமல் கவனித்துக் கொண்டிருக்கும் சபையிலே ஆதிரைச்சிவந்தி நடனமாடினாள். கலைவெறி பிடித்த செயதுங்கன் உள்ளத்தில் அவள் எத்துணைப் புயலை யெழுப்பி வைத்திருப்பாள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

நடனம் முடிந்தவுடன் செயதுங்கன் வெகு விரைவாகக் கொற்கைக்கு வந்து, தனது சபாமண்டபத்தில் அவளுடைய நடனக் கச்சேரியை நடத்த ஏற்பாடு செய்தான். குறிப்பிட்ட நாளில் அவள் நடனம் நடக்கும் பொழுது செயதுங்கன் தான் ஒரு அரசன் என்பதையும் மறந்து, "ஜாலர்" எடுத்துத் தாளம் போடத் தொடங்கினான். அரசனே எதிரில் வந்து தாளம் தவறாமல் போடுவதைக் கண்டு ஆதிரை பயந்து விட்டாள். இசை ஞானத்தில் வல்லவனாக இருந்தால் தானே இவ்வாறு தாளம் போட முடியும்! அவளுக்குக் கட்டழகனான வாலிப அரசன் மீது மையல் பிறந்தது. அன்றைக் கச்சேரி வெகு ஜோராக முடிந்தது.

செயதுங்கன் அவளைத் தன்னருகிலேயே வைத்துக் கொள்வது என்று நிச்சயித்தான். ஆதிரைச் சிவந்திக்குத் தான் பட்ட மகிஷியாக வேண்டுமென்ற ஆசையிருந்தது. ஆனால் அதற்குச் சாதகமான சூழ்நிலை இல்லையென்று தெரிந்தவுடன் அவனுடைய ஆசைக்கிழத்தியாக இருக்கவும் ஒப்புக் கொண்டாள்.

செயதுங்கனும், ஆதிரைச் சிவந்தியும் இணைபிரியாமல் வாழ்ந்தார்கள். "காதலித்துக் கூடிக் களிப்புடனே வாழ்வதுதான்," வாழ்க்கை லட்சியம் என்று எண்ணினார்கள். சதா ஆடலும் பாடலும் தான்.

ஆதிரைச் சிவந்தி எதைக் கேட்டாலும் இல்லை யென்ற பேச்சே கிடையாது. நேர்த்தியான வைரங்கள் அவளுடையவை; சிவந்த இரத்தினங்கள் அவளுடையவை; உயர்ந்த சுண்டு முத்துக்கள் அவளுடையவைதான். விதவிதமான தங்க நகைகள், மஸ்லின் ஆடைகள், வாசனைத் திரவியங்கள் யாவும் அவளுக்குப்போக மீதியானால் மற்றவருக்கு. எழில் மிகுந்த நந்த வனங்கள் அவள் ஆதிக்கத்தில் இருந்தன. பளிங்குக் கற்களாலாகிய மாளிகையில் தெய்வரம்பைபோல் சுற்றித் திரிந்தாள்.

அரசன் ஆதிரைச் சிவந்தியின் கைப் பொம்மையாகி விட்டான். குடி ஜனங்களின் விண்ணப்பக் குரல்கள் அவன் காதுகளில் விழவில்லை; வெளிநாடுகளில் சுற்றித் திரிந்த ஒற்றர்களின் செய்திகள் அவன் செவிகளில் புக முடியவில்லை. யாழின் இசையும், ஆதிரையின் குரலும்தான் அவன் செவிக்குத் தேனாக இருந்தன. அன்னிய நாட்டு ஸ்தானிகர்களும் மந்திரிகளும் அரசனுடைய பேட்டிக்காகக் காத்துக் கிடந்து காலொடிந்து போனார்கள். இப்படிச் சில வருடங்கள் கழிந்தன.

நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. நாஞ்சில் நாட்டுத் தாசிமய அரசாங்க ஊழல்களுக்குக் காரணம் என்று ஜனங்கள் பழித்தனர். அவன் மந்திரிகளில் ஒருவனே பெரும் படை திரட்டிக் கலகம் செய்தான். நிலைமை கைம் மீறிப் போய்விட்டது. அரண்மனையைக் கலகக்காரர்கள் சூழ்ந்தவுடன் அரசன் சுரங்க வாசல் வழியாக வெளியேறினான். ஆதிரைச் சிவந்தியும் எவ்வாறோ தப்பிப் போய், புத்த மடாலயத்தில் சரண் புகுந்தாள்.

3

கொற்கையின் அரசியல் நிலைமையில் என்ன மாறுதல்கள் நிகழ்ந்தாலும் கடலிடை நிற்கும் பாறைபோலச் சமாளித்துக்கொண்டு புத்த மடாலயம் விளங்கிற்று. பிக்ஷு பவணந்தித்தேவர் மடத்தின் காரியங்களை வெகு வெகு திறமையுடன் நிர்வகித்து வந்தார். பவணந்தி முனிவரிடம் தமிழிலும், வட மொழியிலும் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுக்கொள்ள வந்த புத்திசாலிகளான இளைஞர்களில் பெரும்பான்மையோர் திரிபீடிகையை யேற்றுக்கொண்டு பௌத்தர்கள் ஆனார்கள்.

பவணந்தி அடிகள் நைஷ்டிகப் பிரம்மசாரி. ஆடல் பாடல்களில் கற்றுத் தேர்ந்த நடிகைகளும், பெரிய குடும்பத்தைச் சேர்ந்த ரதிகளும்கூட அவருடைய மன உறுதியைக் கலைக்க முயன்று தோல்வி யடைந்திருக்கிறார்கள். அழகும், கவர்ச்சியும் நிறைந்த முகமும்,

நிமிர்ந்த எடுப்பான சரீரமும், பொன்னிற மேனியும், முத்துக்கள் போன்ற பல் வரிசையும், சிறந்த வாக்கு வன்மையும் அவருடைய வாய்ப்புக்கள். அவருடன் நெருங்கிப் பழகும் எவரும் புத்த சமயத்தில் ஈடுபட்டு விடுவார்கள்.

ஒரு நாள் ஆதிரைச் சிவந்தி பவணந்தி முனிவரின் திருவடிகளில் விழுந்து தனக்குத் தர்மோபதேசம் செய்யும்படி வேண்டிக்கொண்டாள்.

அவர் சொன்னார்: 'சிவந்தி, உலக வாழ்க்கையைச் சதம் என்று எண்ணாதே. உயர்ந்த வைர நகைகளும், பட்டாடைகளும், செல்வமும் உன் ஆத்மாவிற்கு ஏதாவது நன்மை செய்யக் கூடுமா? எந்த அழகும் இளமையும், உனக்குக் கர்வத்தை ஊட்டுகின்றனவோ, அவை முக்தி நிலைக்கு உன்னை அழைத்துச் செல்லுமா? ஆடல் பாடல்களால் மனிதர்களின் கருத்தை மயக்கிக் கொண்டிருந்த நீ இறைவனது அருளைக் கவர ஏதாவது முயற்சி செய்ததுண்டா? சிவந்தி, சத்வகுண போதனை புத்த பெருமானின் உபதேசங்களைப் பிழையறக் கடைப்பிடித்து ஒழுகுகிறவர்களே நிர்வாண நிலைக்கு அருகதை உடையவர்கள். அன்பு நெறியை ஏற்றுக் கொண்டு, அஹிம்சாமார்க்கத்தில் பிரவேசிப்பதே நல்லது. யோசித்து முடிவு செய்?'

சிவந்தி மீண்டும் அவர் திருவடிகளில் விழுந்து வணங்கிச் சொன்னாள்; 'சுவாமி? அடியேன் எனது இழி நிலையை உணர்ந்துவிட்டேன். கடைத்தேற வேண்டும் என்ற உணர்ச்சி என்னை அரித்துக் கொண்டிருக்கிறது. புத்த சங்கத்தில் ஏற்றுக் கொள்ளுங்கள். துறவு நெறியை அருளுங்கள்?'

பவணந்தி முனிவர் அவளுக்கு உடனேயே துறவு நெறியை அருள வில்லை. பௌத்த சமயக் கொள்கைகளில் அவள் மனதை நன்றாக ஈடுபடச் செய்த பின்னரே அவளைத் துறவியாக்கினார்.

கடலின் திரைகள் போல் சுருண்டு, கரிய மேகத்தைப்போல் நிறமுள்ள நீண்ட கூந்தல் சிவந்தியின் தலையினின்றும் அப்புறப்படுத்தப்பட்டது. அவள் அணிந்திருந்த பொன்னாபரணங்கள் தடங்களைப் பதியவைத்து விட்டு மறைந்தன. உயர்ந்த மென்மையான பட்டாடைகள் சுற்றியிருந்த உடலின் மீது கனத்த காவித்துணி வளைந்து கொண்டது. பொற்பாத்திரங்களில் பழகிய கைகள் பித்தளைக் கமண்டலத்தையும் மண்ணாலாகிய திருவோட்டையும் தாங்கலாயின. ஜல் ஜல் என்ற ஒலியோடு ஒய்யாரமாக நடை போட்டு விரைவில் அங்கும் இங்குமாகத் திரிந்த பாதங்கள் மெதுவாகவும், நிதானமாகவும் சஞ்சரித்தன. கலாப மயில்போல் ஆடித்திருந்த ஒரு சௌந்தர்யவதி இன்று அடங்கி ஒடுங்கி, தியானத்தில் அமர்ந்திருக்கும் யோகினியானாள்.

இவ்வாறு மூன்று வருஷங்ள் கழிந்தன. செயதுங்க பாண்டியன் ஒரு பெரும் படை திரட்டி வந்து மீண்டும் கொற்கையைக் கைப்பற்றிக் கொண்டான். ஆதிரைச்சிவந்தியின் மீது அவனுக்கிருந்த ஆசையே அவனுடைய கொற்கையின் மீட்சிக்குக் காரணமாக இருந்தது.

செயதுங்கன் வெகு விரைவாகப் பிக்ஷு மடாலயத்திற்குள் நுழைந்தான். 'சிவந்தி சிவந்தி,' என்று உரக்கக் கத்தினான். ஒரு பதிலும் இல்லை. அங்கிருந்த பிக்ஷுகளும் பிக்ஷுணிகளும் வாய் திறக்க வில்லை. கம்பீரமாக எதில் நின்று கொண்டிருந்த பவணந்தி முனிவரைப்பார்த்து, 'அடிகளே, அவள் எங்கே? என்று கேட்டான்.

முனிவர் வெகு நிதானமாக, 'அரசனே யாரைத் தேடுகின்றாய்?' என்றார்.

அரசனுக்குக் கோபம் வந்து விட்டது. 'யாரை என்றா கேட்கிறீர்? ஆதிரைச் சிவந்தி என்று முழுப் பெயரையும் உம்மிடம்சொல்ல வேண்டுமா?' என்றான் வாளை உருவிக் கொண்டு.

பவணந்தி முனிவர் சற்றும் அசையவில்லை. 'அரசனே, மரணத்திற்குப் பயப்படுகிறவர்கள் இந்த மடாலயத்தில் கிடையாது?' என்றார்.

அரசன் பல்லைக் கடித்துக்கொண்டு கேட்டான்: 'ஆனால் அழகிகளை அடைத்து வைப்பதுமட்டும் இங்கு உண்டோ?'

பவணந்தி முனிவர் இச் சொற்களைப் பொறுக்க முடியாமல், செவிகளைப் பொத்திக் கொண்டே, 'செயதுங்கா, கோபத்தையடக்கிக் கொள். அதோ அந்தப்போதி விருட்சத்தின்கீழ் (அரச மரம்) சத்வகுணபோதன் முன்பு தியானத்தில் அமர்ந்திருக்கும் பிக்ஷுணியைக் கேள்' என்று கையாற் காட்டினார்.

வெகுவிரைவாகச் செயதுங்கன் நடந்தான். ஐம்புலன்களையும் அடக்கி ஒடுக்கித் தியானத்தில் இருந்த ஆதிரைச் சிவந்தியைக் கண்டான். அவன் தன் கண்களையே நம்ப முடியாமல் திகைத்தான். 'சிவந்தியா இப்படியானாள்? கலையரசியா பிச்சைக் கோலம் பூண்டிருக்கிறாள். யார் இவ்விதம் சதி

செய்து, தனது ஆசையில் மண்ணைப் போட்டார்கள்? தூய ஒழுக்கம் உள்ள பவணந்தி தேவருமா தனக்குக் கெடுதி விளைவிக்க வேண்டும்?' இவ்வாறு செயதுங்கன் எண்ணமிட்டான்.

'சிவந்தி, சிவந்தி' என்று கத்தினான். பலமுறை கத்தினான். 'கண்ணைத் திறந்துதான் பார்,' என்றான். நிஷ்டை கலைந்தது, கண்களைத் திறந்து அரசனைப் பார்த்தாள். அவள் பார்வையில் காதல் கவர்ச்சியில்லை. அவள் முகத்தில் நல்ல மலர்ச்சிரிப்பை அரசனால் காணமுடியவில்லை. நல்முத்துக்கள் போன்ற பல்வரிசையைக் காட்ட அவளுடைய கொவ்வையிதழ்கள் மலரவில்லை.

'சிவந்தி, சிவந்தி, வாயைத்திறந்து தான் பேசு. நீ என் அன்பிற்கினிய சிவந்தியல்லவா?' என்று இரக்கந்தோன்றக் கேட்டான்.

அந்தப் பிக்ஷுணி சொன்னாள்: 'அந்தப் பெயருடையவள் அப்பொழுதே இறந்து விட்டாள்.'

'அப்படியானால் நீ யார்? சிவந்தியல்லையா?'

'இல்லை. சத்வகுணபோதன் திருப்பாதங்களில் ஒட்டிக் கிடக்கும் தூசியினும் கீழான மனித உடல்.'

'சிவந்தி, அரண்மனை வாழ்வும் அரசபோகங்களும் வெறுத்துப்போய் விட்டனவா?' என்றான்.

இக்கேள்வியைக் கேட்கும் பொழுது அவள் செவிகளைப் பொத்திக் கொண்டாள்.

''சிவந்தி, என் மன ஆறுதலுக்கு என்ன பதிலைச் சொல்லப் போகிறாய்,' என்று கேட்டான் இரக்கம் தொனிக்கும் குரலில்.

'மன ஆறுதலுக்குமட்டும் அல்லாமல், முக்தி நெறிக்கும் வழி சொல்லுகிறேன்,' என்றாள்.

'சொல், விரைவில் சொல்', என்றான்.

'சத்வகுணபோதன் திருவடிகளில், அடைய முடியாதவைகளை அடைய முடியும். அன்பும், அருளும் நிறைந்த அஹிம்சா மூர்த்தி புத்த தேவரின் கிருபையைப்பெற முயற்சி செய்யும்' என்று சொல்லிக் கொண்டே கண்களை மூடிக்கொண்டாள். நிஷ்டையில் ஆழ்ந்து விட்டாள்.

செயதுங்கன் மனம் உடைந்தவனாக அரண்மனைக்குச் சென்றான். சிலநாட்கள் கழிந்தன. அவனுக்கு வாழ்க்கையே கசப்பாகி விட்டது. அவன் நிர்மாணித்த மனக்கோட்டை திடீரென்று தகர்ந்து விழுந்து மண்ணோடு மண்ணாகக் கலந்துவிட்டதல்லவா? எனவே வெறுப்பு மிகுதியால் அவன் தன் தம்பி முறையான ஆதிபாண்டியனுக்கு முடி சூட்டிவிட்டுத் தானும் புத்த சங்கத்தில் சேர்ந்துவிட்டான். பவணந்தியடிகள் செயதுங்கனைப் பிக்ஷுவாக்கிச் சிங்களத் தீவிற்கு, 'புத்த ஜோதியைப் பரப்பிவா' வென்று அனுப்பிவிட்டார்.

அழகுச் சாதனங்களின் அணிவகுப்பில் தலைசிறந்த வெற்றி!

ப்ரெஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில்

விலையுயர்ந்த மூலிகைகளின் உதவியாலும் சிறந்த வாசனைக்கலப்புத் திரவியங்களாலும் சுத்தமான வெஜிடபிள் எண்ணெயில் தயாரிக்கப்படும் 'ப்ரெஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில்' ஓர் ஒப்பற்ற கேசவிருத்தி டானிக். இளமையில் தோன்றும் நரையைத் தடுப்பதுடன், அழகுமிக்க, செழிப்பான கேசத்தை வளரச்செய்கிறது. கவர்ச்சியும், எழிலும் அளிக்கிறது. புத்துணர்ச்சி உண்டாக்குவதுடன் குளுமையாகவும் செய்கிறது!

எங்கும் கிடைக்கும்.

சில்லறைவிலை பாட்டில் ஒன்றுக்கு ரூ. 1-6-0

தயாரிப்போர்:

ரதோட் ட்ரேடிங் கம்பெனி,

21, தொளசிங்கம் தெரு, ஸௌகார்பேட்டை, சென்னை-1.

அறுந்த தந்தி

'விஜய ஸ்ரீ''

சபையின் ஆதரவில் நடந்த அந்தக் கச்சேரிக்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் வீணுகானத்தில் லயித்திருந்தார்கள். நாத வெள்ளம் அவர்கள் யாவரையும் புதுப் புதுக் கனவு உலகங்களுக்கு அழைத்துச் சென்றது. வித்வானின் விரல்கள் வீணையின் நரம்புகளை மீட்டின. ஜங்காரத்வனியுடன் வராளி ராகம் எடுக்கப்பட்டது. காதலனைப் பிரிந்து ஏங்கும் சகோரத்தின் குரலையும், சேயைப் பிரிந்த தாயின் இதய தாபத்தையும், சோகக் கதையொன்றைத் திறம்படத் தீட்டி அதில் திளைத்து இருக்கும் கதாசிரியனின் மனோ நிலையையும் சபையோரின் மனக்கண் முன் கொணர்ந்தது வீணுகானம்.

அபசகுனமே போன்று வீணையின் நரம்புகளிலொன்று திடீரென அறுந்தது. அதனுல் ராகத்தின் சாயை பயங்கரமாக மாறி அபஸ்வரம்கிளம்பியது வீணையில். வராளியில் தங்கள் மனதைப் பறிகொடுத்து அமர்ந்திருந்தசபையோரில் பலர் ''த்ஸொ, த்ஸொ'' என்று தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். அறுபட்ட தந்தியைக் களைந்துவிட்டுப் புதுத்தந்தியை வீணையில் பொருத்தினுர் வித்வான். மீண்டும் விரல்கள் மீட்டின. மறுபடியும் எங்கும் நாத வெள்ளம் வியாபித்தது.

முன்பிருந்ததைவிடப் புதுத்தந்தி கம்பீரத்தொனி உண்டாக்கியது விரல்கள் அதி தீவிரமாகச் சப்த ஜாலங்களைச் சிருஷ்டித்துக் கொண்டிருந்தன. வீணையும் விரல்களின் முயற்சிக் கேற்ப எதிரொலி செய்தது. சபையோர் வாயில் ஈ புகுவதுகூடத் தெரியாமல் சங்கீதத்தைப் பருகிக் கொண்டிருந்தனர்.

வீணை......விரல்.........அறுந்ததந்தி......... புதுத்தந்தி......தந்தி மாற்றலால் ஏற்பட்ட கம்பீரத்வனி — இவையெல்லாம் வித்வானின் மனத்திரையிலே விரைந்து மறைந்தன.

வாழ்க்கையும் சங்கீதம் தான். அதில் வீணை யார்? விரல் யார்?

அவள்:

என்னவோ தெரிய வில்லை. இரண்டு மூன்று நாட்களாகவே என் மனம் ஒரு நிலை கொள்ளாமல் தவிக்கிறது. வசந்த காலத்தில் செடி கொடிகளை யார் புஷ்பிக்கச் சொல்வது? அவைகள் தாமாகவே மலர்ந்து அழகுற விளங்க வில்லையா? இன்றுவரை என் வாழ்க்கையில் வசந்தம் தோன்றவில்லை. ஆனல் இப்பொழுதோ மெதுவாக உதயமாகியிருக்கிறது. அத்துடன் ஒரு இன்ப வேதனை, ஒரு இன்ப மயக்கம்!

மனம் நிலைகொள்ளாததற்குக் காரணம் அவர்தான் என்று தோன்றுகிறது. அன்று உலாவச் சென்றபோது என் எதிரே வந்தார். சங்கீதப் பித்துப்போல் இருக்கிறது. வாய் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தது. ''இன்னும் பராமுகம் ஏனோ?'' என்ற வார்த்தைகளைத் தான் கேட்டேனு, அல்லது.........?

பெண் மனதிலே—இருளடைந்த மூலையிலே—முடங்கிக் கிடக்கும் சம்சயமென்ற அரக்கன் என் உள்ளத்தில் கொந்தளிப்பை உண்டாக்கிவிட்டான் அவர் என்னைக் குறித்துத்தான் பாடுகிருரோ? அவர் முகத்தை உன்னிப்பாய்க் கவனித்ததிலிருந்து, உள் எண்ணம் ஒன்ருனும் அவர் பாடவில்லை என்று தெரிந்தது.

சிவந்த முகம், சுருட்டை மயிர், இடது கன்னத்தில் கருமச்சம். நிலைத்து நிற்கும் கண்கள். கட்டுமஸ்தான தேகம்—இவை என் தூக்கத்தில்கூடக் காட்சியளித்துக் கொண்டிருந்தன. அன்று முதல் தினமும் உலாவச் சென்றேன். தினமும் அவரைச் சந்தித்தேன். கொஞ்ச நாட்கள் என்னைக் கவனிக்காததுமாதிரி இருந்தார் அவர் பிறகு சற்றே தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கடைக் கண்ணுல் பார்த்தார்.

நானும் (இதிலென்ன வெட்கம்) அவர் பார்க்கும் சமயம் நோக்கிப் பார்ப்பேன். இருவர் கண்களும் சந்திக்கும். நாளாக ஆக

அவர் என்னைக் கண்டால் முறுவல் செய்வது, நான் பதிலுக்குப் புன்னகை புரிவது இரண்டுமே நடைபெற ஆரம்பித்துவிட்டன.

காதலின் சக்தியை உணர்ந்தேன். என்றும் சாயுங்காலமாகவே இருந்து விடக் கூடாதா என்றுகூட எனக்குத் தோன்றியதுண்டு. அப்பொழுதுதானே நான் எப்பொழுதுமே அவரைப் பார்த்துக் கொண்டே இருக்க முடியும்.

அவரைப்பற்றி என் உயிர்ச் சிநேகிதையிடம் கூறினேன்—யாரிடமாவது கூற வேண்டுமல்லவா, இதய பாரத்தைக் குறைப்பதற்கு? அவரைப்பற்றி அவள் சில சங்கதிகள் கூறினாள். அவர் சிறந்த எழுத்தாளராம், சங்கித ரசிகராம்.

ஒரு நாள் அவள் என்னிடம் வந்து, "நீ ரொம்ப பொல்லாத பெண்ணாகவல்லவோ இருக்கிறாய். அதற்குள் அவரை சொக்குப் பொடி வைத்து மயக்கி விட்டாயே. இதோ இந்தப்பத்திரிகையில் உன்னைப் பற்றி ஒரு சிறுகதைகூடப் புனைந்து விட்டாரே" என்று அவள் என் கையில் பத்திரிகை ஒன்றைத் திணித்தாள். அக்கதையைப் படித்துப் பார்த்தேன், எனக்கிருந்த கொஞ்சம் நஞ்சம் சந்தேகமும் பறந்து போய்விட்டது. அவரும் என்னைத்தான் விரும்புகிறார் என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது, அக் கதையில் எவ்வளவு தடவை என் பெயரைக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு தடவை கொண்டு வந்திருந்தார். "நான்" என்ற பாணியிலே கதாசிரியரே முக்ய பாத்திரமாகப் பரிணமிக்கும் கதை அது. கதாநாயகி ராஜம் (என் பெயரும் அதுதான்!) புதிதாகக் கலியாணம் ஆனவர்கள். கேலியும் கூத்தும் ஏக அமர்க்களம். அவர் என்னைக் கேலி செய்வது. அவரைத் திரும்பி நான் பரிகசிப்பது—இவற்றையெல்லாம் அழகாக, தத்ரூபமாக எழுதியிருந்தார் அவர். அக்கதையைப் படித்தவுடன் ஒரு சங்கல்பம் செய்துகொண்டேன்—அவரைத்தான் கலியாணம் செய்துகொள்வது என்று.

இப்படியிருக்கையில் மற்றொரு விஷயம் நடந்துவிட்டது. நான் ஒரு நாள் வழக்கம் போல் உலாவச் சென்றேன். அப்பொழுது வைத்தியக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நடேசன் என்னும் மாணவன் என்னெதிரே தோன்றினான். அந்த ரஸ்தாவில் வேறு யாரும் இருக்கவில்லை.

நான் முன்பே பார்த்திருக்கிறேன். இந்த நடேசன் என்னைக் கண்டபோதெல்லாம் திருட்டு முழி முழிப்பான். அசடு வழியச் சிரிப்பான். உரக்கக் கனைப்பின்னுவென்று பேசுவான். என் பின்னாலேயே வருவான். நான் படிப்பது ராஜதானிக் கல்லூரி. அவன் வைத்தியக் கல்லூரி மாணவன். இருப்பினும் நான் செல்லும் பஸ்ஸின் பின்னாலேயே மோட்டார் சைக்கிளில் வருவான். கல்லூரிக்குள் நான் நுழையும்வரை என் பின்னாலேயே சுற்றிக்கொண்டிருப்பான். பிறகு போய்விடுவான். கல்லூரி முடிந்து வெளியே வந்தால், மோட்டார் சைக்கிள் சகிதம் அவன் அங்கே காத்துக் கிடப்பான். நான் வீட்டுக்குப் போகும் பஸ்ஸின் பின்னாலேயே வருவான். வீட்டுக்குள் நான் நுழையும்வரை என்னைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டேயிருப்பான். சில நாட்கள் வரை அவன் அவ்வாறு செய்வது எனக்கு வெறுப்பையளித்தது. பிறகு அவனை ஒரு புழுவைப்போல் மதிக்கத் தலைப்பட்டேன். அவனைக் கவனிப்பதே கிடையாது.

அன்று நான் தனியாக அகப்பட்டுக் கொண்டவுடன் தனக்கே பிரத்தியேகமான அசட்டுச் சிரிப்புடன் என்னை நெருங்கி, "நான் வெகு நாட்களாக உன்னிடம் சொல்ல வேண்டுமென்றிருந்தேன். உன்னைக் கலியாணம் செய்து கொள்ள ஆசையாய் இருக்கிறது: என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டு விட்டு, தன் தகப்பனார் ஒரு பெரிய பாங்கர் என்றும் லக்ஷலக்ஷமாகப் பணம் இருக்கிறதென்றும் கூறினான். இவன் லக்ஷத்தை யார் கேட்டார்கள்? இவனே வைத்துக் கொள்ளட்டுமே! தான் அதிமேதாவியென்றும், அற்புதமான மருந்தொன்றைத் தயாரிக்க அல்லும் பகலும் உழைப்பதாகவும் கூறினான். இவன் மூளை யாருக்கு வேண்டும், இவனே வைத்துக் கொள்ளட்டுமே?

அவனுடைய முகத்தையும் பேச்சையும் கண்டவுடன் எனக்குச்சிரிப்புத்தான்வந்தது. இருந்தாலும் அடக்கிக்கொண்டு, "புத்தி கித்தி ஏதாவது இருக்கிறதா உனக்கு? உன் மோரைக்கட்டைக்குமனைவிஒன்றுதான் பாக்கியா? போடா போ மண்டு; இன்னொரு தடவை இம்மாதிரி நேர்ந்தால் காலையொடித்துக் கழுத்தில்மாட்டிவிடுவேன். தெரிந்ததா?" என்று சீறினேன். அவன் பயந்தேபோய் விட்டான். பதில் பேசாமல் விட்டான் சவாரி!

திடீரென்று சஞ்சலமொன்று என்னைச் சூழ்ந்துகொண்டது, அவருக்கெனக் கொண்டுள்ள இந்தத் தேகத்தை இன்னொருவன் இச்சிப்பதா? என்னையும் அறியாமல் என் கண்களில் கண்ணீர் துளித்தது. துடைத்துக்கொள்ளக் கண்ணருகே கைக்குட்டையைக் கொண்டு போனேன். பெரிய காற்று

ஒன்று அடித்துக் கைக்குட்டை கையை விட்டுப் பறந்து சென்றது. எதிரே வந்து கொண்டிருந்த 'அவர்' அதை எடுத்து என்னிடம் கொடுத்தார். கொடுக்கும்போது என் கண்ணீரில் ஒரு சொட்டு அவர் கரத்தில் சொட்டியது. முகம் வேதனையைக் காட்டச் சற்று நேரம் அவ்விடத்திலேயே நின்றார். 'ஏன்?' என்ற கேள்வி அவர் மனத்தில் முளைத்தெழுந்திருக்க வேண்டும். ஆனால் வாய் அதை அடக்கிவிட்டது.

அடுத்த வாரம் 'ஜோதி' என்ற இலக்கியப் பத்திரிக்கையில் அவருடைய 'காதலியின் கண்ணீர் என்ற காவியக்கதை வெளிவந்தது. கண்முன் தன் காதலி (அதாவது ராஜம்) எப்பொழுதும் காட்சி அளிப்பதாக எழுதியிருந்தார்.

அவரை விவாகம் செய்து கொண்டால் சௌந்தரியக் கனவு உலகத்திலேயே விளையாடி வாழ்நாட்களை ஓட்டி விடலாம் வெகு சுலபமாக!

* * *

அவன்

தண் மதியம் தன் குளிர் கிரணங்களை வீசி, கடலலைகளை ஜாஜ்வல்யப் படுத்துகிறது. பெருங்காற்று வீசுகிறது. மேகக் கூட்டங்கள் வான வெளியில் குமுறுகின்றன. சந்திரன் மறைகிறது. கடலலைகள் கப்பல் உயரத்திற்குக் கிளம்புகின்றன. சாந்தமாய் இருந்த என் வாழ்வில் இலக்கியச் சேவை தண்மதியாய் இருந்தது. காதற் புயல் வீசி என் வாழ்வை ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

உணவு பிடிக்க வில்லை. உறக்கம் வரவில்லை. அதே நினைவு, அதே முகம், அதே புன்சிரிப்பு! உண்மையில் என் இதயச் சாயைகளை அவள் உள்ளமும் பிரதிபலிக்கிறதா? அல்லது இளம் வயதுப் பரிகாசமா? தினமும் அவளைப் பார்க்கிறேன். அவளும் என்னைப் பார்ப்பதாகத்தான் தோன்றுகிறது. சில நாட்களில் என்னைக் கண்டு முறுவல் கொள்ளவும் ஆரம்பித்துவிட்டாள்,

பிரம்மதேவனை வாழ்த்துகிறேன்! இவ்வளவு அழகான ஒரு பெண்ணைச்சிருஷ்டிக்கும் திறன்கூட அவனிடம் இருக்கிறதா, என்ன?

ஒரு நாள் கதை யெழுதுவதற்காக அமர்ந்தேன். விஷயம் ஒன்றும் அகப்படவில்லை. யோசனையில் ஆழ்ந்தேன். ஜோதிப் பிழம்பாய், கலைவாணி அறையில் குதித்தாள். பேனாவை எடுத்து என் கையில் வைத்தாள். அது தானாகவே ஓடியது. கதை நிமிஷத்தில் முடிந்தது. படித்துப் பார்த்தேன். என் காதற் கதை அல்லவா அது! என் இதயவொலியின் எதிரொலியன்றோ அச்சித்திரம். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. கலைவாணி மறைந்துவிட்டாள். ஹே கலைவாணி! ஏன் என்னை வாட்டுகிறாய்? பேனாவை எடுத்து எழுதும்போதெல்லாம் ஏன் என் காதலியைப்பற்றியே சிந்தனை ஓடுகிறது? ஏன் என் பேனாவும் அவளைப்பற்றியே எழுதுகிறது? உன் திருவுளமும் இதுவோ?

அவளைப்பற்றி நான் எழுதிய முதற் கதை வெளிவந்தவுடன் அவள் நடத்தையில் மாறுதல் காணப்பட்டது. என்னைக் கண்டவுடன் அவள் முகம் சிவக்கிறது. கை பதறுகிறது. நெற்றியில் வியர்வை அரும்புகிறது. நான் சற்றுத் தூரம் சென்று திரும்பிப் பார்த்தால் அவளும் என்னைத் திரும்பிப் பார்ப்பது தெரிகிறது. அவளுக்கு என்னிடம் பிரியமா? அப்படியானால் நான் பாக்யசாலிதான்.

ஆனால் சில நாட்களாக ஒரு விஷயம் என் மனதை வாட்ட ஆரம்பித்திருக்கிறது. அவளை என் நண்பன் நடேசனும் விரும்புகிறான். அவனுக்கு அவளை மணக்க முடியும். அவன் பணக்கார வீட்டுப் பையன். நான் ஏழை. அவன் புத்திசாலி. நான்.........? சரடுவிட்டு ஒன்று அரை என்று பதிப்பாசிரியர்கள் கொடுப்பதை வைத்து வயிற்றைக் கழுவுகிறவன். அவளுடையதந்தை அவனை மாப்பிள்ளையாய் அடைவதற்குத் தயாராயிருப்பார்; தயங்குவதற்கு அவர் என்ன முட்டாளா? அதை விடச் சிறந்த வரன் ....? சீச்சீ, அவள் சம்மதிக்க வேண்டாமா? காதலைக்கூடக் காசுக்கு வாங்க முடியுமா என்ன?

அதிசயமொன்று நடந்தது. அவளுடைய தகப்பனார் என் வீட்டிற்கு வந்தார். தம் பெண் என்னை மணக்க விரும்புவதாகக் கூறி, எனக்குச் சம்மதம்தானா என்று கேட்டார். "எனக்குச்சம்மதந்தான்; இருப்பினும் நான் ஏழை. உங்கள் பெண்ணைக் கஷ்டப்படாத இடத்தில் அல்லவா கொடுக்க வேண்டும்?" என்று சொன்னேன். அவர் ஒன்றுக்கும் மசியவில்லை. பணம் பிரதானமில்லை என்றார். அன்புதான் அவசியமென்றார். இன்னும் ஆயிரம் உபதேசம் செய்தார்................

மணப்பந்தலில் அவளுடைய முகத்தைப் பார்த்தேன். ஈரேழு உலகங்களையும் ஜயித்து விட்ட வெற்றி வீரனைப்போல் காட்சியளித்தாள் அவள்.

அவனும் அவளும் சந்தோஷமாக, கன்ருகத்தான் குடித்தனம் செய்ய ஆரம்பித்தார்கள். இளமையின் கனவு நிறைவேறினுல் கேட்க வேண்டுமா? சிரிப்பு, பரிஹாசம், வேடிக்கை, விஞேதம், பேச்சு இவற்றிற்குத்தான் குறைவுண்டா? அவன் ஏழை தான். இருப்பினும் மானி. சிறுகக் கட்டி பெருக வாழும் எண்ணமுடையவன். இந்நிலையில் வருமானத்துக்கும் செலவுக்கும் சரியாகத்தான் இருந்தது.

ஒரு நாள் அவனுக்குச் சற்றே கடுமையாகவே தலை வலித்தது. அவள் ஏதோ கஷாயம் போட்டுக் கொடுத்தாள். அதைவிட அவளே அருகில் அமர்ந்து, தன் ஸ்பரிசத்தால் அவனுக்கு நிம்மதி அளித்தாள். தலைவலி தானே, தாஞகவே போய்விடுமே என்று அவள் கருதிஞள். அவனும் அவ்வாறு நினைத்தான். வெகு தூரத்துக்குக் கொண்டுபோகும் என்று கண்டார்களா என்ன?

அவன் தேகம் இளைக்க ஆரம்பித்தது. சதா ஜுரம் அடித்தது. தன் வேலையைக் கூடக் கவனிக்கமுடியவில்லை அவனுக்கு. சம்பாதித்துப் போடும் ஜீவன் அவன் ஒருவன் தான். அவனும் படுக்கையோடு படுக்கையாகிவிடவே, வீட்டில் தரித்திரம் தாண்டவமாட ஆரம்பித்துவிட்டது. அவனே ஏழை. அவளிடமும் ஒன்றும் கிடையாது. இருந்த ஒன்றிரண்டு நகைகளும் மார்வாடி கடைக்கு அலங்காரமாக இருந்தன. அவன் தவித்தான். அவள் தவித்தாள். கொஞ்ச நாட்களுக்கெல்லாம் நிலைமை சமாளிக்க முடியாமல் போய்விட்டது.

ஒரு நாள் அவன் வியாதி உச்சநிலை அடைந்தது. பிதற்ற ஆரம்பித்துவிட்டான். அருகிலோ ஒரே ஒரு டாக்டர்தான். அதுவும் ....

தனியே அவனைவிட்டுப் போகவும் பயம். தான் இல்லாதபோது என்ன ஆகுமோ? வேறு வழியில்லை என்று தோன்றவே டாக்டர் வீட்டை நோக்கி நடந்தாள்.........

டாக்டர் 'புட்டி'யும் கையுமாக நின்ருர். அவரிடம் (கள்ளரக்கனின் வீழ்ச்சிக்குப் பிறகு கூட) ப்ளாக் மார்க்கெட் 'விஸ்கி'யின் 'சுகந்தம்' குப்பென்று அடித்தது.

"டாக்டர்! நீங்கள்தான் உதவவேண்டும்."

"உம்.........?"

"கணவர் அபாயமான நிலையில் இருக்கிருர். உறவினர் கிடையாது. பரம ஏழை நாங்கள். வீட்டுக்கு வந்து அவரைக் கொஞ்சம் கவனியுங்கள். கோடி புண்யமுண்டு."

அவளுடைய நல்லவேளையோ என்னவோ, அவளுடைய கண்ணீர் டாக்டருடைய மனத்தை உருக்கிவிட்டது. வீடு வந்ததும் டாக்டர் அவனைப் பரிசீலனை செய்து பார்த்தார். பிறகு, "நான் ஒரு புது மருந்து தயார் செய்திருக்கிறேன். அந்த மருந்து ஒன்றினுல்தான் இவ்வியாதியை நிவர்த்திக்க முடியும். ஆனுல் விலைதான் அதிகம். விலை அதிகமென்ருலும், உட்கொண்ட அரை நிமிஷத்திற்கெல்லாம் வியாதி பறந்து போகும். அப்புறம் வேறு ஒரு வியாதியும் கிட்ட அணுகாது." என்று கூறினுர்.

"ஓர் உயிரைக் காப்பாற்ற ஏதாவது செய்ய வேண்டுமல்லவா?"

"வாஸ்தவம். ஆனுல் உங்களால் அதன் விலையைச் சமாளிக்க முடியாது. ஒரு சின்ன புட்டிக்கு ஐந்நூறு ரூபாய் ஆகும்."

ஐந்நூறு ரூபாய்க்கு அவள் எங்கே போவாள்?

நிலைமையைப் புரிந்துகொண்ட நோயாளி, "டாக்டர்! இது வேறு ஒன்றும் இல்லை. தாஞகவே இரண்டு மூன்று நாட்களில் சரியாகி விடும். என் மனைவி கொஞ்சம் பயப்படுகிருள்; வேறு ஒன்றுமில்லை. நீங்கள் சொல்லும் மருந்து இல்லாமலே நான் சரியாகி விடுவேன். உங்களைச் சிரமப்படுத்தியதற்கு மன்னிக்க வேண்டும் நீங்கள்" என்று கூறினுன். "ஆல் ரைட்" என்று அவனைத் தட்டிக் கொடுத்துவிட்டு வெளியேறினுர் டாக்டர்.

ஆனுல் அன்றிரவு மறுபடியும் அவள் டாக்டர் வீட்டுக்குப்போக நேர்ந்தது. அவனுடைய வியாதி மிக முற்றி, பயணத்தின் அண்மையைப் பற்றியும் பரலோகத்தைப் பற்றியும் பயங்கரமாகப் பிதற்ற ஆரம்பித்துவிட்டான். அவளுக்கு வேறுவழி தோன்றவில்லையாதலால் மறுபடியும் டாக்டரிடமே அடைக்கலம்புக ஆயத்தம் ஆனுள். வைத்தியரிடம் கெஞ்சி மன்ருடிக் கூத்தாடி அம்மருந்தைப் பெற்றுவிடலாம் என்று அவள் கருதினுள்.........

"டாக்டர்!"

"என்ன?"

"என் கணவரின் உயிர் உங்கள் கையில். அந்த மருந்து............"

"அதன் விலையைத்தான் முன்பே சொல்லிவிட்டேனே. ஐந்நூறு ரூபாய்."

ஐந்நூறு ரூபாய்! ஐந்நூறு ரூபாய்!! ஐந்நூறு ரூபாய்!!!

"நான் ஏழை. எங்கே போவேன் அந்தத் தொகைக்கு?"

மின்சார விளக்கின் ஒளியில் டாக்டருடைய முகத்தை நோக்கினாள் அவள். சொல்லவேண்டிய வார்த்தைகள் அப்படியே அதரங்களிலேயே தடைப்பட்டு நின்றன. பழைய நினைவுக் கற்றை ஒன்று அவள் மனக்கண் முன் பளிச்செனத் தோன்றி மறைந்தது!

* * *

சுரீரென்று ஏதோ தன் நெற்றியின் மேல் படவே அவன் விழித்துக்கொண்டு விட்டான். வேறு ஒன்றும் இல்லை. எல்லாம் காலைக் கதிரவனின் இளங் கிரணங்கள் தான். பலஹீனமாய் இருந்தும் தன் உடம்பு இரவு இருந்ததைவிடப் பரவாயில்லை என்று அவனுக்குத் தெரிந்தது. அந்த இரவு! நமனுடன் போராடியது நினைவிருந்தது அவனுக்கு. வேறு ஒன்றும் நினைவிருக்கவில்லை......... இல்லை, இல்லை அவள் தன் வாயில் ஏதோ மருந்து விட்டது கூட நினைவிருந்தது. ஆமாம் அவள் எங்கே?

"ராஜம், ராஜம்!" பதிலில்லை.

படுத்த வண்ணமாகவே? அவன் அறை முழுவதும் பார்வையைச் செலுத்தினான், மேஜையின் மேல் ஏதோவொரு துண்டுக் கடிதமிருந்தது. காற்றில் அது பறந்துபோய் விடாமலிருக்கக் கனமான ஒரு டம்ளர் அதன் மேல் வைக்கப்பட்டிருந்தது.

கை நீட்டி அத்துண்டுக் கடிதத்தை எடுத்தான். முத்து முத்தாகத் தமிழ் எழுத்துக்கள் அதை அலங்கரித்தன. இரண்டு வரி கூட வாசித்திருக்க மாட்டான், தலைமயிரைப் பிய்த்துக்கொண்டு படுக்கையினின்று எழுந்தான்.

"ராஜம்! பைத்தியக்காரப் பெண்ணே! என்ன காரியம் செய்தாயடி."

அடுத்த அறையில் அவள் தன்னைச் சுருக்கிட்டுக் கொண்டு தொங்கிக் கொண்டிருந்தாள்—பிணமாக, உயிரற்ற உணர்ச்சியற்ற வெறும் சடலமாக.

அவள்! அவள் போய்விட்டாள், போயே விட்டாள், திரும்பி வரமாட்டாள். அத்துண்டுக் கடிதம் தன் விஷயாம்சத்தைச் சொல்லிச் சொல்லி அழுதது, ஆம் அழுதது:

அன்ப!

பெண்களுக்கு அணிகலம் கற்பு; அதை நான் இழந்துவிட்டேன். கணவனொருவனின் அணைப்பையே அறிந்திருந்த என் தேகம் பர புருஷன் ஒருவனாலும் அணைக்கப் பட்டது. என் கற்பு நிலை பிறழ்ந்துவிட்டது என்று நான் சிறிதேனும் வருந்தவில்லை. உங்கள் ஒப்பிலா உயிரின் விலையே என் கற்பு. டாக்டர் நடேசன் ஐந்நூறு ரூபாய்க்குப் பதில் என் மாமிச உடலத்தைச் சில நிமிஷ நேரம் பெற்று, உங்கள் உயிரைக் காப்பாற்றிய மருந்தைக் கொடுத்தார். உலகத்துக்கு என் கற்பைவிட உங்கள் உயிர் முக்கியம். ஞாலம் அழியும்வரை, மானிடராய்ப் பிறந்தவர்க்கு உங்கள் இலக்கியப் பணிவிடை அத்தியாவசியம். அஞ்ஞான இருளில் உழலும் உயிர்களுக்கு மெய்ந்நெறி காட்ட உங்கள் எழுத்து மிக மிக அவசியம். என் கற்பைப் பற்றி உலகம் கவலைப்படாது, கவலைப்படவும் வேண்டாம். மருந்தினால் நீங்கள் கட்டாயம் குணமடைவீர்கள். அடுத்த பிறவியாகிலும் நாமிருவரும் பணக்காரத் தம்பதிகளாக வாழக் கடவுள் அனுக்கிரகிக்கட்டும்.

உங்கள் மலரடி பணியும்

அடியாள்

ராஜம்

.........கச்சேரி முடிந்தது. வீணையைத் தம் காரில் ஏற்றிவிட்டுத் தாமும் அமர்ந்து கொண்டார் வித்வான். இருவர் பேசுவது அவர் காதில் விழுந்தது.

"வீணை நன்றாய் இருந்துதடா. அவர் விரல் ஓடினதைப் பார்த்தாயா?"

"பகு ஜோர். வீணையில் தந்தி அறுந்ததே, பிறகு புதுக்கம்பி போட்டாரே, அப்பொழுது உண்டான நாதம் முன்பிருந்ததைவிட நன்றாய் இருந்தது கவனித்தாயா?"

"அது போகட்டும், வீணைத் தந்தி அறுந்தவுடன் வித்வானின் முகம் மாறுபட்டதைக் கவனித்தாயா? அதற்கப்புறம் சில வினாடிகள் வரை கச்சேரி அவ்வளவு சுகப்படவில்லை. உனக்கென்ன தோன்றுகிறது.?"

......அறுபட்ட தந்தியைக் களைந்துவிட்டு வேறு தந்தியைப் பொருத்தியவுடன் வீணையில் நல்ல நாதம் உண்டாயிற்று. வீணையும் விரலும் உறவாடின.

ஆனால் அவர் வாழ்க்கையில் அறுந்த தந்திக்குப் பதிலாக வேறு தந்தி போட முடியுமா? போட்டாலும், இதய கீதம் சோபிதமாக இருக்குமா?

—o—

நாகரிகமான

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்

வீட்டுக்குத் தேவையான சகல பாத்திரங்களும்
விதம் விதமான ரகங்களில் கிடைக்கும்

•

சாப்பாட்டுத் தட்டுகள், பிளேட்டுகள், டிபன் செட்டுகள்.
அடுக்குச் சட்டிகள், ஸாஸ்-பான்கள், கரண்டிகள், டவரா,
டப்பா டம்ளர்கள், கிண்ணங்கள் மற்றும் ஏராளமானவை.

•

"ஸன்" பிராண்டு பர்த் ஸ்டேபிரைட் ஸ்டீல் பாத்திரங்கள்,
கிரௌன் ப்ராண்டு அலுமினியப் பாத்திரங்கள், மற்றும்
பித்தளை, தாம்பரம் பாத்திரங்கள் மொத்தத்திலும்,
சில்லறையிலும் மலிவாகக் கிடைக்கும்.

•

எம். ஏ. எதிராஜுலு நாயுடு

7/4 ஈவினிங் பஜார், பார்க் டவுன், மதராஸ்-3,

குடந்தை

மாடி ஜவுளிக் கடை

•

கல்யாண விசேஷங்களுக்கும் தினப்படி
உபயோகத்துக்கும் அவரவர்கள் விரும்
பும் தினுசுகளில் ஏராளமான பட்டு &
நூல் ஜவுளி தினுசுகள் கிடைக்கும்.

•

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

99 (மாடி) பெரியதெரு - கும்பகோணம்

Props : S. R. G. & SONS.

விமர்சனம்

மனிதன்: (ஆராய்ச்சி நூல்) திருவாளர். ஆர். ராமநாதன், கார்த்திகேயினி பிரசுரம், இராமச்சந்திரபும்.

இந்நூலில் மனிதனின் நீண்ட சரித்திர யாத்திரை சித்திரிக்கப்பட்டிருக்கிறது. உலக உற்பத்தியிலிருந்து மனிதன் புரிந்து வரும் மாபெரும்போராட்டங்களையும், அவைகளால் அவன் அடையும் இன்னல்களையும், வெற்றிகளையும் படிப்படியாய்த் தக்க ஆதாரங்கள் கொண்டு துருவி ஆராய்கின்றார் ஆசிரியர். அவரது பரந்த படிப்பு, ஆழ்ந்த சிந்தனை, பிறர் துயர்கண்டு உள்ளம் நையும் மனப் பண்பு—இவை யாவும் இந்நூலில் விளங்குகின்றன. ஏழை மக்கள் படும் பாட்டைக் கண்ணீரால்தான் எழுதவேண்டும் என்று அவர் கூறுகின்றார். அவரது அன்பை விளக்க இவ்வரி ஒன்றுமே போதும்.

"முற்போக்காளர்களின் கடமை" என்ற அத்தியாயத்தில், ஆங்காங்கே காணப்படும் விஷயங்களைத் திரட்டிச் சுருக்கமாய்க் கூறுகின்றார்.

"கடந்த மூவாயிரம் வருஷங்களில் ஐரோப்பா நான்கு சமூக அமைப்புக்களைக் கண்டது. 1. புராதன கம்யூனிஸ்ட் சமுதாயம், 2. அடிமைச் சமுதாயம், 3. பிரபுத்வ சமுதாயம். 4, முதலாளித்வ சமுதாயம். சோவியத்யூனியன் இன்னும் ஒரு படி முன் சென்று அது சோஷலிஸ்ட் சமுதாயத்தைக் கண்டது. இவருடைய லட்சியத்தை இந்நூலில் காண்கிறோம்.

"கிராமங்களில் ஏழை விவசாயிகளுக்கும் நகரங்களில் வாழும் தொழிலாளர்களுக்கும் நெருங்கின தொடர்பை உண்டுபண்ண வேண்டும். புதிய நிலைக்கு உகந்த முறையில் கல்வியைத் திருத்தி அமைக்க வேண்டும். நிலம், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், பாங்கிகள் முதலியவைகளைச் சமூகத்தின் சொத்தாக்கவேண்டும். இத்தகைய கொள்கைகளைப் புத்தகத்தில் பரக்கக் காணலாம்.

உலகம் எந்த முறையில் சென்றுகொண்டிருக்கிறது, என்ற விஷயத்தை யாவரும் அறியவேண்டியதே இதைப்போன்ற நூல்கள் வெளி வரவேண்டும். ஆனால் எழுதப்படும் நூல்கள் நல்ல தமிழிலே அமைக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அவைகளைத் தமிழர்கள் நுகரமுடியும்.

(1) சுரண்டல் முறைக்குச் சோவியத் யூனியன் சாவுமணி அடித்துவிட்டது. (2) வளர்ச்சியின் சிகரத்தைத் தாவிப் பிடிக்கிறது. (3) சமூகத்தின் கீழ்த்தட்டு. (4) சரித்திரச் சக்கரத்தை அவர் முன்னுக்குத் தள்ளிவிட்டனர்——இவ்வரிகளையும், சொற்றொடர்களையும் ஆங்கிலப் பயிற்சி கொண்டே அறியஇயலும். தமிழ்ப்பாஷைக்கு முரணான உருவங்களையும் உவமைகளையும் வழங்காது எளிய நடையில் நூல்கள் எழுதப்படுமாயின் அவைகள் தமிழ் மக்களுக்கு மிகவும் பயன் தரும்.

கால்மார்க்ஸ்:

திருவாளர் எஸ். சதாசிவம், இன்பவாழ்வுப் பதிப்பகம், ஆர். எஸ். புரம், கோயமுத்தூர். விலை ரூபாய் 1.

கால்மார்க்ஸ் என்ற பெயர் பூண்ட பெரியாரை இவ்வாசிரியர் தமிழ் உலகத்திற்கு அறிமுகப்படுத்துகிறார். பழுத்த அனுபவத்திலிருந்தே கால்மார்ஸ் தம் தத்துவத்தை வெளியிடுகின்றார். ஆழ்ந்த ஆராய்ச்சி, சிறந்த சிந்தனை, கடுமையான உழைப்பு—இவை மூலம் எழுந்த அவர் உபதேசத்தைச் சிறிய புத்தகத்தில் அடக்குவது முடியாத காரியமாகும். ஆயினும் அதை விளக்க வந்த ஆசிரியரின் முயற்சி போற்றத் தகுந்தது.

துன்பத்தில் உழலும் மக்களைக் காப்பாற்ற வேண்டியதுதான். மக்களின் வாழ்விலே இன்பம் பொங்கி வழியவேண்டும்; எழில் ததும்பவேண்டும்; ஆம். ஆம்: உண்மையே. ஆனால் கால்மார்க்ஸ் தத்துவத்திலேயே மனிதனுடைய இன்பம் முடிவடைந்தது என்று சொல்லுவதற்கில்லை.

பசியாற்றினால் மட்டும் போதுமா? உண்டியும், உடையும், மற்றப் போகங்களும் ஒருவனுக்குக் கிடைப்பதாகவே வைத்துக்கொள்வோம். அவன் அமைதி அடைகிறதில்லை.

உதாரணமாக: புத்தபிரானுக்கு எல்லாச் செல்வங்களும் அமைந்திருந்தாலும், அவர் மனம் சாந்தியடையவில்லை. இந்திரிய நுகர்ச்சிக்கு அப்பால் ஒரு புதிய அனுபவம் இருக்கிறது என்றதை மனிதன் உணராமலிருக்க முடியாது. இம்மைப் போகங்களை அளிக்கும் மார்க்ஸ் தத்துவத்தோடு நின்றுவிடாமல் அதற்கப்பாலும் செல்லவேண்டும். அவர் கண்ட தத்துவமும் மனிதன் செய்கிற நீண்ட பிரயாணப் பாதையில் தங்குகிற சத்திரமே தவிர, நமது சொந்தப் பேரின்ப வீடன்று. அவ்வீடு புலன்களுக்கப்பாலுள்ளது. "அடக்கம், நிதானம், பொறுமை, மன நிறைவு—இவை யாவும் வடிக்கட்டிய அடிமைத்தனத்தின் சின்னங்கள் என்று சொல்லுகிற இவ்வாசிரியரின் அறியாமைக்கு வருந்துகின்றோம்.

மேலும் உரைநடையும் தமிழ்ப் பண்பைக் கவனித்து அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆங்கில முறையை அவர் நடைபின் பற்றுகிறது.

"மார்க்கினது வாழ்க்கைப்பாதை கற்களும் முட்களும் நிறைந்து, கர்ண கடூரமானதாக

விருந்தது.'' பாதை எப்படிக் கர்ண கடூரமாயிருக்கும் என்பது விளங்கவில்லை.

ஹைதராபாத் போராட்டம்:

திருவாளர் ஆர். ராமநாதன், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா, விலை அணா 8.

ஹைதராபாத் போராட்டம் ஒருவாறு முடிவடைந்திருக்கிறது. எனினும் அதன் கோரமான சரித்திரத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமன்றோ.

ஹைதராபாத்ராஜ்யத்தின்பிறப்பு, வளர்ப்பு அதன் தீச் செயல்கள் இவையனைத்தையும் உருக்கமாய்த் திருவாளர், ஆர். ராமநாதன் அவர்கள் இந்நூலில் சித்திரித்துக் காட்டியிருக்கின்றனர். ஒவ்வொரு வரியிலும் உள்ள உணர்ச்சி ததும்பி நிற்பதைக் காண்கின்றோம்.

''கொள்ளை, தீவைத்தல், கற்பழித்தல் ஆகியவை ரஸாக்கர்களின் வேலைத் திட்டம் என்று ஆசிரியர் கூறுகின்றார். இது முற்றிலும் உண்மையே. இவை எந்த நாகரிகத்தையும் பாழ் படுத்தி மாசுறச் செய்யும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை, ஆனால் மக்களிடையே ஜனநாயகம் மலர்ந்ததை ஆசிரியர் அழகுபடக் கூறுகின்றார்.

''ஜனநாயகம் ஹைதராபாத்தில் மலர ஆரம்பித்தது. இருண்ட வானத்தில் புத்தொளி பிரகாசித்தது. சோர்வுக்கும் அவநம்பிக்கைக்கும் மத்தியில் நம்பிக்கை ஒளி சுடர்விட்டு எரிந்தது. ஹைதராபாத்தில் புது யுகம் பிறந்தது.''

இத்தகைய சுதந்தரச் சுடர் நாளுக்கு நாள் பெருகும்படி எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

பகவான் அரவிந்தர் பத்தினியாருக்கு எழுதிய கடிதங்கள்.

[லோகோபகாரி, சென்னை.
விலை: 0—8—0] .

இப் புத்தகம் நான்காம் பதிப்பாகும். இதனால் இதன் உயர்ந்த தன்மை புலனாகுகிறதன்றோ?

பகவான் அரவிந்தரின் பரந்த அறிவு, பழுத்த ஞானம், நிரம்பிய ஆத்மானுபாவம் முதலியவை உலகம் அறிந்தவையே.

இப்புத்தகத்தில் மூன்று கடிதங்கள் அடங்கியிருக்கின்றன. முதற் கடிதத்தில் தம் மனைவி மிருணாலினியைத் தேற்றுகின்றார். தம் உடன் பிறந்தோன் இறந்த விஷயத்தைப்பற்றி அந்த மாதுசிரோமணி தம் கணவரான அரவிந்தருக்குத் தெரிவிக்கிறார். 'இன்பத்தில் துன்பம் தோன்றுவது இயற்கைதானே அதைப்பற்றிக் கவலைப்படாதே' என்கிறார். தம்முடைய மூன்று பைத்தியங்களைக் குறிக்கின்றார். ''எனக்கு வேண்டியதை வைத்துக் கொண்டு மற்றதை ஈச்வரனுடைய கைங்கர்யத்தில் செலவு செய்யப் போகிறேன். இப்படிச் செய்யாது நிற்பேனாகில் கள்வனாவேன் என்கிறார். ஆழ்வாரும் தம்மைக் கள்வன் என்று கருதுகின்றார். அறியாமையால் அவனுடைய ஆத்மாவைத் தன்னதாகக் கருதினாரன்றோ! ஈச்வரனுக்கு ஆராதனம் மக்கள் பாலுள்ள வறுமையைத் தீர்ப்பதே. அதற்கு நீ துணைபுரிய வேண்டும்.

இரண்டாவது பைத்தியம் பகவானை நேரக் காண வேண்டுமென்பதே. அந்தப் பாதை எத்தனை பயங்கரமாயிருந்தாலும் அதில் இறங்கத் தயாராயிருக்கிறேன். இந் நாடு மலைகளாகவும், காடுகளாகவும் எனக்குக் காட்சி அளிக்க வில்லை. என் தாயாகக் கருதுகின்றேன். என் தாயின் பொருட்டு நான் செய்யும் தெய்வ காரியத்தை நிலை நிறுத்தும் பொருட்டு நாம் இவ்வுலகத்திற்கு வந்திருக்கின்றோம்; இது உண்மையன்றோ?

இரண்டாம் கடிதத்தில் அவருடைய மனப்பண்பு நன்றாய்ப் புலனாகின்றது. ஆண்டவன் கையில் தம்மை ஒரு கருவியாகக் கருதிவிட்டார்.

''ஜனவரி மாதம் இரண்டாம் தேதி நான் வருவதாயிருந்தேன் நான் வரமுடியவில்லை. அந்த விஷயத்தில் எனக்கு ஒரு செயலுமில்லை. ஆண்டவன் என்னை எங்கே போகச் சொல்லுகிறானோ அங்கே நான் போகவேண்டியதாயிருந்தது.''

மூன்றாம் கடிதத்தில் தம் மனைவியின் ஒத்துழைப்பை மிகவும் நாடுகின்றார்.

''நான் கருதிய கருமத்தில் வெற்றிபெறுவதில் நீ மகிழ்ச்சியடைந்தாலன்றி நீ சுகமடைய வேறு வழியில்லை.''

கணவனும் மனைவியும் வைகுந்த நீள் வாசலுக்குச் செல்லும் நீண்ட யாத்திரை மார்க்கத்தில் உற்ற துணைவர்களாக ஆக வேண்டும் என்று இதனால் விளங்கவில்லையா?

எல்லாவற்றையும் துறக்கிறவன் பேரன்பினால்தான் செய்கிறான்; பகையாலன்று. அத்தகைய அன்பு அவரை ஆண்டவன் திருவடிக் கழைத்துச் செல்லுகிறது. அவர் என்ன செய்வார். ஆயன் குழலின் இன்னிசை அத்தனை மதுரமாய் ஒலிக்கின்றதன்றோ? அந்த அமுத கீதவலையில் யார்தான் சிக்கமாட்டார்கள்.

பகவான் அரவிந்தருக்கு உண்ணுஞ் சோறும், பருகு நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணனாகி விட்டன. அத்தகைய சான்றோனின் தூய உள்ளக்கிளர்ச்சிகளை இக்கடிதங்கள் உலகங் கேட்க முரசடிக்கின்றன.

ஒரே வரி

"சௌரி"

"**நா**தா!............நாதா!!............"

உயர்ந்த காவ்யத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் மஹாகவி பாரவி ஏகாந்தத்தில் ஏகசித்தராக லயித்திருந்தார்.

"எவ்வளவு தடவை கூப்பிடுவது? ஓலையும் எழுத்தாணியும் இருந்து விட்டால் போதும்; குடும்பத்தில் என்ன கஷ்டமிருந்தாலும் நிம்மதியாக இருக்க உங்களால் முடிகிறது. எனக்கு முடிகிறதா? ஆக்கிப் படைத்துப் பணிவிடை செய்யவே படைக்கப் பட்ட ஜன்மம் தானே இது........."

வறுமை செய்து வரும் வறட்சி அவளைப் பொறுமையிழக்கச் செய்து விட்டது.

"என்ன ரஸிகா! கூப்பிட்டாயா?"

"நான்கு நாட்களாகச் சொல்லுகிறேன்; வீட்டில் ஒரு சாமானும் கிடையாது, யாரிடமிருந்தாவது பணம் வாங்கிக் கொண்டு வாருங்களென்று. காதில் வாங்கிக் கொண்டால் தானே........."

"மிகவும் அவசரமாக வேண்டுமா?"

"அடுப்பு மூட்ட வழியில்லை."

"யாரிடமாவது கடன் வாங்கிக்கொள்ளேன். சீக்கிரத்திலேயே கொடுத்துவிடலாம்."

"தெரிந்தவர்கள் எல்லாரிடத்திலும் போய் வாங்கியாகிவிட்டது. எவ்வளவு தடவைதான் கடன் கேட்பது?"

"கொஞ்சம் பொறுத்துக்கொள்ளேன் ரஸிகா! இந்த மஹா காவ்யம் பூர்த்தியானதும் நமக்குப் பொன்னும், மணியுமாக வந்து குவியப்போகிறது, பார்!. நீ நகையும் பட்டுமாக ஜ்வலிக்கப்போகிறாய்."

"நான் நகைகளுக்கும், பட்டுக்களுக்கும் ஆசைப்பட்டுக்கொண்டா இருக்கிறேன்? நாம் வயிறு வாடாமல் வாழ்ந்தாலே போதும்."

"வழியே இல்லையா, ரஸிகா!"

"உங்களை வற்புறுத்தவேண்டும் என்கிற ஆசையா எனக்கு? அடகு வைப்பதற்கும் ஒரு திருகாணிகூடக் கிடையாது."

"பாவம்! அபலை. எனக்கு வாழ்க்கைப் பட்டு என்ன சுகத்தைக் கண்டிருக்கிறாள். வாழ்விக்க வந்தவளுக்கு வயிற்றுப்பாட்டைக் கூட வகையாகச் செய்யாதவன் நான். வழிப்போக்கனை மணந்திருந்தால்கூட நிம்மதியாக வாழ்ந்து வருவாள்."

அவரது இந்த உள்ளத்தின் வேக்காட்டை அவருடைய தோற்றமே அம்பலப்படுத்தி விட்டது.

"ஏன் உங்கள் முகம் இப்படி விகாரமடைந்துவிட்டது? ஐயோ நான் ஏன் இதைச் சொல்ல வந்தேன். ஸ்வாமி! நான் எப்படியாவது பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் போங்கள்; நிம்மதியாக எழுதுங்கள்."

"இனி எழுதுவதா?......நிம்மதியுடனா!.... அந்த அருள் தேவியை வசப்படுத்த உள்ளத்திற்கு அமைதி வேண்டும். ரஸிகா! சஞ்சலமான உள்ளக் கிளர்ச்சிகள் படுகுழிகளைப் பறித்துக் கொண்டே போகும் பொழுது அமைதிக்கு இடமேது?"

"எல்லோரும் செழிப்பாக வாழும்போது நாம் மட்டும் வறுமையோடு மன்றாட வேண்டியிருக்கிறதே."

"அடி பைத்தியமே! கவிகுலத்திற்கேவாழ்க்கையாக உரிமை கொண்டாடும் இந்தப்பிணி என்னை மட்டும் விலக்கியா வைத்து விடும்? கொஞ்ச காலமாவது கஷ்டப்பட்டுத்தானாக வேண்டும். இந்தா! இதைக் கொண்டுபோய் அடகு வைத்து வேண்டியதை வாங்கி வா"

"என்ன?......! இந்த ஓலையையா?......!! எழுதிக் கொண்டிருப்பதைக் கொடுக்கிறீர்களே; அதிலும் ஒருவரிதான் எழுதி முடித்திருக்கிறீர்கள்........."

"அதனால்தான் கொடுத்தேன். இதைத் தவிர வேறு என்னிடம் இப்போது என்ன இருக்கிறது? அது வெறும் ஓலை அன்று ரஸிகா! என் அறிவிற்கே அதுதான் அடைக்கலம். அதை அடகு வைப்பது என் மஹா காவ்யத்தையே—என் வாழ்வின் லட்சியத்தையே—அடகு வைப்பதாகும். இதை மீட்ட பிறகுதான் காவ்யத்தைத் தொடர்ந்து எழுதுவேன், புரிந்ததா? அது முடிந்து விட்டால்தான்.........சரி, நீ போ!"

"வேண்டாம் நாதா! நான் எப்படியாவது ...."

"அசடே! நீ ஏன் கண்ணீர்விடுகிறாய்? நான் சொல்லுகிறபடி செய். போ!"

"இதன் பெருமையை அறிந்து போற்ற இங்குள்ளவர்களுக்குத் திராணி கிடையாதே."

"அப்படியில்லை ரஸிகா! அரிய பொக்கிஷங்களை அள்ளிக்கொடுத்தாலும் பயன்படுத்திக்கொள்ளாது வெறுக்கும் மடமை இன்னும் வளரவில்லை. பக்கத்து வீதியில் என் பழைய நண்பர் வர்த்தமானர் இல்லத்திற்குப் போ! அவர் தேசாந்தரம் போய்ப் பல வருஷங்களானாலும் அவர் மனையாள் இருப்பாள். நல்ல குணமும், படிப்பும் உள்ளவள். இதன் மதிப்பும் தெரிந்தவள்."

2

"குணபூரணி!................."

"வாருங்கள்! வாருங்கள்!! இனி அத்தியும் பூத்துவிடும்."

"ஒரு அவசரமான காரியம். பிரமாதமில்லை. செலவுக்குக் கொஞ்சம்..........."

"அடடா! இதற்கு ஸங்கோசப் படுவானேன்? சொல்லியனுப்பினால் நானே கொண்டுவந்து கொடுக்கிறேன். சரி. இதோ, உட்காருங்கள்."

"இதனால் என்ன தேய்ந்தா போய்விடுவேன்? இந்தா, இதை வைத்துக்கொண்டு கொஞ்சம் பணம் கொடு. சீக்கிரத்திலேயே மீட்டுக்கொள்கிறேன்."

"என்ன அம்மா இது! என்னைக் கேலி செய்கிறீர்களா? அடகு கேட்டு வட்டி வாங்குபவளென்று என்னைத் தீர்மானித்து விட்டீர்கள். அதுவும் உங்களிடத்தில்!"

"கோபித்துக்கொள்ளாதே குணபூரணி! என் கணவருடைய கட்டளை. விரோதமாக நினைத்துக்கொள்ளாதே. வாங்கிக்கொள்ளேன்."

"உங்கள் உடைமை உங்களிடமே இருக்கட்டும். கடமையைச் செய்யக் கட்டுப்பாடா வேண்டும்? நன்றாக இருக்கிறது!"

"அப்படிச் சொல்லாதே, குணா! அவர் என்னைக் கோபித்துக்கொள்ளுவார். இதென்ன பொன்னா, வைரமா! சிறு ஓலை. நீ இதை வாங்கிக்கொண்டால்தான் நானும் வாங்கிக் கொள்வேன்."

"சரி, உங்களிஷ்டம். இந்தாருங்கள்."

"எதற்கு இவ்வளவு பணம்! குணபூரணி! சொல்வதைக் கேள், கொஞ்சம் கொடு போதும்."

"இதிலேயுமா பிடிவாதம்? நான் கொடுப்பதை வாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்."

"சரி, அப்படியே. குணா! இந்தப் பையன் யார்? உன் பிள்ளையா? உன் கணவரிடமிருந்து ஏதாவது தகவல் வந்ததா?"

"ஆமாம் அம்மா! இவன்தான் என் மூத்த ஒரே பிள்ளை. வயது பதினாறு ஆகிவிட்டது. இவன் என் வயிற்றிலிருக்கும் பொழுது போனவர் என் கணவர். இப்பொழுது ஸிம்ஹளத் தீவில் இருக்கிறாராம். இந்த மாதத்திற்குள் வந்துவிடுவதாகச் சொல்லியனுப்பினார். மாதமும்தான் முடியப் போகிறது........."

"தாமதிக்காமல் வந்துவிடுவார் குணா! கவலைப்படாதே. குலதர்மத்தை விடமுடியுமா? வணிகருக்கு வாணிகம்தானே சிறந்தது."

"கிளம்பிவிட்டீர்களா? இதோ பாருங்கள்! பணத்தைக் கொடுத்துவிட்டுத்தான் ஓலையை வாங்கவேண்டுமென்று எண்ணாதீர்கள். தேவையானபோது உரிமையோடு வாங்கிக் கொண்டு போங்கள். அப்படியே நடந்துகொண்டால்தான் நான் ஒப்புக்கொள்ளுவேன், ஆமாம்."

3

இரவு இரண்டாம் ஜாமம் ஆரம்பமாகி விட்டது. வணிகர் வர்த்தமானர்வண்டி வண்டியாகப் பெட்டிகளுடனும், சாமான்களுடனும் வந்து இறங்கினார். அவர்

நினைத்து வந்ததற்கு அதிகமாகவே பல புது மைகளுடன் தாராபுரி காட்சியளித்தது. 'கடல் கடந்து சேகரித்த செல்வங்களைத் தம் மனைவி பார்த்துப் பிரமிக்கவேண்டும், வியப்பும், பூரிப்பும் போட்டியிடும் அவள் எழில் முகத்தைக் காண வேண்டும், களிக்கவும் வேண்டும்'' என்ற அடங்காத ஆர்வம் அவருக்கு. பிரிந்து எவ்வளவு வருஷம் ஆயிற்று! வேலைக்காரன் கதவைத் திறந்தான். சாமான்களைத் தகுந்த இடங்களில் பத்திரப்படுத்தினர், பிறகு படுக்கையறையில் நுழைந்தார், மங்கலான விளக்கைத் தூண்டியதும் வெளிச்சம் பரவிற்று. மஞ்சத்தை ஆர்வம் பொங்கப் பார்த்தார். தம் மனைவிக்குப் பக்கத்தில் ஒரு ஆண் படுத்துத் தூங்குவதையும் கண்டார். அவருக்கு முன் இருந்த ஆனந்தம் போய்விட்டது. ஆர்வமும் அழிந்து விட்டது. ஆத்திரம்தான் வந்தது. காண்பதை நம்பும் உள்ளத்திற்குப் பகுத்தறிவும் உறுதுணையாகி விட்டது, அவருக்குச் சிந்திக்கவும் சக்தியில்லை. நிதானிக்கவும் நேரமில்லை, கண் மூடித்தனமாக மூர்க்கத் தனம் மேலோங்கி விட்டது. கைகள் துடிக்க, கால்கள் ஆட, உடம்பே நடுங்க ஓர் அரக்க வெறி அவரது அங்கங்களில் கோரதாண்டவமாட ஆரம்பித்து விட்டது, உறையிலிருந்து வாளை உருவினர். உத்தமியென்று நம்பியிருந்த தம் மனைவி கள்ளக் காதலனுடன் உறங்கிக் கொண்டிருப்பதாக அவர் தீர்மானித்து விட்டார். அவர்களுக்குத் தண்டனை கண்டதுண்டமாக்கி விடுவதுதான் என்றும் முடிவு கட்டி விட்டார். கண்கள் சிவக்க கட்டிலருகே விரைந்தார்.

அப்பொழுது அந்த ஓலை அவரைத் தடுத்தது.

மஹாகவி பாரவி அடகுக்காகக் கொடுத்த ஓலைதான். வாழ வழி காட்டும் அக்கவியின் ஓலையிலுள்ள ஒரே வரியை, படுக்கும்போதும், எழுந்திருக்கும் பொழுதும் படிப்பதற்காகக் குணபூரணி மஞ்சத்தின் ஓரத்திலேயே அதைத் தொங்க விட்டிருந்தாள். காற்றில் மேலே எழும்பி அசைந்த அந்த ஓலை— ''பொறு! பதருதே!'' என்று வர்த்தமானருக்கு ஜாடை காட்டியது. அவர் அதைக் கவனித்தார். கையிலெடுத்துப் படித்தார். அதிலெழுதியிருந்தது அவரது மனக் கொதிப்பைத் தணித்து விட்டது. அவ்வளவு ஆற்றல் அந்த ஒரு வரிக்கு இருந்தது. யானையின் மதத்தை மாவெட்டி அடக்குவது போல அவரது வெறியை அது அடக்கி விட்டது. அவரும் அடங்கினர். அந்த ஓலையில்—

> ''எந்தக் காரியத்தையும் சிந்திக்காமல் திடீரெனச் செய்யக்கூடாது. ஏனெனில் ஆத்திரமூட்டும் அவிவேகம் மிகப் பெரிய இன்னல்களுக்கெல்லாம் இருப்பிடம்.'''

என்று கவி விளக்கியிருந்தார்.

இவ்வளவையும்—

> ''ஸஹஸா விதநீத ந க்ரியாம் அவிவேக பரமாபதாம் பதம்!''

என்ற ஒரே வரியில் அமைத்திருந்தார்.

மஹாகவி பாரவியின் 'கிராதார்ஜுனீய' காவ்யத்தில் இரண்டாவது ஸர்க்கத்தினுடைய முப்பதாவது சுலோகத்தின் முதல் வரிதான் அது. அக்ஞாதவாஸ காலத்தில், துர்யோதனனிடம் ஒரேயடியாகப் போர் தொடுக்கவேண்டுமெனத் துடிக்கும் பீமனைப் பார்த்துத் தருமர் கூறும் நீதிமொழியாக அதைக் கவி இயற்றியிருக்கிறுர்.

அந்த வரியைப் பாரவி எழுதி முடித்த பொழுதுதான் அவரது மனைவி ரஸிகா அவரிடம் பணம் கேட்டாள். அதற்குமேல் அவர் அப்பொழுது எழுதவில்லை. எழுத முடியவில்லை.

அவரது காவ்யம் பூர்த்தியடைந்தபின் செய்யவேண்டிய பணியை, அந்த ஒரு வரி முன்னமேயே ஒத்திகை செய்து காண்பித்து விட்டது. வர்த்தமானருக்கு அந்த வெறி கொஞ்சம் அடங்கிற்று. ஆனுல் சாந்தம் நிலவவில்லை.

''இவளை எழுப்பி, கையும் களவுமாகப் பிடித்து, அப்படியே ஒரே வீச்சாக இவர்களை வெட்டிவிடவேண்டும்.'' என்று தீர்மானித்துக்கொண்டார்.

அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த குணபூரணி அலறிக்கொண்டு எழுந்தாள். சந்தேகத்தால் ஆத்திரங்கொண்ட கணவர் தன்னை எழுப்ப, வாயால் கூப்பிடவும் விரும்பாமல், கையால் தொடவும் பிடிக்காமல் காலால் உதைத்தார் என்பது அவளுக்கெப்படித் தெரியும்? பேயறைந்தது போலிருந்தது. திடுக்கிட்டு எழுந்தவளுக்கு அவரை அடையாளம் கண்டுகொள்ளச் சிறிது நேரமாயிற்று. அவளுக்குப் பேரானந்தத்தின் போதை யேற்றத்தோடு தூக்கக் கலக்கமும் கலந்திருந்தது. கணவருடைய சிவந்திருக்கும் கண்களையும் வாளைக் கையில் பிடித்துக் கொண்டு நிற்கும் கோரத்தையும் கூட அவள் கவனிக்கவில்லை.

''அடே, குணசேகரா! எழுந்திருடா. உன் அப்பா வந்து விட்டாரடா. இதோ பார்! எழுந்திரு.........'' என்று தன் பக்கத்தில் படுத்திருந்த மகனைப் பரபரப்புடன் எழுப்பி

பண்டித நேரு ஆசிய மகாநாட்டை ஆரம்பித்துச் சொற்பொழிவு ஆற்றுகிறார்.



போலீஸ் அணிவகுப்பை ஸர்தார் படேல் பார்வையிடுகிறார்.

னுள். வர்த்தமானருக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. பிறகு எல்லாம் புரிந்து விட்டது. தாம் போகும்போது குணபூரணி கருத்தரித்திருந்ததும் அவருக்கு நினைவு வந்தது. விவேகம் நிறைந்த தம் மனைவி நெறிதவற மாட்டாள் என்ற நம்பிக்கையும் வந்தது. தம் மடமை, தமக்கேற்பட்ட கண் மூடித்தனமான வெறி, தாம் செய்ய, விருந்த பாதகச் செயல், அலங்கோலமான தம் பயங்கரத் தோற்றம் இவையெல்லாம் உருவெடுத்து வந்து வர்த்தமானரை நடுங்கச் செய்தன: நாணமுறவும் செய்தன. மனைவியைக் கட்டிக் கொண்டார். மகனையும் தழுவிக் கொண்டார். பலவித உணர்ச்சிகள் ஒரே சமயத்தில் மோதியதால் ஆயாஸமடைந்த அவர் நிதானத்திற்குவரச் சிரமப்பட வேண்டியதாயிற்று. அவர் பேச்சில் படபடப்பு மட்டும் தடுக்க முடியாததாகி விட்டது,

வர்த்தமானர் அந்த ஓலையைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் பல கேள்விகளைப் பல தடவை கேட்டு விட்டார்.

குணபூரணி விவரமாகச் சொன்னுள். தங்கள் வாழ்வை நிலை நிறுத்திய அந்த ஓலையையும், அதை இயற்றிய பாரவியையும் கொண்டாடுவதிலும், துதிப்பதிலும் அவர்கள் ஓய்வடையவே விரும்பவில்லை.

பலகாலம் பிரிந்து கூடிய தம்பதிகளுக்குப் பேச்சுக் கென்ன குறைவு? இன்பக் கேளிக்கையில்தான் சலிப்பேது? இயற்கையின் நியதிக்குக் கட்டுப்பட்ட இரவுமட்டும் கழிந்து கொண்டிருந்தது.

4

வறுமை தங்களை அரை வயிற்றுச் சோற்றுக்கே திண்டாட விடுவதை வெட்ட வெளிச்சமாக்கத்தான் இந்த உதய சூரியன் எழும்புகிறுனென்று பாரவி பெரு மூச்சு விட்டுக்கொண்டிருந்தார். தட்டுக்களில் பொன்னும், பட்டும், பணமும், பழமுமாகப் பின் தொடர வர்த்தமானர் மனைவியையும், மகனையும் அழைத்துக்கொண்டு பாரவி வீட்டிற்கு வந்தார்.

வித விதமான காணிக்கைகளைக் கண்ட பேராச்சரியத்திலும், பிரிந்த நண்பரைக் கண்ட பேரானந்தத்திலும் மூழ்கிவிட்ட பாரவிக்குப் பேசவே செயலில்லை. சீர் வரிசைகள் மாதிரி தட்டுத்தட்டாக வைத்திருக்கும் பட்டுப் புடவைகள், நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் முதலியவைகளைக் கண்டு பிரமித்துப்போன ரஸிகா, எதை முதலில்

டில்லி ராஜ கட்டத்தில் சர்வோதய

பார்ப்பது, எதைப் பிறகு பார்ப்பது என்று தெரியாமல் ஒன்றையுமே நன்ருகப் பார்க்க முடியாமல் தவித்தாள். வர்த்தமானரே வணங்கிவிட்டுப் பேசினுர்: "ஸ்வாமி! சௌக்கியமா? தர்சித்து வெகுகாலமாகிவிட்டது. தங்களது ஓலையை ஏற்றுக்கொள்ளுங்கள். இனிமேல் மஹா காவ்யத்தை உற்சாகத்துடன் தொடர்ந்து பூர்த்தி செய்யுங்கள், ஸ்வாமி!.........இந்த ஓலைமட்டும் என் வீட்டிலிருந்திராவிட்டால் எங்கள் மூவரையும் சுடுகாட்டில் சிதையின் மேல்தான் பார்க்க வேண்டும்."

பாரவியும், ரஸிகாவும் ஒன்றும் புரியாமல் திகைத்தனர். அவர்களது விரிந்த ஒளிவீசும் கண்களிலும் அசையும் உதடுகளிலும் கேள்விக் குறிகள் துடித்துக்கொண்டிருந்தன.

வர்த்தமானர் நடந்ததை விளக்கிச் சொன்னுர். நடக்கப்போவதையும், நடக்கவேண்டியதையும், நடக்க முடியாததையும்கூடக் கற்பனையில் காண்பதும், காண்பித்துவிடுவதுமான திறமை படைத்த மஹா கவிக்குக்கூடத் தம் ஓலை இவ்வளவு வேலை செய்யுமென்று தோன்றவில்லை. பாரவியும் சமாளித்துக்கொண்டு பேசினுர்.

"ஏதோ நாங்கள் செய்த பூஜாபலன் தர்மாத்மாக்களுக்கு வரும் பேராபத்துகளெல்லாம் பொசுங்கிப் போய்விடுமென்று சொல்லுகிறதெல்லாம் பொய்யாகவா போய்விடும்? உங்களைக் காக்கவந்த தர்மம் இந்த ஓலையைக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது. இதற்காக எதற்கு இவ்வளவு சன்மானம்?

"என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்?...! மதிப்பிட முடியாதது உங்கள் ஓலை. அதிலுள்ள அந்த ஒருவரிக்கு எவ்வளவு பொன் கொடுத்தாலும் ஈடாகாதே என்ற குறை எனக்கு. எங்கள் வாழ்விற்கே புத்துயிர் அளித்த அந்த ஒருவரியையும், உங்களையும் உங்கள் மனைவியையும் எங்களால் மறக்கவே முடியாது. இனி உங்கள் வாழ்நாள் முழுவதிலுமே வறுமை தலை காட்டக் கூடாது. உங்கள் சந்ததியாருக்கும் இந்தப் பிணி பீடிக்காமலிருக்கச் சொத்துக்கள் ஒதுக்கி வைத்திருக்கிறேன், கட்டாயம் தாங்கள் இவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்."

"வர்த்தமானரே! மஹாகாவ்யம் பூர்த்தியடையும் வரை தேவையான செலவுகளுக்கு மாத்திரம் பணமிருந்தால் போதும்; பிறகுதான் சக்ரவர்த்திகளும், அரசர்களும் அள்ளிக் கொடுத்து விடுவார்களே. அதிகம் வேண்டாம் நண்பரே!"



இனக் கொண்டாட்டம்.

"ஸ்வாமி! இந்தச் சிறு காணிக்கையை ஏற்றுக் கொள்வதில் தங்களுக்கேன் தயக்கம்? தங்களது அமர காவ்யம் ராஜதந்திரிகளுக்கு மட்டுமல்ல, பாமர மக்களுக்கும் வாழ்வை வளம் பெறச் செய்யும் ஜீவ நதியாகப் பயன்படப் போகிறது. உலகை உய்விக்கும் அந்த உத்தம காவ்யத்தை உருவாக்கும் உங்களுக்கு உதவியளித்த பேறு எனக்கும் இருக்கக் கூடாதா? ஸ்வாமி! தாங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மறுக்கவே கூடாது."

"சரி, அப்படியே ஆகட்டும் நண்பரே! நீங்கள் திருவும், புகழும் பெருக நீடூழி வாழ்வீர்களாக."

வர்த்தமானர் எல்லோரையும் கூட்டிக் கொண்டு வீடு திரும்பினார். குணபூரணியை வழியனுப்பிவிட்டு வந்த ரஸிகாவைப் பாரவி மகிழ்ச்சி பொங்க—"ரஸிகா நீ பாக்கியம் செய்தவள்." என்று கூறினார்.

அந்தச் சொல்லைவிடக் கூர்மையான அவரது பார்வையில்தான் பல பொருள்கள் புதைந்து கிடந்தன.

இந்திரப்ரஸ்தா பெண்கள் கல்லூரியைச் சார்ந்த மிஸ், மஞ்சு ஷெரி, பி. ஏ. (ஆனர்ஸ்) வகுப்பில் முதன்மையாகத் தேறினார். கவர்னர் ஜெனரலிடமிருந்து பரிசு பெறுங் காட்சி.

கர்நாடக ஸங்கீதம்

III

அபூர்வ ராகங்கள்

கலாதாஸன்

தற்காலத்தில் வழங்கி வருகிற ஸங்கீதம், அதன் பெருமைக்குக் காரணமாயிருக்கிற ராகம் இவைகளெல்லாம் திடீரென்று தோன்றினவையல்ல. நாளடைவில் விருத்தியடைந்தன. ஸங்கீதத்திற்கு ஆதி நூலெனக் கொள்ளப்படும் பரத முனியின் நாட்டிய சாஸ்திரத்தில் ராகம் என்ற பெயரே காணவில்லை. ஸங்கீத மகரந்தம் என்னும் கிரந்தத்தில் தன்யாசி, தேவகாந்தாரி, பூபாளம் முதலிய ராகங்கள் கூறப் பட்டிருக்கின்றன. ஔமாபதம் எனும் நூலில் ராகத்வனி, ஆபீரி, தரங்கிணி முதலிய 36 ராகங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. ஸங்கீத உலகில் விசேஷ புகழ் பெற்ற கிரந்தமாகிய ஸங்கீதரத்னாகரத்தில் 30 கிராம ராகங்களைப் பற்றியும், பாஷாங்கம், உபாங்கம், க்ரியாங்கம் முதலிய வகைகளைப்பற்றியும் விவரிக்கப்பட்டிருக்கிறது. புராதன தமிழ் நூல்களில் 12,000 ராகங்களைப் பற்றிக் கூறியிருப்பதாகத் தெரிய வருகிறது. ஸங்கீத நாராயண எனும் கிரந்தத்தில் கோபிகள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸாந்நித்யத்தில் 16,000 ராகங்களைப் பாடினதாகவும், ஆனால் அதில் சுமார் 180 ராகங்கள் மட்டுமே பிரசாரத்திலிருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேளம் என்றும் ஜன்ய மென்றும் உள்ள பிரிவு ஏற்பட்டது வெகு காலத்திற்குப் பிறகுதான். கல்லிநாதர் மேளனம், ஜன்யம் என்ற பதங்களை உபயோகப் படுத்தியிருந்தாலும் முதன் முதலாக மேள ராகம் என்ற பதத்தைக் கிலுப்தமான பொருளோடு உபயோகப் படுத்தினது ராமாமாத்தியர் தானென்று தீர்மானிக்கலாம். அவர் 19 மேளங்களையும், 66 ஜன்ய ராகங்களையும்பற்றி விவரித்திருக்கிறார். ஸோமநாதர் தமது ராகவிபோதத்தில் 23 மேளராகங்களையும் 76 ஜன்ய ராகங்களையும் சொல்லுகிறார்.

மேளராகங்களைச் சாஸ்திரஸம்மதமான ஒரு ஏற்பாடுக்குக் கொண்டுவந்து, சரியானபடி நிர்ணயம் செய்து, 72 மேளங்களாகக் கணக்காக்கி, தகுந்த லக்ஷணங்களையமைத்த பெருமை வேங்கடமகிக்கே உரியது. ஆனால், இந்த 72 மேளங்களில் சிலவேதான் ஸங்கீதத்திற்கனுகுணமாகக் கையாளப்பட்டன. மற்றவை வெறும் கணக்குக்கு மாத்திரமே இருந்தன அந்தக் காலத்தில். தற்காலத்தில் வழங்கி வருகிற ராகங்கள், அதன் பெயர்கள் இவைகளை முறைப்படுத்தியது அகளங்கர் என்ற ஆந்திர தேச மஹான்தான். வேங்கடமகியின் காலத்திற்கு அடுத்தபடி தோன்றினவர். ஸங்கீத ஸாரஸங்க்ரஹம் என்ற நூலைத் தெலுங்கு பாஷையில் எழுதி அதில் பற்பல ராகங்களின் பெயர்களையும் ஸ்வரூபங்களையும் விளக்கினார்.

அகளங்கர் கொடுத்த பெயர்களைத் தான் கோவிந்தாசாரியர் தமது ஸங்கிரஹ சூடாமணியில் உபயோகப்படுத்தி யிருக்கிறார். நமக்கு இப்போது ஆதார கிரந்தமாக இருப்பது கோவிந்தாசாரியாருடைய ஸங்கிரஹ சூடாமணிதான். இதனுடைய பிரதிகள், துண்டுதுண்டுகளாகப் பலபேர் கைகளிலகப்பட்டு அவர்களால் உபயோகப்படுத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது. மானம்பூச்சாவடி வேங்கடசுப்பய்யர், மகா வைத்யநாதய்யர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் முதலிய பெரியவர்கள் அவைகளை உபயோகப்படுத்தி வந்ததாகச் சொல்வதுண்டு.

"ராகம்" என்பதென்ன? மதங்கர் இதைத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்.

யோஸௌத்வனி விசேஷஸ்து
ஸ்வரவர்ணவி பூஷித:1
ரஞ்சகோ ஜன சித்தானும்
ஸராக: கதிதோ புதை:||

ஜனங்களின் ஹ்ருதயத்தை ஆகர்ஷித்து ரஞ்சிப்பதுதான் ராகத்தின் முக்கிய உத்தேசம். இதையே ஆதாரமாகக் கொண்டுதான் ராகங்கள் உற்பத்தியாயிருக்கின்றன.

எந்தக் காலத்திலும் லக்ஷ்யம் லக்ஷணமென்ற பிரிவுகள் இருந்திருக்கின்றன. லக்ஷ்பத்தை ஆதாரமாகக் கொண்டுதான் லக்ஷணமேற்பட்டிருக்கிறது. லக்ஷணத்துக்கும் லக்ஷ்பத்திற்கும் வேற்றுமை உண்டாகும்போது லக்ஷ்யத்தையே முக்ய மாகக் கைப்பற்றி லக்ஷணத்தைஅதற்குத் தகுந்தபடி மாற்றவேண்டுமென்று பெரியார்கள் நிஸ்ஸந்தேகமாகக் கூறியிருக்கிறார்கள்.

லக்ஷ்யப்ரதானம் கலு சாஸ்த்ரம்.

இப்படி எல்லாக் காலங்களிலும் வேற்றுமைகள் ஏற்பட்டிருக்கின்றன. புதிய புதிய ராகங்கள் தோன்றியிருக்கின்றன. அநேகமாக எந்தக் காலத்திலும் பழக்கமுள்ள ராகங்களென்றும் அபூர்வ ராகங்களென்றும் பிரிவு இருந்திருக்க வேண்டும். சில ராகங்களின் லக்ஷணங்களிலே காலக்ரமத்தில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கலாம். கோவிந்தாசாரியார் வேங்கடமகியின் காலத்திற்கு அடுத்த பிற்காலத்தில் இருந்தவர். வேங்கடமகி விவரிக்காத அநேக ராகங்களுக்குக் கோவிந்தாசாரி லக்ஷணங்கள் கொடுத்திருக்கிறார். (லிஸ்ட் I). மேலும் கீழே கண்ட ராகங்களுக்கு இவ்விருவர்களும் வித்தியாசமுள்ள லக்ஷணங்களைக் கூறியிருக்கிறார்கள். (லிஸ்ட் II). ஸமீப காலத்தில் அநேக புதிய ராகங்கள் தோன்றியுமிருக்கின்றன. (லிஸ்ட் III). 18-ஆவது நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்த வெங்கண்ணகவீந்த்ரர் எனும் நூலாசிரியர் தாமியற்றிய பார்வதி பரிணயம் எனும் நாடகத்தில் மோஹன கல்யாணி, ரூப கல்யாணி, மங்கள கௌசிக, பிருந்தாவன சாரங்க, கௌரி, பந்து வராளி என்கிற அபூர்வ ராகங்களில் பாட்டுகளைக் கவனம் செய்திருக்கிறார். இப்போது நாம் அபூர்வ ராகங்கள் என்று சொல்லும் ராகங்களே கொஞ்ச காலத்திற்குப் பிறகு ஸாதாரண ராகங்களாகலாம். புது அபூர்வ ராகங்களும் தோன்றலாம்.

வேங்கடமகிக்குப் பிற்காலம் தோன்றி ஸங்கிரஹ சூடாமணி என்னும் நூலை எழுதிய கோவிந்தாசாரியார் அந்தக் கிரந்தத்தில் 72 மேள ராகங்களுள்பட 366 ராகங்களுக்கு லக்ஷண கீதங்களைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவைகளெல்லாம் அந்தக்காலத்தில் பிரசாரத்திலிருந்திருக்க முடியாது. அவைகளில் அநேக ராகங்களில் கீர்த்தனங்கள் செய்து அவைகளுக்கு உயிரும் உடலும் அளித்தவர் தியாகப் பிரம்மமே. ஆனால் அந்தத் தியாகராஜஸ்வாமிகூட எல்லா மேள கர்த்தா ராகங்களிலேயும் உருப்படிகள் செய்ததாகத் தெரியவில்லை. 72 மேளங்களில் சுமார் 34 மேளங்களில் மாத்திரமே கீர்த்தனங்கள் நடமாட்டத்திலிருப்பதாகத்தெரியவருகிறது (லிஸ்ட் IV). மேலும் ஸங்கிரஹசூடாமணியில் லக்ஷணப்படுத்தியுள்ள 366 ராகங்களில் சுமார் 200 ராகங்கள்தான் தியாகராஜ ஸ்வாமியால் உபயோக படுத்தப்பட்டிருப்பதாகத் தீர்மானிக்கலாம். நட பைரவி, வாசஸ்பதி, ஹேமவதி, ஷண்முகப்ரிய, சுபபந்துவராளி, கமனசரம முதலிய மேள ராகங்களில் கீர்த்தனைகள் பிரசாரத்தில்லை. பற்பல ராகங்களில் தியாகராஜ ஸ்வாமி கீர்த்தனங்களை அமைத்திருந்தாலும் அவைகளெல்லாம் ஒன்றுபோல் பிரசாரத்திற்கு வரவில்லை. அபூர்வ ராகங்களாகவே இருந்துவந்தன. ஸமீப காலத்தில் நமது வித்வான்களில் சிலர் இந்த அபூர்வ ராகங்களில் சிலவற்றிற்குத் தனி ஸ்வரூபம் கொடுத்து அவைகளை ராகமாக ஆலாபனம்செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். சில ராகங்கள் நமது பழைய கிரந்தங்களில் லக்ஷண ஸகிதம் கூறப்பட்டிருந்தாலும், தியாகராஜ ஸ்வாமி அவைகளில் கீர்த்தனைகள் செய்யாததால் பிரசாரத்திற்கு வராமல் அபூர்வமாகவே இருந்தன. பிறகு ஸ்ரீ முத்தய்யாபாகவதர் அவர்கள் அவைகளில் உருப்படிகளைச்

செய்து அவைகளுக்கு ஒரு தனியழகைக் கொடுத்தார். கௌடமல்லாரு, விஜய நாகரி என்ற ராகங்களுக்கு ஸங்கிரஹ சூடாமணியில் லக்ஷண கீர்த்தனங்களிருக்கின்றன. ஆனால் ஸ்ரீ தியாகப்ரம்மம் அந்த ராகங்களைக் கையாண்டதாகத் தெரியவில்லை. அவைகளை வெளியாக்கிச் சோபிக்கச்செய்த பாக்யம் முத்தய்யா பாகவதரவர்களுக்குத்தான் வாய்த்தது. இவைகளைத் தவிர நான் முன் கூறியபடி அநேக புது ராகங்களும் ஸமீபகாலத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன, ரஞ்சகமாகவும் உள்ளன.

72 மேள கர்த்தா பத்ததியிலுள்ள சில மேள ராகங்களே அபூர்வங்களாய் இருக்கின்றன. சில கணக்குக்கு மட்டும் இருக்கின்றனவேயல்லாது அவைகளுக்கு ரஞ்சகமான தனி பாவமிருப்பதாகத் தோன்றவில்லை. 72 மேளங்களுக்கும் லக்ஷண கீதங்களிருக்கலாம். லக்ஷ்யத்தில் ரஞ்சகத்துவம் எல்லாவற்றிற்கும் இருக்கிறதென்று சொல்லமுடியாது. சில ஜன்ய ராகங்கள் பிரமாதமான அழகும் ருசியும் அமைந்துள்ளன. ஆனால் சில மேளங்கள் விசேஷ ருசி ஒன்றும் இல்லாமலிருக்கின்றன. தானரூபி, யாகப்ரிய, ராகவர்த்தனி, நீதிமதி, தர்மவதி, நாடகப்ரிய, திவ்யமணி, ஸுசரித்ரம், ரஸிகப்ரியா முதலிய ராகங்கள் மேளங்களாயிருந்தாலும் பிரசாரமடையவில்லை, காரணம் அவைகளுக்கு அவ்வளவு ரஞ்சகத்வமில்லை. ஹரிகாம்போதி, சூர்யகாந்தம் முதலிய மேளங்கள்கூட மோஹனம், ஸாவேரி போன்ற ஜன்ய ராகங்களுடைய ரஞ்சகத்வத்தையோ, வெகுநேரம் விஸ்தாரம் செய்யத் தக்க தன்மையையோ உடையதாகத் தெரியவில்லை. ஆனால்சில ஆபூர்வராகங்களுக்குத் தனி ஸ்வரூபம் கொடுத்து, ருசிகரமாக்கி அவைகளைப்பாடலாம், உதாரணமாக சாருகேசி, சுபபந்துவராளி முதலிய சில ராகங்களைத் தனி ருசியுடன் பாடலாம். கொஞ்சம் கவனத்துடன் பாடவேண்டும். இல்லாமல், வெறும் ஸ்வரங்களாகப்பாடினால் சாருகேசி சாருகேசியாக இருக்காது, சங்கரதோடியாகும். அந்த ராகத்தில் சமீப காலம் வரை ஒரே உருப்படிதான் இருந்தது, ஸ்ரீ த்யாகப்ரம்மத்தினுடைய ஆடமோடிகலதா என்ற கீர்த்தனம். அதிலிருந்துதான் அந்த ராகத்தின் ஸ்வரூபம் வெளிப்படக் கூடும்; சங்கராபரணத்தினுடையவும் தோடியுடையவும் பாவம் வராமல் அந்த ராக மந்தக் கிருதியில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதேமாதிரி வேறு பல அபூர்வ ராகங்களையுமாராய்ந்து பார்த்து, எவைகளுக்கு நல்ல ரஞ்சகமான ஒரு தனி பாவத்தைக் கொடுக்க முடியுமென்பதைக்கவனித்து, அவைகளைப்பிரசாரத்திற்கு கொண்டுவர வேண்டியது ஸங்கீதாபிமானிகளுடைய கடமை. அதேமாதிரி புதிய ராகங்களையும் வரவேற்க வேண்டியதும் நம்முடைய கடமை. புதியதென்று நல்லதைத் தள்ளுவதும் தவறு, பழையதென்று அர்த்தமில்லாத விஷயங்களை அனுஸரிப்பதும் தவறுதான். நாம் எத்தனையோ ராகங்களை வடக்கிந்திய முறையிலிருந்து எடுத்து நம்முடைய பத்ததியில் சேர்த்திருக்கிறோம். கானடா, பியாக், செஞ்சுருட்டி, ஸிந்து பைரவி முதலிய ராகங்களிப்படி நம்மால் அங்கீகரிக்கப்பட்டவை. சில ராகங்கள் நமது ஸங்கீத நூல்களில் சொல்லியிருக்கிற லக்ஷணங்களை மீறி வேறு ஸ்வரூபங்களை அடைந்திருக்கின்றன. நரங்கிணி சாஸ்திரப்பிரகாரம் சாருகேசியில் ஜன்யம், ஆனால் இப்போது நடமாட்டத்திலிருப்பது 28-ஆம் மேளம் ஹரிகாம்போதியில் ஜன்யமாகக் காண்கிறோம். ஹிந்தோளம் முன் காலங்களில் சதுச்சுருதிதைவதத்தை யுடையதாகத் தெரிகிறது. ஆனால் இப்போது ராகமாகப்பாடும் ஹிந்தோளத்தில் சுத்ததைவதம் தான் பிரயோகிக்கப்படுகிறது. இரண்டும் நன்றாகத்தானிருக்கின்றன. இவைகளுக்கு ஒரே பெயர் கொடுப்பானேன்? பெயரைப்பற்றித் தர்க்கம்செய்து வீண் சச்சரவுக்கிடங்கொடாமல் இரண்டுக்கும் வெவ்வேறு பெயர் கொடுப்பது உசிதம்.

மனித சமூகம் நாளுக்கு நாள் புதிய புதிய அனுபவங்களை அடைந்துகொண்டிருக்கின்றது. புதிய புதிய உணர்ச்சிகளும் உண்டாகின்றன. அதற்கிணங்க ஜீவ ஹ்ருதயத்தைத் தாக்கும் ஸங்கீதமும் விரிந்துகொண்டே வரவேண்டும். அத்தகைய விகாஸத்தில் ஸங்கீத அபிமானிகளுக்கு ஆனந்தமே ஏற்படுமென நம்புகிறேன்.

லிஸ்ட் I

கீழே காணும் ராகங்களுக்குக் கோவிந்தாசாரி லக்ஷணங்களைக் கொடுத்திருக்கிறார். ஆனால் வேங்கடமகி கொடுக்கவில்லை.

சுத்தஸீமந்தனீ,	களாநிதி
களகடா,	ஜயநாராயணி
ஸிந்துராமக்ரிய,	சுத்தபங்காளா
ஜயந்தஸேன,	மஞ்சரி
ஆபோகி,	நாராயணி
மாளவி,	சாம
ஸரஸ்வதி மனோஹரி,	ரவிசந்திரிகா
நவரஸகன்னட,	பருதாரி
மந்தாரி	ஹம்ஸநாதம்
ஜகன்மோகினி	ஜனரஞ்சனி

[கரஹரப்ரிய, ஹரிகாம்போதி ராகங்களைப் பற்றி வேங்கடமகி ஒன்றுமே கூறவில்லை.]

II

பின் வரும் ராகங்களுக்குக் கோவிந்தாசாரியாரும் வேங்கடமகியும் வெவ்வேறு மேளங்களைக் கற்பித்திருக்கிறார்கள் :

ராகம்	கோ. மேளம்.	வே. மேளம்
பூபாளம்	8	7
தேவகாந்தாரி	29	20
உதயரவிசந்திரிகா	20	9
தன்யாசி	8	20
ஆஹிரி	8	20
நீலாம்பரி	28	29
சுத்தஸாவேரி	29	1
கன்னட	29	28
சாம	28	29

* * *

கோவிந்தாசாரியுடைய கையெழுத்துப் பிரதியில் இல்லாத சில ராகங்கள் அச்சிடப்பட்ட அவர் புத்தகத்தில் காணப்படுகின்றன. அவையாவன :

வஸந்தா	பிஹாக்
பரசு	அடாணா
மாஞ்சி	தர்பார்
நாயகி	பூரி கல்யாணி
ஸஹானா	யமுனா கல்யாணி

III. புது ராகங்கள்

1. கதனகுதூஹலம்— பட்டணம் சுப்பிரமணிய அய்யர்
2. ஸ்வயம்புஸ்வரம்—சிவராமய்யா
3. மாயாப்ரதீபம்
4. சக்ரப்ரதீபம்
5. ஊர்மிகா
6. வலஜி
7. புதமனோஹரி
8. பசுபதிப்ரியா
9. கர்ணரஞ்சனி
10. ஸுமனப்ரியா
11. குஹரஞ்சனி

(3–11) } முத்தையா பாகவதர்

* * *

அதிகமாகப் பிரசாரத்திலில்லாத கீழே காணும் ராகங்களில் முத்தையா பாகவதர் கீர்த்தனங்கள் இயற்றி அவைகளுக்குப் பிரசாரமளித்தார் :

புஷ்பலதிகா	கௌடமல்லாரு
ஹரிநாராயணி	விஜயநாகரி
ஹம்ஸாநந்தி	அமிர்தவர்ஷணி

IV

ஸ்ரீ தியாகராஜஸ்வாமியால் கையாளப்பட்ட மேள ராகங்கள் :

ராகம்	கிருதிகளின் எண்
4. வனஸ்பதி	1
5. மானவதி	1
6. ஹனுமத்தோடி	26
9. தேனுக	1
11, கோகிலப்ரிய	1
12. ரூபவதி	1
14. பஹுளாபரணம்	1
15. மாயாமாளவகௌள	4
16. சக்ரவாகம்	2
17. சூர்யகாந்தம்	1
19. ஜம்காரத்வனி	1
21. கீரவாணி	1
22. கரஹரப்ரியா	13
23. கௌரீமனோஹரி	1
25. மாரரஞ்சனி	1
26. சாருகேசி	1
27. ஸரஸாங்கி	1
28. ஹரி காம்போதி	9
29. சங்கராபரணம்	27
30. நாகாநந்தனி	1
33. காங்கேய பூஷணி	1
34. வாகதீச்வரி	1
35. சூலினி	1
39. ஜலவராளி or வராளி	13
40. நவநீதம்	1
44. பவப்ரிய	1
46. ஷட்விதமார்க்கிணி	1
48. திவ்யமணி	1
51. காமவர்த்தனி	14
52. ராமப்ரிய	1
60. நீதிமதி	1
61. காந்தாமணி	1
62. லதாங்கி	1
65. கல்யாணி	20

WEST END WATCH CO.

The MINIATURE "U-2"

WHEN YOU BUY A WATCH,

the seller's reputation is your protection



கெடியாரம் வாங்கும்போது அதை விற்பவர்களின் கீர்த்தியே உங்களின் பாதுகாப்பு!

யார் தயாரித்தது என்று அறியாமல் ஒரு கெடியாரத்தை வாங்குவது சங்கடத்தைத் தேடுவதாகும்! அது பார்வைக்கு நன்றாக இருக்கலாம், ஆனால்...! இந்தியாவிற்கேற்ற கெடியாரங்களைத் தயாரிப்பதில் 75 வருஷங்களுக்கு மேலான அனுபவமுள்ள வெஸ்ட் எண்டு வாட்ச் கம்பெனியார் அளிக்கும் சிறந்த மாடல்களில் ஒன்றை வாங்குவதை விட்டு, ஏதோ ஒரு கெடியாரத்தை வாங்கிப் பிறகு சங்கடப்படாதீர்கள்;

அழகிய உருவம், நம்பகம், நீண்ட நாள் உழைப்பு மூன்றும் ஒருங்கு சேர்ந்தே வெஸ்ட் எண்டு வாட்சுகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த விசேஷங்களினால்தான் வெஸ்ட் எண்டின் பெயர் உயர் ரக வாட்ச் தயாரிப்புக்கு அறிகுறியாக விளங்குகிறது.

மினியேச்சர் "U-2"
வெஸ்ட் எண்டு எவர்
பிரைட் ஸ்டீல் ரூ. 115/-
ரோல்டு கோல்டு, முப்பது
மைக்ரான் குவாலிடி ரூ. 120/-

ஸ்டாக்குகள் இன்னும் போதிய அளவு இல்லை. எனினும் முடிந்த அளவு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கிறோம்.

வெஸ்ட் எண்டு வாட்ச் கோ., பம்பாய் & கல்கத்தா

West End Watch Co.

BOMBAY CALCUTTA

பச்சைக் கிளி

"சாரி."

பல் துலக்கும்போது கறிகாய்த் தோட்டத்தை ஓர்முறை சுற்றி நோக்கி நிமிர்ந்து ஆகாயத்தையும் பார்த்தேன். என்ன ஆச்சர்யம்! முந்திய நாள் சாயந்திரம், வரை ஒரு ராட்சதன் தன் பிரும்மாண்டமான கைகளை மேலே தூக்கியதுபோல் மொட்டையாய்க் காட்சி தந்த வாதராயண மரத்தின் தலைகள், இன்று அப்பெரும் கிளைகளின் நுனி தெரியாமல் இளம் பசுமை நிறமான சிறு இலைக் கொழுந்துகளைத் தாங்கிப் பெருமையோடு நின்றன. என் கண்களையே நம்ப முடியவில்லை. ஒரே இரவிற்குள் இவ்விளந் தளிர்களைப் பெற்ற வளம்தான் என்ன? அவற்றின் பசுமைக்கும், காலைக் காற்றில் புத்தம்புதுக் கொழுந்துகள் லேசாய் அசையும்போது அவை நிறம் மாறிக் கரும் பச்சையாகச் சில இடங்களில் தோற்றம் தந்து, பச்சை வெல்வெட் துணியை யாரோ இதில் போர்த்தினார்களோ என்று என்னைப் பிரமிக்க வைத்த அந்தக் குளிர்ச்சிக்கும் ஈடே இல்லை. பச்சைக் கிளியின் நிறத்தை ஒரு கால் இதற்கு உவமை சொல்லலாம் என நினைத்தேன். அதன் செந்நிற மூக்கு மாத்திரம் இப்பசுமையினின்று பிரிந்தது ஆனாலும் பொருத்தமான அழகிய வேறுபாட்டை இதில் உண்டாக்கக் கூடும். இதை எண்ணும்போது பச்சைக்கிளி என்று அழைக்கப் பெற்ற ஒரு அழகியின் கதையை அநேக வருட முன்பு ஒரு பாட்டியம்மா சொன்னது மனதில் வந்தது. அவள் வாழ்வு முடிந்து எத்தனையோ தலைமுறைகளும் முடிந்து போயின. அக்கதையின் நினைவு மட்டில் மனதின் ஆழத்தில் பதிந்துபோயிருந்தது. எப்பொழுது அவள் ஞாபகம் எழுந்தாலும், அவ்வழகியைக் காணும் பாக்கியம் பெற்றேனில்லையே என்னும் ஏக்கம் தோன்றும். இப்பொழுது அவள் கதையை நீங்கள் கேட்டாலும், இன்றுதான் இது நடந்திருக்க வேணுமென்று நினைப்பீர்கள். சொல்லட்டுமா?

* * *

வளம் பொருந்திய தமிழ் நாட்டிலே, அந்த ஜீவ நதியின் கரை ஓரத்தில் ஒதுங்கி நின்ற ஆயிரக் கணக்கான சிறு கிராமங்களிலே கிளியூரும் ஒன்று. அக்ரஹாரத்து வீடுகளின் கொல்லைகள் குறுகிய அகலத்தில் நீள நெடுகப் போகும். அடர்ந்த வாழைத் தோட்டமும், தென்னை, மா, பலா மரங்களும் தாண்டினால் மூங்கில் காடு தென்படும். அதன் நடுவே சேறும் வழுக்கலும் மறைந்து நிற்கும் சிறிய படித்துறைகள். அவற்றை அலக்ஷியமாய்க் கண்காணித்துக் கொண்டு அந்தப் பிரும்மாண்டமான நதி, அமைதியோடு பொருந்திய வேகத்தில் பாய்ந்து கொண்டிருக்கும். இது ஒவ்வொரு வீட்டிற்கும் கிளியூர் அக்ரஹாரத்தில் ஏற்பட்டுள்ள தனி வசதி.

அவரவர் வீட்டிற்கு ஆகவேண்டிய சகல காரியங்களையும் தங்கள் படித்துறையில் இறங்கிச் செய்துகொள்ளுவர். இருட்டு நேரத்தில் கொல்லைகளைப் பார்க்கவே பயங்கரமாக இருக்கும். வாழை மரங்கள் அவ்வளவு உயர்ந்து வளர்ந்திருக்கும் செழிப்பைக் கிளியூர் அக்ரஹாரக் கொல்லையில்தான் காணமுடியும். மூங்கில் காட்டை நெருங்கினால் ஒற்றையடிப் பாதை உதவிகொண்டு தான் ஆற்றுப் படித்துறையை அடைய வேண்டும்.

சுந்தரேசன் பாட்டனார் காலத்து அந்த வீட்டிலும், அதற்கு அடுத்த வீட்டு முற்றத்திலும் சிறிய உறைக் கிணறுகள் உண்டு. தண்ணீர் இளநீராய்த் தித்திக்கும். இவர்கள் அவ்வூர் பரம்பரைப் பணக்காரர்கள். தம் வீட்டுப் பெண்கள் அடுத்த வீட்டாருடன் வம்புபேசுவதையும், ஆற்றங்கரைக்குப்போய் வீண் பொழுது போக்குவதையும் விரும்பாத அந்த ஆடவர், தம் வீட்டு முற்றத்தில் கிணறு வெட்டி வைத்ததாய் ஊரில் சொல்லிக் கொள்வார்கள். வேறொரு காரணமும் உண்டு.

கிளியூர் சுந்தரேசய்யர் குடும்பம் ஸ்திரீகளின் அழகிற்குப் பெயர் போனதாம். அந்த அழகிகள் ஆற்றங்கரை சென்று குளிப்பதையும், அங்குள்ள காவாலிப் பசங்கள் தம் வீட்டுப் பெண்களைக் காமக் கண்கொண்டு நோக்குவதையும் சகித்துக்கொள்ள, சுந்தரேசய்யரின் கண்டிப்பான சுவபாவம் இடந்தரவில்லை. அடுத்த வீட்டில் வசித்த தம்பி முத்துச்சாமியோ அண்ணனைச் சகல வழிகளிலும் பின்பற்றுபவர்; இருவரும் ஒற்றுமையோடு ஆலோசித்து, தம் வீடுகளில் கிணறுகள் வெட்டினதின் பயனாக, அவர்கள் வீட்

டுப் பெண்களை ஊரார் வெளியே எங்கும் கண்டதே கிடையாது.

இந்த வமிசத்தில் உதித்த சுந்தரேசனின் மனைவி பெயர்பாலம்மாள். பன்னிரண்டாம் பிராயத்தில் இவர்கள் வீட்டு மருமகளாக வந்தாள். அப்போது கிழவர் சுந்தரேசய்யர் உயிரோடு இருந்தாராம். தம் வீட்டுக் கட்டழகிகளின் சௌந்தர்யத்திற்கு வழக்கப் பட்ட கிழவரின் கண்களே பாலம்மாவின் லாவண்யத்தைக் கண்டு கூசினவாம்!

"கோடி சூரியன் உதித்த மாதிரி இருக்கிறாளே, குழந்தை. இவளை உள்ளே அழைத்துப்போய்ச்சுற்றிப்போட்டுத்திருஷ்டி கழியுங்கள். என் பாவிக் கண்ணே பட்டிருக்கும்.'' என்று பேரன் அகமுடையாள் தம்மை அடி பணியும்போது சொல்லி ஆனந்தக் கண்ணீர் விட்டாராம் சுந்தரேசய்யர். அன்று முதல் அவர் உயிரோடு உள்ளவரை பாலத்தைப் பச்சைக் கிளி என்றேதான் அழைப்பாராம்.

ஐயா, கிளியூர் கிராமத்தில் பாலம்மாவின் அழகே ஒரு வருஷம் வரை எங்கும் பேச்சாயிருந்தது. திண்ணையில் கூடும் சீட்டுக் கச்சேரியில், நதிக்கரையில் பெண்கள் நீராடும் சமயம், பாட்டிகள் அப்பளாக் கச்சேரி நடத்தும்போது......என் குழந்தைகள் ஒன்றோடொன்று போட்டியிட்டுக்கொண்டு சுந்தரேச அண்ணாவாத்து மன்னியைக் காண்பதற்காக, ஏதாவது சாக்கில் அவர்கள் வீட்டிற்கு ஓடோடியும் வருவார்களாம்.

அந்தப் பெண் எப்படி ஐயா இருந்தாள்? தங்க நிறம்; கண்ணாடிபோன்ற மினு மினுப்பு; வெற்றிலை எச்சிலை விழுங்கினால் அவள் கழுத்தில் செந்நிறமாய் வெளியே தெரியுமாம், முன்னங்காலை இடிக்கும் சாட்டைபோன்ற கரும் பின்னல்; நீண்ட குமிழ் நாசி; அகன்ற விழிகள்; ஒடிந்து விழும் இடை ....அழகுமட்டுமல்ல. பாலம்மாவின் சோபை ஒரு தேவதைக்கு இருக்கக்கூடும். கண்ணைமட்டும் பார்த்தால் போதுமே, என்பார் ஒருவர்; பல் அழகு ஒன்று போதாதோ என்பார் மற்றொருவர்; மலர்ந்த அவள் முகம் ஈசுவரிக்குத்தான் உண்டு என்பாள் பாட்டி: ஐப்பசி மாதத்து நிலாப்போல் எப்படி இருக்கிறாள் இந்தப் பெண் என்று திகைப்பார் முதல் முறையாக இவளைக் காண்பவர். ஐயோ, இவ்வளவு அழகும் நல்லகாலத்திற்கு இருக்கவேணுமே என்று கையைப் பிசைந்தாள், மாமியார்,

* * *

சுந்தரேசனுக்கு இருபது பிராயம் நடந்தபோது அவன் அசல் பணக்காரர் வீட்டு அசட்டுப் பிள்ளையாகத் திகழ்ந்தான். இடுப்பில் பொடிமட்டை ருமால்; தங்க அரைஞாண்; காதில் வயிரக் கடுக்கன்; வாயில் வெற்றிலை பாக்குக் குழப்பல்——இந்தக் கோலத்தோடு தெருத் திண்ணையில் நான்கு அக்ரஹாரத்துப் போக்கிரிகளுடன் சீட்டுக்கச்சேரி நடத்துவான். கெட்ட வழியில் பிதுரார்ஜித சொத்து முக்கால் வாசியும் தொலைந்துவிட்டது. அடுத்த அகத்து முத்துச்சாமி தாத்தா-சுந்தரேசனின் சிறிய பாட்டனார்—தாம் கண் மூடு முன்பு பத்துத் தலை முறையாய் பாகம் ஆகாமல் ஒன்றாக இருந்த சொத்தைப் பிரிவினை செய்து பத்திரம் எழுதி வைத்துவிட்டார். அவருக்கு ஆத்ம சாந்தி இதனால்தான் கிட்டுமென்று, அவர் படித்து வைத்திருந்த வேதாந்த விசாரம் சொல்லிற்றாம்!

சுந்தரேசன் தனிக்காட்டு ராஜாவானதும் சினேகிதாளும், செலவுகளும், அதிகப்பட்டன. தாயாரும் கண் மூடினாள். வீட்டில் பாலாம்மாவும் இரு குழந்தைகளும் சுந்தரேசனும் மிஞ்சினர். தம்பதிகள் அந்யோன்யத்திற்குக் குறைவில்லை.

ஒரு நாள் அடுத்த தாலுக்கா டவுனில் ஒரு உற்சவம் நடத்தது. அதற்குச் சுந்தரேசனும், அவனுடைய சீட்டாட்டச் சகாக்களும் போனார்கள். சுவாமி புறப்பாடு முடிந்ததும் ஒரு பெரிய சீட்டுக்கச்சேரி வைத்தனர். பாழடைந்த-அம்மன்கோவில் பிராகாரத்தில் உட்கார்ந்து விடிய விடிய ரங்கு ஆடித் தோற்று, ஜயித்தார்கள். புகையிலையும், கஞ்சாவும், மற்றும் போதை தரும் வஸ்துக்களும், உள்ளே செல்லச் செல்ல, பேச்சே நிதானத்தில் இல்லை.

சுந்தரேசன் கண் தெரியாமல் ஆடித் தோற்றுக் கொண்டிருந்தான். விடியும் சமயம் கணக்குப் பார்த்த பொழுது சுந்தரேசன் கையில் காலணா இல்லை. இது போதாமல் வீடு, வாசல், பங்கு, மனை சகலமும் ஜயித்தவர்க்கு எழுதிக் கொடுத்து மாணிக்க வாசகராய் நின்ற அவனுக்குத் தலை சுழன்றது. மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விட்டான். "ஐயோ பச்சைக்கிளி, உன்னை மோசம் செய்து விட்டேனடி." என்று அவன் பிதற்றியதை யாவரும் கேட்டார்கள்.

இம்மாதிரி நண்பர் ஆபத்துக் காலத்தில் உதவுவார்களா? அவனை அந்த ஸ்திதியில் விட்டு விட்டு ஒவ்வொருவராய்க் கம்பி நீட்டயத்தனிக்கையில், அங்கே ஒரு வில் வண்டி வந்து நின்றது. "சகாராம் ராவ், சகாராம் ராவ்'' என்ற குரலும் அவர்களுக்குள் எழுந்தது.

வண்டியினின்று குதித்துக் கம்பீரமாக இவர்களிடம் நடந்து வந்தவன் ஒரு மகா

ராஷ்ட்ரியன். முன்பு தஞ்சையின் மன்னரா யிருந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்த பெரிய மனிதன். ஐம்பது வயதிருக்கலாம். சிவந்து பருத்த இரட்டை நாடிச் சரீரமும், முகத்தில் நீண்டு வளர்ந்திருந்த மீசையும் முக்ய லக்ஷணம்.

அருகில் வந்து நடந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டான். அப்போதும் சுந்தரேசனுக்கு மயக்கம் தீர்ந்த பாடில்லை. அவனது குடும்ப வர்த்தமானங்களைச் சகாராம் ராவுக்கு நண்பர்கள் தெரிவிக்கையில், பாலத்தின் நிகரில்லாத எழிலைப் பற்றியும் புகழ்ந்து சொன்னார்கள்.

கவனமாய் விஷயங்களைக் கேட்டுக் கொண்ட அப்பணக்கார விடனுடைய உள்ளத்தில் தீய எண்ணம் தலை தூக்க ஆரம்பித்தது. மனதிற்குள் தன் ஆசை நிறைவேறும் வழியைத் தீர்மானித்துக் கொண்டு, அன்று ஆட்டத்தில் சுந்தரேசன் தோற்ற தொகை பூராவுக்கும் தான் ஜாமீனாக நிற்பதாக நண்பர்களுக்கு உறுதி கூறிவிட்டு, அவனைத் தனது வண்டியில் ஏற்றிக் கொண்டு இருவரும் கிளியூர் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது இரவு மணி மூன்று.

வழியில் களை தீர்ந்த சுந்தரேசன் சகாராம் ராவ் தனக்குச் செய்த பெரிய உபகாரத்திற்காக அவனுக்கு நன்றி கூறினான். வண்டியும் வீட்டை அடைந்தது. சுந்தரேசனோடு கூடவே இவனும் இறங்கிவந்து ரேழிப்படியில் உட்கார்ந்துகொண்டு தாகத்திற்கு ஜலம் வேண்டுமென்று கேட்டான்.

தன் வழக்கப் பிரகாரம் சுந்தரேசன் உள்ளே போக யத்தனிக்கையில் அவன் தடுத்து, "நன்றாக இருக்கிறது—நீ உட்கார், அப்பா—தள்ளாடி விழப்போகிறாய். உள்ளே பெண்பிள்ளை யில்லை? கொண்டு வரச்சொல்லேன்." என்று உத்தரவு போட்டது ஏனோ சுந்தரேசனுக்கு அருவருப்பாக இருந்தது.

மூளையே குழம்பியிருந்த அந்தச் சந்தர்ப்பத்திலும்கூட 'பார்யா ரூபவதி சத்ரு' என்று அவன் மனம் தனக்குள் சொல்லிக் கொண்டது. தன் அருமை மனைவியை எவ்வாறு இந்த விடனுக்கெதிரில் வரச் சொல்வதென்று நினைத்து, மனம் கொதித்தான். உள்ளூற அவனைச் சபித்துக் கொண்டே "பாலம், கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா." என்று மனைவியைக் கூப்பிட்டுச் சொன்னான்.

பச்சைக்கிளிக்கு அந்த க்ஷணத்தில் அனர்த்தம் விளைந்தது. அவள் பேதை. ஐயா—தன் மேனியின் வனப்பை, கேவலம், ஒரு சேலையின் முந்தாணி மறைத்துவிடுமென்று நம்புவதுபோல், புடவையை இழுத்துப் போர்த்துக்கொண்டு மின்னல் தோன்றி மறைந்த மாதிரி இவர்களிடையே தண்ணீர்ச் செம்பை வைத்துவிட்டுச்சென்றாள்; இந்தத் துஷ்டன் வாயைப் பிளந்துகொண்டு, தன் மனைவியைப் பார்த்தபோழுது சுந்தரேசனுக்குத் தாங்கமுடியாத எரிச்சல் உண்டாயிற்று.

இதன் பிற்பாடு பிரதி தினம் வில் வண்டியில் ராவ்ஜி கிளியூருக்கு வரத்தவறியதில்லை. சீட்டுக்கச்சேரி சுந்தரேசன் வீட்டுத் திண்ணையிலேயே நடக்கும். அவனுடைய அதிர்ஷ்டம், சகாராம் ராவ்ஜியோடு கூட்டாளியாகி, சீட்டு விளையாட ஆரம்பித்த நாள் முதல் திரும்பி வந்துவிட்டது! சிறிது சிறிதாக நண்பர்களுக்குத் தரவேண்டிய பணத்தையெல்லாம் தந்து, அடமானம் வைத்திருந்த சொத்துக்களையும் மீட்க முடிந்தது.

சுந்தரேசன் பாடு இப்பொழுது குசாலாகி விட்டது. அவனைப்பிடுங்கிக் கொண்டிருந்த சில்லறைக்கடனெல்லாம் தீர்ந்துப்போகவே, மனம் லேசாக இருந்தது. தன் நண்பர்களைத் தலை நிமிர்ந்து பார்க்க அவனுக்குத் தைரியம் ஏற்பட்டது. இந்தத் தெம்பு அதிக நாள் நீடித்து இருக்க முடியவில்லை, பாவம்!

சீட்டாட்டம் தொடர்ந்து நடக்கவே, சுந்தரேசன் அதிர்ஷ்டமும் அவனைவிட்டுப் பிரிந்தது. வேண்டியபொழுதெல்லாம் பண உதவி செய்ய, சகாராம் ராவ் தயாராக இருந்தபடியால், சுந்தரேசன் தன் பழைய வழக்கப்பிரகாரம் ஏராளமான தொகையைத் தோற்கலானான். நாளடைவில் மறுபடி இவனுடைய சொத்துக்கள்யாவும், சகாராம் ராவிற்கு அடமனமாயின. சுந்தரேசனுடைய மதிப்பில் இவன் நிரம்ப நல்லவனென்றே தீர்மானித்திருந்தான். ஆதியில் தன் மனைவியைக் காண இவன் கையாண்ட உபாயத்தை இவன் வெகு நாள் மறக்கவில்லை என்றாலும் அதன் பிற்பாடு ஒரு நாளும் பச்சைக் கிளியைச் சகாராம் ராவ் நேரில் காணவில்லை.

சிறிது காலம் இவ்வாறு சென்றதும் மெள்ளப் பணக்கஷ்டம் தலை தூக்கலாயிற்று. சுந்தரேசனுடைய வரும்படி முழுவதும் கடனுக்குச் செலுத்தப்பட்டதால், குடும்ப கால க்ஷேபம் சிரமமாகி வந்தது. பச்சைக்கிளி துவண்டு போனாள், இரண்டே மாதமாகி இருந்தது அவள் பிரசவித்து; கிருஷ்ண விக்ரஹம் போல் இருந்தது அந்தச் சிசு.

மனைவியின் கஷ்டத்தைக் காண வெட்கி நின்ற சுந்தரேசன் ஒரு நாள் தன் சங்கடத்தைச் சகாராம்ராவ் இடம் மெள்ள எடுத்துச் சொன்னான். அவன் முகம் மலர்ந்தது.

இதே சந்தர்ப்பத்தை நெடுநாளாக எதிர் பார்த்திருந்தவன்போல் புன்னகை புரிந்தான் அக்கொடிய நெஞ்சன். "இதற்காக நீ விசாரப்படாதே, தம்பீ. எவ்வளவு பணம் வேணுமானாலும் நான் ஆச்சு; பயப்படாதே. அடமான பத்திரங்களை யெல்லாம் இந்த க்ஷணமே கிழித்துவிடுகிறேன். எனக்கு மாத்திரம் நீ ஒரு உபகாரம் செய்யவேணும். அது என்னவென்றால், உன் பச்சைக்கிளி கையினால் இந்த ஜன்மத்தில் நான் ஒருமுறை வெற்றிலை பாக்கு வாங்கிப் போட்டுக் கொள்ள நீ அனுக்ரஹம் செய்வதுதான்." என்று கூறி அவனைத் தைரியமாக நோக்கினான்.

இடிவிழுந்தமாதிரி ஆகிவிட்டான் சுந்தரேசன், அதன் பிற்பாடு அவனும் அங்கே நிற்கவில்லை. தான் வீசினகல் எவ்விதமான பழத்தை அளிக்கிறதோ பார்க்கலாம் என்று அலக்ஷியமாக வீடு திரும்பிவிட்டான்.

அன்று முதல் சைத்தான் புகுந்து கொண்ட மாதிரி அந்த விட்டில் துன்பம் நிறைந்தது. ராவுஜி பணங்களைத் திருப்பிக் கொடுத்தால் சௌகர்யமாக இருக்குமென்று ஆள்விடத்தொடங்கினான், கையில் ஒரு சல்லிக் காசு கிடையாது. மனைவியிடம் இந்தச் சங்கட நிலையைச் சொல்லவோ அவனுக்குத் தைரியமில்லை. மனம் புழுங்கினான். இந்த ஹிம்சையை ஒழித்துக் கொள்ள ராவ்ஜி விடுத்திருந்த நிபந்தனையின் தீச்சொல்லும் அவன் மனதின் ஒரு ஓரத்தை அழுத்திக் கொண்டிருந்தது. எவ்வளவு ஒதுக்கித் தள்ளிய போதிலும், நான் இருக்கிறேனே என்று சொல்வதுபோல் அது திரும்பத் திரும்ப மனதில் மிதந்து வந்தது. சுந்தரேசன் மனம் குழம்பினான்.

ஓர் இரவு. நல்ல பௌர்ணமிசந்திரன் தோன்றி வயல் வரப்பை ரம்மியமாக்கிக் கொண்டிருந்தான். சுமார் 11மணி இருக்கும். சகாராம் ராவ் தன் வில்வண்டியில் சுந்தரேசன் வீட்டுவாசலில் வந்து உல்லாசமாய் இறங்கினான். கூடவே மூன்று மல்லர்கள் வந்து இறங்கினர். ஜப்தி செய்யும் ஆட்கள், அவர்கள் மரியாதையாக ஒதுங்கி ஒருபுறம் போய் நின்று கொண்டார்கள்.

சுந்தரேசன் அதிர்ச்சியடைந்தான். சிறிது நாட்களாகவே வலையில் அகப்பட்ட பிராணி போல் தவித்திருந்த அவனுக்கு இப்புதிய இக்கட்டுத் தன்னைவிட்டு எவ்வாறு நீங்கும் என்று மூளை குழம்பத் தொடங்கிற்று. ஜப்தி செய்யும் தருணம் வந்திருப்பதைப் பாலம் அறியக் கூடாதென்று தவித்தான். தவிர்ப்பது எங்ஙனம்.?

சகாராம் ராவ்ஜியைப் படியில் வரவேற்றான். திருப்தியின் அறிகுறியான புன்னகை முகத்தில் தவழ அவன் ரேழிப்படியில் உட்கார்ந்தான். பிறகு, தன் அருமையான மீசையைத் தடவிக் கொண்டே, "என்ன தம்பி, இன்றைக்காவது எனக்குத் தாம்பூலம் கிடைக்கும் பாக்கியம் உண்டோ?" எனக் கேட்டவாறு தான் அழைத்து வந்த மல்லர்களையும் திரும்பி ஒரு அர்த்தபூர்வமான பார்வை பார்த்தான்.

சுந்தரேசனுக்கு இதைக் கேட்டபொழுது ஏற்பட்ட கலவரம், அவனுடைய மூளையைக் குழப்பிவிட்டது. தயங்கிக் குழம்பி, ஏதோ சிந்திக்க முயன்றான்—பலவீனம் அதிகரித்ததேயன்றி தெளிவாகப் பேசவும் முடியவில்லை. அந்த க்ஷணத்தில் அவன் பைத்தியக்காரனாகி இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவ்வளவீதமான வார்த்தைகளைக் கூசாமல், அன்று தன் பத்தினித் தெய்வத்திடம் மொழிய அவனுக்கு மனம் வருமா?

ராயர்வாளை அமரச் சொல்லிவிட்டு உள்ளே சென்று பாலத்தை ரேழி உள்ளில் சந்தித்தான். அவள் குழந்தையை மடியில் வளர்த்திப் பாலூட்டிக்கொண்டிருந்தாள். கணவன் கண்கொட்டாமல் தன்னை நின்றுகொண்டே பார்த்தது அவளுக்கென்னவோ போலிருந்தது.

"உங்களுக்கென்ன வேண்டும்?" என்று துக்கம் கலந்த குரலில் அவள் கேட்டாளாம். அந்தச் சமயத்தில், அத்துர்ப்பாக்கியன், அவளிடம் சொல்லத் தகாத மானக்கேடான அந்த வார்த்தைகளைச் சொல்லி, சம்மதிக்கும் படி துடித்துப் போய் கெஞ்சியிருக்கிறான்.

"அம்மா! இதென்ன விபரீதமடி" என்று பாலம் அலறியதை வெளியில் நின்றவர்கள் கேட்டார்கள். சுந்தரேசன் மனைவியின் வாயைப் பொத்திக் கூச்சல்போடவேண்டாமென்று மன்றாடினான். கணவனை நிதானமாய் ஒரு முறை பார்த்ததும் அவளுடைய துடிப்பு நின்றுவிட்டது. அவனைப் பார்த்து இரண்டு நிமிஷம் கொடுங்கள். புழக்கடைப் பக்கம் போய்விட்டு இதோ வருகிறேன். பிறகு உங்கள் மனம்போல் செய்கிறேன்." என்ற அவளுடைய அமைதியான பதில் சுந்தரேசனுக்கு ஒரு தெம்பை அளித்தது.

சரி, இவ்வளவு சுலபமாய்க் காரியம் ஜயித்துவிட்டோமே என்கிற ஓரே உணர்ச்சியுடன் அவன் வாசற்பக்கம் போனான்.

பாலம் சாவகாசமாய் எழுந்து, குழந்தையின் பால்குடித்த வாயைத் துடைத்து அதை மார்புடன் சேர்த்து முத்தமிட்டு பிறகு தூளியில் கிடத்தினாள். சந்தடி செய்யாமல் கொல்லை ரேழிக் கதவைத் திறந்து அப்பால் சென்று அதைத் தாழிட்டுக்கொண்டு, ஒரு க்ஷணநேரத்தில்—அம்மா—சொல்லவும் நா

கூசுகிறதே!—அந்த உறைக் கிணற்றுக்குள் குதித்துவிட்டாள். அவளுடைய பொன்னுடல் விழும் வேகத்தில், சிரஸு பாவு கல்லில் தட்டிய சத்தம் அந்த இரவின் நிசப்தத்தில் பெரிய ஓசையாய் ஒலித்தது. ஐயா, பரிதாபத்திலும் பரிதாபம்! எந்த அழகைப் பிறர் கண்டு மோஹித்துவிடாமல் காக்க, இந்த உறைக் கிணறு கட்டுவிக்கப்பட்டதோ, அதே சௌந்தர்யத்தின் பிறப்பிடத்தை அந்தப் பாழும் கிணறு தன்னுடைய அதபாதாளத்தில் வரவேற்றுப் பத்திரப்படுத்திக்கொண்டது.

பிறகு என்ன நடந்ததென்று கேட்கிறீர்கள்? ஐயா, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல எனக்குப் பிடிக்கவேயில்லை. உலகத்தின் சௌந்தர்ய தேவதையே மறைந்துபோன பிறகு—அதுவும் அவள் உயிருக்குயிராய் நேசித்து தன் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமானவன் என்று நம்பியிருந்த புருஷனின் அக்ரமத் தூண்டுதல் நாராசமெனக்காதில் ஒலிக்க-சொல்லுமொழியும், செய்வதையும் அற்று, மெய் துடித்து, இவ்வநீதத்தைக் கேட்ட பிறகும் உயிர் வாழ்வதைவிடத் துர்மரணமே மேல்என்கிற நிச்சயத்திற்கு ஒரு கணநேரத்தில் வந்து—தன் உயிரையே ஊனுய் ஊட்டி வளர்த்த சிசுவை மார்பினின்று பிய்த்து எடுத்து, தூளியில் வளர்த்தி, தன் உயிரைத் திருணமாய்க் கருதி நொடிப் பொழுதில் மாய்த்துக்கொண்ட துணிச்சலை நினைக்கும்போது—ஐயோ, நம் வயிறு பற்றியெரிகிறதே—அந்தப் பரிதாபம்! நம் கண் கலங்குகிறதே—

* * *

இது நிகழ்ந்து ஐம்பது வருடம் கழித்து ஒரு நாள் கிளியூருக்குப் போயிருந்தேன். நான் தங்கிய வீடு சுந்தரேசய்யர் வீட்டின் எதிர் சரகு. பாலத்தின் கதையை நான் கேட்டது முதலில் அன்றிரவு அவ்வூரில் தான்.

வட்டு வட்டென்று நிலா அடித்ததால் தெருவில் ஒரு கயிற்றுக் கட்டிலைப் போட்டு, அதில் படுத்து உருண்டேன். நடு நிசி வேளையில் தூக்கம் வரும்போல் கண்ணைச் சுற்றிற்று. ஏதோ சத்தம் கேட்டுத் திடுக்கிட்டெழுந்தேன். என் தூக்கமெல்லாம் பறந்து விட்டது. எதிரே சுந்தரேசய்யர் வீட்டின் பின்புறம் யாரோ ஒருவர் தன்னை உள்ளே விடும்படி கதவைத் தட்டிக்கூவியது ஸ்பஷ்டமாய்க் கேட்டது.

கட்டிலிலிருந்து எழுந்து அருகில் படுத்திருந்தவரை எழுப்பி விசாரித்தேன். அச்சமயம் எதிர் வீட்டைக் கவனிக்கவே அது குடியில்லாத, பாழடைந்த வீடு என்பது புலப்பட்டது. மாடி இருக்கவேண்டிய தளத்தில் ஆல், அரசு மரக்கன்றுகள் முளைத்திருந்ததையும் கண்டேன். இதற்குள் மறுபடி ஒரு முறை தெளிவாக, "ஐயோ கதவைத் திறவுங்களேன். குழந்தைக்குப்பால் கொடுக்கவேண்டும், ஈரப்புடவையும் மாத்திக்கணுமே" என்று பரிதாபமாய் ஒரு பெண் குரல் கெஞ்சிற்று. அதைக்கேட்ட எனக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது.

எவ்வளவோ தைரியசாலியான நான் நடு நடுங்கிப்போய் அலறிவிட்டேன். அடுத்த திண்ணையில் படுத்து உறங்கிய ஒரு விதவைக் கிழவி எழுந்து வந்து தன் மடியிலிருந்த விபூதியை என் நெற்றியில் பூசி, "ஒன்றுமில்லை, பயப்படாதே அப்பா—அது நம்ம பாலம் தான்; இம்மாதிரி நிலா இரவில் அந்தப் பாவிப் பெண் தன் உயிரை மாய்த்துக் கொண்டாள். அவள் ஆத்மா இன்னும் சாந்தி அடையவில்லை. ஆவிரூபமாய் அலைகிருள். கைக்குழந்தை உடனேயே தவறி விட்டது. புருஷனும் பைத்தியம் பிடித்து இறந்துபோனுன். இந்தப்பெண் மாத்திரம் தினமும் தன் குழந்தையைத் தேடிக் கொண்டு, சொட்டச் சொட்ட ஈரப்புடவையோடு இந்த வீட்டுக் கொல்லைக்கதவைத் தட்டுகிருள். அவளை ஒரு நிலைப்படுத்தி வைக்க நினைத்து, அடுத்தகத்து முத்துச்சாமி இந்த வீட்டுஉறைக்கிணற்றைத் தூர்த்து விட்டான். அந்தப் பெண் பாவம், "ஐயோ நான் எங்கே போவேன்" என்று வந்து வந்து தவித்தாள். ஒரு மந்திரக்காரன் வந்து, "போ மாடிக்கு" என்றுன். அன்றே கொல்லை வழியாக மாடிக்குப்போய் விட்டாள். அது முதல் அந்த மாடி போயிருக்கும் போக்கைப் பாரு—அச்சமயம் நான் நிமிர்ந்து மாடியை மறுபடி ஒரு முறை பார்த்தேன்— அங்கும் அவள் நிலை கொள்ளவில்லை பாவம்! இதே மாதிரி தினமும் வந்து கதவைத் தட்டுகிருள். இதனுல் வீட்டிற்கு ஒருவரும் குடிவரமாட்டேனென்கிருர்கள். எங்களுக்கெல்லாம் இது பழக்கமாகிவிட்டது. நீயும் வீணுய் பயப்படாதே." என்று என்னைத் தைரிய மூட்டினுள்.

பிறகு அவளும் நானும் அன்றிரவு முழுவதையும் பச்சைக் கிளியின் கதையைச் சொல்லிக் கேட்பதில் கழித்தோம். குளிர் ஜுரம் வந்த மாதிரி என் உடலெல்லாம் நடுங்கிற்று.

* * *

ஐயோ-பாலம். நீ பிசாசாக உலவி உன் ஆத்மாவிக்குச் சாந்தி கிட்டாமல் அலைய உன் தலையில் வரைந்தானே பிரமன்? உனக்கா இந்த விதி? உன்னை இக்கதிக்கு ஆளாக்கியவரன்ருே பேயாய், பிசாசாய், சஞ்சரிக்க வேண்டும்? நீ தெய்விக புஷ்பமாய் மலர்ந்து நிலவொளியில் எவர்க்கும் எட்டாத கிளையில் பரிமளிக்க வேண்டியவள் அன்ருே? உன் புனித ஆத்மாவுக்கா இந்தக் கதி? உன் புருஷனுக்குக் கிட்டிய சாந்திகூடவா உனக்கு இல்லை? இதுவும் ஒரு நியாயமா? ஆம் ஐயா, ரகசிய மறு உலகத்திய நியாயம் நாம் அறிந்து கொள்ள முடியாதது; புரிந்து கொள்ள இயலாத நியாயம்.

பறக்கும் கணக்கு

சிப்பி

இன்று நம் தேசத்தில் விமானத்தில் செல்லுபவர்களின்எண்ணிக்கைஅதிகரித்துக் கொண்டே வருகிறது. 1946 ஆம் வருஷத்தைவிட 1947ஆம் வருடம் 2½மடங்கு அதிகம் பிரயாணிகள் விமானத்தில் பிரயாணம் செய்திருக்கிருர்கள். வியாபாரிகளும் தங்கள் சாமான்களை விமான மூலம் அனுப்புகிருர்கள். விமானத் தபால்களின் மொத்த ராத்தல் கனமும்அதிகரித்திருக்கிறது. கீழ்க்கண்ட புள்ளி விவரம் இதை விளக்கும்:—

	வருஷம் 1946	வருஷம் 1947
1. மைல்கள் பறந்தது	4,520,046	9,361,673
2. பிரயாணிகள்	105,251	260,209
3. தபால்கள் (ராத்தல்)	1,026,403	1,404,050
4. பண்டங்கள்	1,318,153	6,140,172

விமானத்தைப் பற்றிய தகவல்கள், புள்ளிவிவர முறையில் விளக்கப்பட்டால் சாதாரண ஜனங்களுக்கு உபயோகமாக இருக்கும். இந்தப் புள்ளி விவரங்களை ஆறு தலைப்பின் கீழ் பிரிக்கலாம்.

1. பிரயாணிகளைப் பற்றியவை:

விமானங்களில் மேலும் மேலும் ஜனங்கள் பிரயாணம் செய்வதை அதிகரிக்க வேண்டுமென்ருல், விமானத்தில் பிரயாணம் செய்பவர்கள், செய்யக் கூடியவர்கள் இவர்களைப் பற்றிய பல வரலாறுகள் தெரிய வேண்டும். இன்று விமானத்தில் பிரயாணம் செய்பவர்கள் யார்? விமானத்தில் சாதாரண ஜனங்கள் பிரயாணம் செய்யக் கூடிய அளவு கட்டணம் மலிவாக இல்லை. ரயிலில் மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்ய, 6தம்பிடிதான் பிடிக்கிறது. விமானத்தில் செல்ல மைலுக்கு 4அணு குறைந்த பக்ஷக் கட்டணம். ஆகையால் வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்த வகுப்பினர்கள்தான் விமானத்தில் செல்ல முடியும்.

விமான சாதனத்தை வியாபாரிகளும், சர்க்கார் சிப்பந்திகளும் பணக்காரர்களுமே இன்று உபயோகப்படுத்துகின்றனர். நூறு பிரயாணிகளில் மாதம் ரூ 800/-க்குமேல் சம்பாதிக்கும் மனிதர்கள், அவர்களுடைய பெண்டிர்கள், குழந்தைகள் இவர்களுடைய சதவிகிதம் முறையே 90, 9, 1 ஆகும். அதேமாதிரி வியாபாரிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், இதரர்கள் இவர்களுடைய சதவிகிதம் முறையே 80, 10, 10 ஆகும்.

ரயிலில் முதல் வகுப்புக் கட்டணத்திற்கும், விமானக் கட்டணத்திற்கும் அதிக வித்யாசமில்லாததால், அநேகமாக முதல் வகுப்புப் பிரயாணிகள் எல்லோரையும் விமானத்தில் செல்லக்கூடியவர்கள் என்று மதிக்கலாம். இரண்டாவதாக விமான சர்விஸ் எவ்வளவு மணிக்கு ஒருமுறை தினசரி செல்லுகிறது, விமான நிலையம் நகரத்திலிருந்து எவ்வளவு தூரம் இருக்கிறது, எவ்வளவு அவகாசத்தை மிச்சப்படுத்துகிறது, எவ்வளவு ஆபத்தில்லாததாக இருக்கிறது இவைகளைப் பொறுத்திருக்கிறது இந்த முதல் வகுப்புப் பிரயாணிகளில் எல்லோரையுமே விமானப் பிரயாணத்திற்கு ஆகர்ஷிக்க. விமானத்தால் தொடர்பு ஏற்படும் நகரங்கள் தொழிலில் அபிவிருத்தியுள்ளவைகளாக இருந்தால் பிரயாணிகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்தியாவில் பம்பாயிலிருந்து கல்கத்தா செல்லும் சில பிரயாணிகளின்

நிறையை அலசிப் பார்த்ததில் கீழ்க் கண்ட விவரங்கள் கிடைத்தன :—

(பெண்களும் குழந்தைகளும் இல்லாமல்)

கீழ்க்கண்ட நிறையிருப்பவர்கள் (ராத்தல்)	அவர்களின் எண்ணிக்கை
105	13
115	15
125	18
135	25
145	31
155	17
165	14
175	9
185	4
195	—
205	1
216	2
225	1
	150

சாதாரணமாக இந்தியர்களில் 120 ராத்தல்களுக்குக் கீழ்ப்பட்டவர்களின் எண்ணிக்கையே அதிகம். விமானத்தில் பிரயாணம் செய்பவர்கள் (பணத்தில்) மேல்தரப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாகையால் 145 ராத்தல் உள்ளவர்கள் அதிகப்படியாக இருந்திருக்கிறுர்கள். வெள்ளைப் பிரயாணிகளின் நிறையை மாத்திரம் பார்த்ததில் 170 ராத்தலுக்குக் குறையாமல் இருந்திருக்கிறது. ஆகையால் வெள்ளைப் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதில் இந்தியக் கம்பெனிகளுக்கு நஷ்டமே! ஆனுல் மேற்சொன்ன சர்விஸில் பிரயாணிகளின் பட்டியலைப் பார்த்ததில் வெள்ளையர்களின் பெயர் இல்லாமல் இருப்பதேயில்லை.

பிரயாணிகளைக் குஷிப்படுத்துவதற்குப் பல முறைகள் கையாளப்படுகின்றன. பிரயாணிகளுக்குத் தங்கும் வசதி, சாப்பாட்டு வசதி (இலவசம்), விமானத்திலேயே பத்திரிகைகள், படிக்கும் வசதி இவைபோன்ற பலவசதிகள் செய்து கொடுப்பதில் ஒவ்வொரு கம்பெனியும் முனைந்து நிற்கிறது. அழகிய பெண்களை (Air hostess) பிரயாணிகளின் இந்த வசதிகளைக் கவனிக்க விமானத்தில் நியமித்திருக்கிறுர்கள்.

விமானப் பிரயாணத்தைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் சிறந்த முறையில் சேகரித்து, பிரயாணிகளுக்குத் துண்டுப் பிரசுரம் மூலம் அறிவித்தல் வேண்டும். உதாரணமாக, நமது நம்பிக்கையில் ரயில் பிரயாணம், விமானத்தை விட பத்திரம் என்று ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் இது எவ்வளவு ஆதார பூர்வமானது என்று ஜனங்களுக்குத் தெரிய வேண்டும். (அமெரிக்கக் கணக்குப் பிரகாரம் 1941ஆம் வருஷம் ஒரு பிரயாணி ஆபத்துக் குள்ளாவதா யிருந்தால் 46,620,991 மைல் அமெரிக்க விமானங்கள் பறந்திருக்க வேண்டும்.) இது மாதிரியான புள்ளி விவரங்களை அப்போதைக்கப்போது விமானமோட்டும் கம்பெனிகள் பிரயாணிகளுக்குக் கொடுத்துதவவேண்டும்.

2. தொழிற்சாலைகளைப்பற்றிய புள்ளி விவரங்கள்

இன்று விமானத் தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்களில் பெரும்பான்மையோர் இளவயதுள்ளவர்கள். இந்தத் தொழில் இந்தியாவிற்குப் புதிது என்பதை இது காண்பிக்கலாம். கீழ்க்கண்ட விவரங்கள் இந்தக்கூற்றை ஸ்தாபிக்கும். பம்பாயில் உள்ள ஒரு கம்பெனியின் விவரங்கள் இவை:—

வயது எல்லை	இந்த எல்லையில் தொழிலாளிகளின் எண்ணிக்கை
15—20	22
21—25	42
26—30	30
31—35	10
36—40	5
	109

மேலே கொடுக்கப்பட்ட அதே தொழிலாளிகளின் தேக நிலையைப்பற்றிக் கீழ்க் கண்ட விவரங்கள் கிடைத்தன:—

எடை எல்லை (ராத்தல்)	இந்த எல்லையில் உள்ள தொழிலாளிகளின் எண்ணிக்கை
80—90	3
91–100	15
101–110	29
111–120	24
121–130	17
131–140	13
141–150	4
151–160	3
161–170	—
171–180	—
181–190	—
191–200	1
	109

120 ராத்தலுக்குக் கீழுள்ளவர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருப்பதைக் கவனிக்கலாம். இந்தியத் தொழிலாளர்களின் பொதுவான தேகநிலையைக் குறிப்பதுடன் இவை இந்தப் புதிய தொழிலின் நிலையையும் தனியே குறிப்பிடுகிறது. இவர்களுடைய தேக நிலையில் தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டாலொழிய இந்திய விமானத் தொழிலின் முன்னேற்றம் தடைப்படும். உதாரணமாகப் பம்பாயில் உள்ள இந்தக் கம்பெனியின் தொழிலாளிகளின் மொத்த எண்ணிக்கைக்குத் தினசரி 6 விமானங்களாவது பழுது பார்த்துத் தயார் செய்யப்படவேண்டும். ஆனால் தினசரி ஒரு விமானமே இவர்களால் தயார்செய்யப்படுகிறது,

“பறப்பதற்கு லாயக்கானவை” (Cof A certificate) என்று அத்தாக்ஷி பெறுவதற்கான வேலையைச் செய்ய மற்றத் தேசங்களில் சுமாராக ரூ. 20,000தான் பிடிக்கிறது. இந்தியாவில் இந்த வேலையைச் செய்யும் ஹிந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையினர் ரூ. 75,000 கேட்கின்றனர். இவ்விதம் அதிகச் செலவாவதற்குத் தொழிலாளிகளின் தேக நிலையும் ஒரு காரணமாகும்.

வேலைத் திறமையில் (Skill) இந்தியத் தொழிலாளர்கள் யாருக்கும் இளைத்தவர்களல்ல. ஆனால் அவர்கள் அயல்நாட்டினரைப்போலத் தாக்குப் பிடித்து வேலை செய்ய முடிவதில்லை. சீக்கிரத்தில் களைத்துவிடுகின்றனர். மேலும் வேலைச் சாதனங்களும், கருவிகளும் இங்கேயே உற்பத்தி செய்யப்படாததால், புதிய புதிய கருவிகள் வேலைக்கு வேண்டிய அளவு அகப்படுவதில்லை. அயல்நாடுகளில் உபயோகிக்கப்படும் புதிய கருவிகளில் பல நமக்குத் தெரியவேதெரியாது. அவைகளை இரகஸ்யமாகச் சில சமயம் வைத்துக்கொள்கின்றனர்.

யுத்த சமயத்தில் அமெரிக்கத் துருப்புகள் இங்கு இருந்தன அல்லவா? அவர்களுடைய ஆகாயப் படைக்காக ஏராளமான விமான உறுப்புகள் கொண்டுவந்தனர். போகும் பொழுது நாசமாக்கியது போக, பாக்கியுள்ளவற்றை நமக்குக் கொடுத்துப் போயிருக்கின்றனர். இல்லையேல் நாம் இவ்வளவு தூரங்கூட முன்னேறியிருக்க முடியாது.

சாமான்களைவிட முக்கியமாக இந்தியத் தொழிலாளிகள் இந்தத் தொழிலில் அநுபவத்தைப் பெற்றனர். ஆயிரக்கணக்கில் அயல்நாட்டுத் தொழிலாளிகளை இறக்குமதி செய்யாமல் நம்மை இது காப்பாற்றியது. இல்லையேல் நமது தொழிலாளிகளை அநுபவம் பெற ஆயிரக்கணக்கில் அயல் நாட்டிற்கு அனுப்பவேண்டி யிருந்திருக்கும்.

ஹிந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் சுமார் இருபதாயிரம் தொழிலாளிகள் 1944ஆம் வருஷம் வேலை செய்தனர். அப்பொழுது மாதச் சம்பளப் பட்டுவாடா மாத்திரமே ரூ. 75 லக்ஷமாயிற்று. இது வெறும் பழுதுபார்க்கும் வேலைக்கு மாத்திரமே. விமான சர்விஸ் நடத்தும் கம்பெனிகளிலும் ஆயிரக்கணக்கில் தொழிலாளிகளை நியமிக்கவேண்டியிருக்கிறது. விமான உற்பத்தி செய்வதற்கல்ல! பழுதுபார்க்கமாத்திரமே. உற்பத்தி செய்வதாயிருந்தால் லக்ஷக்கணக்கான வேலையாட்கள் தேவை. இவ்வளவு பெரிய எண்ணிக்கையுள்ள நபர்கள் சரிவர வேலை செய்கிறார்களா? தினசரி எந்தமாதிரியான வேலை செய்கிறார்கள்? சரியான அளவு வேலை செய்கிறார்களா? தினசரி உற்பத்தி ஏற்றத்தாழ்வில்லாமல் இருக்கிறதா, அல்லது மேல் நோக்கிச் செல்கிறதா? இம்மாதிரியான விஷயங்கள் சர்க்காரால்

M2,1,N41 K0

உங்களுடைய விவசாயப் பிரச்னைகளை
நாங்கள் தீர்த்து வைப்போம்

WE CAN SOLVE YOUR AGRICULTURAL PROBLEMS



USE Fordson MAJOR TRACTORS

எத்தகைய வேலையாயினும், எதற்கும் உதவும் போர்ட்ஸன் மேஜர் அதைச் சாதிக்கும். அதன் பலதிறப்பட்ட சக்தியை நீங்கள் பரிபூரணமாக அடைய நாங்கள் உதவ இயலும். ஏனெனில் எத்தகைய கருவிகள் தேவையாயினும் — விவசாய சாஸ்திரக்ஞர்களால் ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டவை— எங்கள் மூலம் நீங்கள் தருவித்துக் கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான கருவிகளைச் சீரிய முறையில் அமைத்துக் கொடுப்பதற்கு நாங்கள் உதவத் தயார்.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202 – 203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)

நடத்தப்பட்டாலும் சரி, முதலாளிக ளால் நடத்தப்பட்டாலும் சரி, தெரிய வேண்டியது அவசியம். இவைகளைச் சரிவர அறியத் தகுந்த புள்ளி விவரக் கணக்கு முறைகள் இருக்கின்றன.

ஒரு வேலை யென்றால் நமக்குச் சுமாரா கத் தெரியும் எவ்வளவு கால அளவு பிடிக்குமென்று. அதற்குத் தகுந்த கூலி பேசி நம் வீடுகளில் வேலை செய்கிறோம். அதே மாதிரி பெரிய தொழிற்சாலைகளி லும் எந்த வேலைக்கும் "குறிப்பிட்ட கால அளவு" (standerd time) உண்டு. உதா ரணமாக, மெஷினில் ஒரு சிறு தொளை போட ஒரு நிமிஷம் "குறிப்பிட்ட கால அளவு" என்றால், அந்த அளவிற்கு மேல் தொழிலாளிகள் டயம் எடுத்துக்கொள் ளாமல் இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். இந்த அளவுக்குள்ளேயே முடிப்பவர்களுக்கு வெகுமதி (bonus) கூடக் கொடுக்கவேண்டும். இந்தக் குறிப் பிட்ட கால அளவை "ஸ்டாப் வாட்ச்" என்னும் கடியாரத்தால் கண்டுபிடிக்கி றார்கள். இந்தக் "குறிப்பிட்ட கால அளவு" பெரிய உற்பத்திச் சாலைகளில் அவசியம்.

இது மாத்திரம் போதாது. வேலை ஒவ் வொன்றிற்கும் தேக அசைவு எவ்வளவு வேண்டும் என்றும் நிர்ணயிக்கலாம். அதற்குப் புறம்பான அசைவுகளை நீக்கு வதால் காலம் மிச்சப்படுத்தப்படுகிறது. தொழிலாளிகளும் சளைக்காமல் இருக்கி றார்கள். "கொள்முதல்" விலையும் குறை கிறது. இவைகளைப்பற்றிய புள்ளி விவ ரங்களைச் சேகரித்துப் புரியும்படியான முறையில் படங்கள் மூலமாகவும், அட் டவணைகள் மூலமாகவும் வெளிப்படுத்த வேண்டியது எவ்வளவு அவசியம்? வரு ஷக் கடைசியில் கணக்குப் பார்க்கையில் நஷ்டமாகிவிட்டது என்று தலையில் கை யை வைத்துக்கொண்டு உட்காராமல், அன்றாடம் தொழில் முன்னேற்றத்தை அறிந்து கொள்வது எவ்வளவுமேல்?

வேலையின் தரம் (quality) எப்படி யிருக்கிறது என்று பார்க்கிறோம், எந்தப் பொருளை வாங்குவதாயிருந்தாலும். கடை களில் "இது பிரிட்டிஷாரால் செய்யப் பட்டது" என்றால் "மௌஸ்" அதிகம். இந்தியாவில் செய்யப்பட்டது என்றால் ஒருவரும் எந்தச் சாமானையும் வாங்குவ தில்லை! இதற்குக் காரணம் நமது தொழிற்சாலைகளில், உற்பத்தி செய்யும் பொருள்களின் தரத்தைச் சரிவரக் கவனியாததால்தான்.

ஒரு தகர டப்பி செய்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அதன் தரத்தை எப்படிச் சோதிப்பது? கவனிக்கப்பட வேண்டிய விஷயங்களாவன :-(1) உரு வம் அழகாக இருக்கிறதா? (2) 'ஒடுக்கு' முதலிய நசுங்கல்கள் இல்லாமல் இருக் கின்றனவா? (3) நாம் விரும்பும் அளவு உள்ளதாக இருக்கிறதா? (4) பொருத் தப்பட வேண்டிய பாகங்கள் சரியாக இருக்கின்றனவா? (5) மூலப் பொருளா கிய தகரமோ, மற்ற உலோகமோ சரி யாக இருக்கிறதா? இதற்குத்தான் தரக் கண்காணிப்பு என்று பெயர் (quality cantrol). இவைகளின் சூக்ஷ்ம (techni-cal) விஷயங்களைப்பற்றி இங்கே சர்ச்சை செய்வது அதிகப்படியாகும்.

முக்கியமாக, "தர" விஷயம் விமானத் தொழிலிற்கு இன்றியமையாதது. இந்த வேலையைக் கவனிக்க உற்பத்தித் தொழிற்சாலைகளில் நிபுணர்கள் இருக் கிறார்கள். விமானம் ஓட்டும் கம்பெனி களைக் கண்காணிக்கச் சர்க்காரே இன்ஸ் பெக்டர்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொரு பாகத்தையும் சோ தித்து அத்தாக்ஷிப்பத்திரம் கொடுத்தா லொழிய விமானத்தில் பொருத்தக் கூடாது. இதுமாத்திரமல்லாமல், பறப் பதற்கு முன்பும் விமானம் சரியாக இருக் கிறதா என்று இவர்கள் சோதிப்பார்கள். இந்த வேலைக்காக விமானக் கம்பெனிகளி லும் அதிக ஊதியம் பெறும் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட எஞ்ஜினீயர்கள் இருக்கிறார்கள். இந்தத் தரக்கண்கா ணிப்பு இல்லாவிடில் விமானத்தில் பறப் பது எவ்வளவு ஆபத்தானது என்பதை யோசித்துப் பாருங்கள். சாதாரணப் பொருள்களை எடுத்துக்கொண்டால்கூட இந்தக் கண்காணிப்பு இல்லாவிட்டால் அதன் வசீகரமும். உபயோகமும் குறை யும்.

3. இன்ஷுரன்ஸ் : இன்ஷுரன்ஸ் மூன்றுவிதமானது. ஒன்று விமானங்கள் நஷ்டமடைந்தால் ஈடுசெய்துகொள்ளுவ

தற்கானது. இரண்டாவது விமானத்தை ஓட்டும் மாலுமி, ரேடியோ சிப்பந்தி, குஷிப்படுத்த ஏற்படுத்தப்பட்ட யுவதி (Air hostess) இவர்களின் ஆபத்தைக் காபந்துசெய்வதற்கானது. மூன்றாவது பிரயாணிகளின் நஷ்டத்தை ஈடுசெய்வதற்கானது. விமானத்திற்குப் பலவிதங்களில் ஆபத்து ஏற்படும். பூமியில் இருக்கும் பொழுது ஏற்படுவது, பறக்கும் பொழுது ஏற்படுவது, விமானத்தால் யாருடைய சொத்திற்காவது (Third party risk) ஏற்படும் நஷ்டம். இன்ஷூரன்ஸ் கட்டணம் (Premium). இந்த ஒவ்வொரு ஆபத்திற்கும் (Risk) விமானத்தின் கிரயத்தில் ஒரு சதவிகிதம் கொடுக்கவேண்டும். மொத்தத்தில் எல்லாவித ஆபத்தையும் காபந்து செய்ய (Comprehensive cover) இன்ஷூரன்ஸ் கட்டணம் $7\frac{1}{4}$ சதவிகிதமாகிறது. இவைகளை நிர்ணயிப்பதில் யாதொருவிதமான ஆதாரக் கொள்கையும் இருப்பதாகத் தெரியவில்லை. சர்க்கார் இந்த விஷயத்தில் ஒரு நிரந்தரமான சட்டத்தை ஏற்படுத்தினால்தான் சௌகரியம்.

விமானத்தை ஓட்டும் மொத்தச் செலவில் (Operating cost) இன்ஷூரன்ஸ் செய்வதில் ஏற்படும் செலவு எவ்வளவு சதவிகிதம் என்று தெரிய வேண்டியது அவசியம். அந்தமாதிரியான ஒரு கணக்கைக் கீழே கொடுத்திருக்கிறோம். இது "தகோடா" (Dakota) விமானத்திற்கு.

சராசரியைவிட அதிகமாக இருப்பதைக் கவனிக்கலாம். இது அதிகமணி நேரம் விமானம் பறந்ததால் இருக்கலாம் என்று நினைப்பீர்கள். விமானங்கள் மேற்கூறிய விபத்துக்களுக்கு வருஷத்திற்காக இன்ஷூர் செய்யப்படுகின்றன. இரண்டாவதாக விமானத்தின் கிரயம் அதிகமாக இருக்கலாம். அதுவுமில்லையேல், அதிகப்படியான விபத்துக்களுக்காகக் காபந்து செய்யப்பட்டிருக்கலாம். எது எப்படியிருந்தாலும் இந்தச் செலவினத்தைச் சரிவர அலசிப் பார்த்துக் கண்காணிக்க மேலே கொடுக்கப்பட்ட கணக்கு உதவும்.

4. புதிய சர்வீஸ் ஆரம்பிப்பதற்கான விவரங்கள்:

உதாரணமாக, மதராஸிலிருந்து திருச்சிக்குச் சர்வீஸ் ஆரம்பிப்பதாக இருந்தால், இந்த இரு நகரங்களைப் பற்றிய (1) ஜனத்தொகை (2) தொழிற்சாலைகள் (3) ஒவ்வொரு நகரத்திலிருந்தும் ஒரு வருடத்தில் முதல் வகுப்பில் பிரயாணம்செய்பவர்களின்எண்ணிக்கை, இவை போன்ற விஷயங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு புதிய சர்வீஸ் ஆரம்பிப்பது லாபகரமாக இருக்குமா என்று நிர்ணயிக்கலாம்.

ரயிலுக்குப் போட்டியாக விமானத்தை தற்சமயம் கருத முடியாதென்றாலும், விமானக் கட்டணம் ஏறக்குறைய (முதல் வகுப்பு) ரயில் கட்டணத்துடன் ஒப்பிடக் கூடியதாக இருக்கவேண்டும். ஏன், விமா

	ரூ.	உயரப்பறந்த கால அளவு	மொத்தச் செலவில் இதன் சதவிகிதம்.
1. 1947ஹுல் "ஹநுமான்" விமானத்திற்கு மொத்த இன்ஷூரன்ஸ் செலவு.	21,213	984மணி	1·2
2. 1948ஹுல் "ஹநுமான்" விமானத்திற்கு மொத்த இன்ஷூரன்ஸ் செலவு.	23,514	1204மணி	1·8
3. மொத்த விமானக் கூட்டத்தில் (Fleet) ஒரு விமானத்திற்குச் சராசரி (1947—48)	19,211	650மணி	1·7

மேலே கொடுக்கப்பட்ட விவரங்களிலிருந்து நாம் சில முக்கியமான விஷயங்களை ஆராயமுடியும். முக்கியமாக "ஹநுமான்" விமானத்தின் இந்தச் செலவினம்

னத்தில் உள்ள ஆசனங்களில் 60 சதவிகிதத்திற்கு மேல் பிரயாணிகள் கிடைப்பார்கள் என்றால் இப்பொழுது இருக்கும் முதல் வகுப்புக் கட்டணத்திற்குக் குறை

வாகக்கூட ஏற்படுத்த முடியும்! ஒரு மைலுக்கு "தகோடா" விமானத்திற்கு ரூ. 3-க்குள்ளாகவேதான் செலவாகிறது. தகோடா விமானத்தில் 21 ஆசனங்கள் உண்டு. 21 ஆசனங்களும் நிரம்பினுல் ஒரு "பிரயாணி மைலுக்கு" (passenger mile) இரண்டணு மூன்று தம்பிடிதான் பிடிக்கும். முதல் வகுப்பு ரயில் கட்டணம் இன்று ஏறக்குறைய மூன்று அணுவாகிறது. ஆகையால் ரயில் கட்டணத்துடன் விமானக் கட்டணம் தாராளமாகப் போட்டி போடலாம்.

வியாபாரப் பொருள்களின் ஏற்றுமதி இறக்குமதியையும் நாம் மேலே குறிப்பிட்ட விஷயத்தில் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். வியாபாரப் பெருக்கத்திற்குச் சரக்குகள் வேகமாகப் புரள வேண்டும். இதனுல் பணமும் சகஜமாகப் புரளும். விமானத்தில் அனுப்புவதால் பெருத்த லாபத்தைச் சம்பாதிக்க வழியுண்டு. குறிப்பிட்ட ஒரு மார்க்கெட்டில் ஒரு பொருளின் விலை அதிகரிக்கும் என்ற ஹேஷ்யம் இருந்தால், மலிவாகக் கிடைக்கும் சில இடங்களிலிருந்து விமான மூலம் விலை அதிகரிக்கக் கூடிய இடத்திற்கு இறக்குமதி செய்து பெருத்த லாபத்தைச் சம்பாதிக்கலாம். சாதாரணமாகவே விமான மூலம் அனுப்புவதால் பல சௌகரியங்கள் உண்டு. பொருள் சேதம் குறைவு. சரக்கு புரளும். ஆகையால் பண முடக்கம் அதிகமில்லை. அழுகக் கூடிய சரக்காயிருந்தால் விமானத்தின் வேகத்தைப் புறக்கணிக்கவே முடியாது.

புதிய சர்வீஸ் ஆரம்பிப்பதில் கவனிக்க வேண்டிய மற்ற விஷயங்களாவன. சீதோஷ்ண நிலை, பருவக்காற்று, விமான நிலையத்தின் பரப்பு, (length and width of runaways), ரேடியோ வசதி இவை போன்றவை.

5. செலவு புள்ளி விவரங்கள்:

ஒவ்வொரு விமானத்திற்கும் "ஓட்டும் செலவு" (operating cost) தெரியவேண்டியது அவசியம். ஒரு விமானத்தின் (ஒரே மாதிரியான) செலவைவிட இன்னெரு விமானத்தின் செலவு அதிகமென்ருலோ, அல்லது ஒரு குறிப்பிட்ட விமானத்தின் செலவு ஒரு மாதத்தை விட இன்னெரு மாதம் அதிகமென்ருலோ, கீழ்க்கண்ட முடிவுக்குத்தான் வரவேண்டும்:-

1. ஒரு விமானத்தைவிட மற்ற விமானம் பழுதாக இருக்கிறது. ஆகையால் செலவு அதிகமாகும் விமானத்தில் இருக்கும் குற்றங் குறைகளை நீக்கவேண்டும். இல்லையேல் விற்றுவிட்டுப் புதிய மெஷின் வாங்க வேண்டும்.

2. முதல் மாதத்தைவிட இரண்டாவது மாதம் செலவு அதிகமென்ருல், இரண்டாவது மாதம் அனுவசியமான, அதிகப்படி செலவுகள் ஆகியிருக்கவேண்டும். செலவுகளை அலசிப் பார்த்து அனுவசியச் செலவுகளை நீக்கவேண்டும். உதாரணமாகப் பெட்ரோலை எடுத்துக்கொள்வோம். "தகோடா" விமானத்திற்குச் சாதாரண ஆகாய நிலையில் ஒரு மணி ஓட்டத்திற்கு 80 காலன் பெட்ரோல் ஆகிறது. மாலுமியின் அஜாக்ரதையினுல் இது மணிக்கு 100 காலன் கூட ஆகலாம். மணிக்கு 60 காலனில்கூட சில மாலுமிகள் இன்று இந்தியாவில் ஓட்டுகிருர்கள்.

மேலேகண்ட முறையில் சதா செலவைக்கண்காணிக்கப் புள்ளிவிவரங்கள் அவசியம். பொதுவாகக் கீழ்க்கண்ட செலவினங்கள்தான் விமானத்தை ஓட்டுவதில்ஏற்படுகின்றன :-

		ஒரு மைலுக்குச் செலவு (அணுக்கள்)
1.	பெட்ரோல், மாலுமிகள் சம்பளம் முதலிய செலவு	16·47
2.	விமான பாகங்கள், என்ஜின், விமானக் கருவிகள் மற்றக் கருவிகள் இவைகளின் அழிவிற்காக ஒதுக்கம் (depreciation)	4.30
3.	இன்ஷுரன்ஸ்	1·68
4.	விமானங்களின் பறக்கும் பாகங்களின் பழுதுபார்க்கும் நேரடியான செலவு	4·40
5.	கீழ்த் தளவாட சாமான்களின் பழுதுபார்க்கும் வேலைக்காக	4·60

6.	கீழ்த் தளவாட சாமான்கள் மெஷின்கள் இவைகளின் அழிவிற்காக ஒதுக்கம்	2.50
7.	மேலே 4, 5-ல் சொன்னதில் நேரடியல்லாத வேலைகளுக்கு	3.53
8.	விமான நிலயத்தில் ஏற்படும் செலவுகள்	1.30
9.	பிரயாணிகளின் வசதிக்காக	1.87
10.	பிரயாணிகளைக் கவனிக்கும் சிப்பந்திகளின் சம்பளம், டிக்கட் கமிஷன், மற்ற டிராபிக் செலவுகள்	2.83
11.	பிரசாரச் செலவுகள்	1.39
12.	மற்ற நிர்வாகச் செலவுகள்	5.68
		50.55

இந்தச் செலவுகள் ஒவ்வொன்றையும் கட்டுப்படுத்தி, ஒரு எல்லைக்கு மீறுமல் பார்த்துக் கொள்ளலாம். மேலே கொடுக்கப்பட்டிருக்கும் 12 இனச் செலவிற்கும் ஒரு நிர்ணய எல்லையை ஏற்படுத்தலாம். மேலே கொடுத்திருக்கும் விவரத்திலிருந்து ஒரு மைலுக்குச் செலவு ரூ. 3-2-6 ஆகிறது என்பது தெரியும். வெளி நாடுகளில் இந்தச் செலவு ரூ. 2—8—0 க்குள் ஆகிறது. இதற்குக் காரணம் முக்கியமாகப் பெட்ரோலின் விலை அதிகமாய் இருப்பதுதான். அமெரிக்காவில் ஒரு காலன் விமானப்பெட்ரோல் (100 octane) ரூ. 0-10-0 தான் ஆகிறது. இந்தியாவில் அதே பெட்ரோல் ரூ. 2-4-0 ஆகிறது. பெட்ரோலின் விகிதம் மொத்தச் செலவில் மூன்றில் ஒரு பாகமாக இருப்பதை மேலே கொடுத்திருக்கும் கணக்கிலிருந்து பார்த்திருக்கலாம். அதாவது $33\frac{1}{3}$ சதவிகிதமாகிறது.

இந்தச் செலவினங்களின் நுண்ணிய விஷயங்களைப்பற்றிப் பக்கம் பக்கமாக எழுதலாம். செலவு இனங்களின் சரியான புள்ளி விவரங்கள் எவ்வளவு அவசியம் என்பதைச் சுட்டிக் காட்டுவதுடன் இங்கு நிறுத்திக் கொள்வோம்.

6. ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான புள்ளி விவரங்கள்:- இந்தியாவிலேயே பல விமானக்கம்பெனிகள் இருக்கின்றன. இவைகளின் திறமையை அறிய எல்லாக் கம்பெனிகளுடைய ஒன்று திரட்டிய புள்ளி விவரங்கள் உபயோகமாக இருக்கும். சர்க்கார் இந்த விவரங்களை ஒன்று சேர்த்து அப்போதைக்கப்போது வெளியிடுகின்றனர். அதே மாதிரி வெளிநாடுகளிலும் செய்யப்படுகிறது. இம்மாதிரி வெளியிடப்பட்ட விவரங்களிலிருந்து இந்திய விமான மோட்டும் தொழில் பின்னணியிலேயே இருப்பது தெரியவருகிறது. கீழ்க்கண்ட புள்ளி விவரம் இதை விளக்கும்:

	விமான மைல்கள்	பிரயாணிகளின் எண்ணிக்கை
1. இந்தியா 1946	4,520,046	1,05,251
,, 1947	9,361,673	2,60,209
2. கிரேட் பிரிட்டன் (United Kingdom) 1946	33,813,000	4,34,400
3. அமெரிக்கா 1945	*198,557,444	—

* revenue only

அமெரிக்கா எல்லாத் தேசத்தையும் விட முன்னேறி யிருக்கிறது. ரயிலைப் போல் ஒரு நகரத்திலிருந்து மற்றோர் நகரத்திற்கு விமானங்கள் ஒருநாளில் பல தடவைகள் பிரயாணிகளை ஏற்றிச் சென்றுவருகின்றன.

நம் நாட்டில் விமான உற்பத்தியில்லை. வெளி நாடுகளைத்தான் எதிர்பார்த்து நிற்கவேண்டி யிருக்கிறது. நமக்குத் தேவையான விமானங்களை உற்பத்தி செய்யும்வரை நாம் தேக்கமுற்று நிற்க வேண்டியதுதான்.

கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு--'சேதி''

மீனல்தேவி

முஞ்ஜால் ஆனந்தசூரியை விட்டு உள்ளே போக ஆரம்பித்ததுமே அவர் நடையும் முகபாவமும் கொஞ்சம் நிலைமாறின. பெருமையும் அதிகாரமும் மிளிர்ந்த அவர் முகம் கொஞ்சம் பணிவும் அன்பும் நிறைந்து ஒளித்தது.

''தேவீ! தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்?''

''யார், மேதாவா? நான் இங்கேதான் இருக்கிறேன்''

உள்ளறையிலிருந்து சப்தம் வந்தது. சிறிய ஓர் அறையில் சுமார் முப்பது வயதுள்ள ஒரு ஸ்திரீ ஆசனத்தில் அமர்ந்து மாலையை உருட்டிக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் சிவந்து முகம் வருத்தமுற்றிருந்தது. முஞ்ஜால் வாசற்படி அருகிலேயே அமர்ந்து கொண்டார். பெண்மணி மாலையைக் கீழே வைத்துவிட்டு, தன் சிறிய ஒளி பொருந்திய கண்களை மந்திரிமேல் நிறுத்திச் சுழற்றினாள். அவள் சாதாரண அழகும் கொஞ்சம் 'மா' நிறமும் உடையவள்.

''முஞ்ஜால்! என்ன சமாசாரம்.''?

''மேகம் பொழிந்து கொண்டிருக்கிறது.''

''ஏன்?''

''தேவப்ரஸாத் இங்கே வந்து சேர்ந்திருக்கிறான்.''

''என்ன சொல்லுகிறாய்? அனுமதி பெறாமலா?''

''இதில் அனுமதிபெற என்ன இருக்கிறது?'' சிற்றப்பா சாவுப் படுக்கையில் இருக்கும்பொழுது சகோதரன் மகன் பார்க்க வருவதற்கு என்ன ஆக்ஷேபம்?''

''வந்து நம்மைச் சூறையாடவா? நல்ல வேளை அவருக்கு ஒன்றும் தெரியாது. யாராவது கொஞ்சம் சொல்லிவிட்டால் அமர்க்களம்தான்.''

''ஒன்றும் நடக்காது. நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம். என்றாலும் அவனை இப்பொழுது நெருங்கக் கூடாது. இல்லாது போனால் விட்டு வைப்பேனா? அவனுக்கும் எனக்கும் பெரிய கணக்குத் தீரவேண்டியிருக்கிறது.''

''மேதா, கணக்குத் தீர்த்துத்தீர்த்துத்தான் பதினைந்து வருஷம் பறந்துவிட்டதே!''

''இது எல்லாம் தங்களுக்காகத்தானே!''

''எனக்காகவா!''

''தங்கள் ஜயதேவனுக்குப் பட்டண் ராஜ்யம் நிலைத்திருக்கவேண்டும் என்பதற்காகவே சொந்த விரோதத்தையும் சுயநலத்தையும் மறந்து இந்தச் சுழலில் மாட்டிக்கொண்டிருக்கிறேன்.''

மீனல்தேவி கொஞ்சம் அதிருப்தியுடன் சொன்னாள்: ''அதற்கு நீர் என்னசெய்திருக்

(ஹிந்திப்பிரதி பிரசுரகர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச்சார்ந்த ஶ்ரீ நாதுராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

கிறீர்? பதின்மூன்று வருஷங்களுக்கு முன் குஜராத்தில் அடிவைத்தபோது எந்த அதிகாரமற்ற நிலையில் பேருக்கு ராணியாக விருந்தேனோ அதே நிலையில்தான் இன்றும் இருக்கிறேன். உம்மை நம்பி நம்பி நானும் கிழவியாகிவிட்டேன்"

நமக்காகச் சேனை தயார்செய்து வைத்திருக்கிறதே. இதைவிட அதிகம் ஒன்றும் செய்யவில்லை என்றால் இதற்கு நீங்கள்தானே காரணம்."

"உம்முடைய இந்தக் குறையைக் கேட்டுக் கேட்டுத்தான் காது புளித்திருக்கிறதே."

"இன்னும் புளிக்கவேண்டி வரும். எந்த வழியிலாவது அதிகாரம் நிலைக்க வைப்பது என்பது முஞ்ஜாலினால் ஆகும் காரியமல்ல."

"அப்படியானால் என்ன நான் எல்லோரிடமும் வேண்டி நிற்கவா? உங்கள் மகாராஜா

இந்த அநியாயமான தாக்குதலினால், அமுங்கிய குரலில் முஞ்ஜால் சொல்ல ஆரம்பித்தார்: "தேவி! நீங்கள் இப்படியா சொல்லுகிறீர்கள்! நீங்கள் வந்தபொழுது பட்டண் நகர் பாதிகூடத் தங்கள் பக்கம் இல்லையே! இன்று பெரிய ஜாகீர்களையும் மண்டலங்களையும் தவிர மற்றப் பாகங்களிலெல்லாம் தங்கள் பெருமை பறை அடித்துக் கொண்டிருக்கிறதே. சந்திராவதியும்

நல்லவர், பெயரளவில் அதிகாரம் அனுபவித்து விட்டார். என்னால் அது முடியாதப்பா!"

"நான், நீங்கள் அப்படியே இருங்கள் என்று சொல்கிறேன்! ஆனால் ஒருவரை ஒருவர் முட்டவிட்டு எந்த விதத்திலாவது அதிகாரம் எதற்காக ஏற்படுத்திக் கொள்வது? ஜாகீர்தார், மண்டலேசுவரர்

களுடைய பலத்தை ஒடுக்க ராஜபுத்திரர்களைக் குன்றவைத்து ஜைனர்களை ஏன் தூக்கி வைக்கவேண்டும்? அதனால் பட்டண் நகருக்குப் பெருமை ஏற்படுமா? அது வெறும் கனவாகவல்லவா முடியும்!''

''எனக்கு உம் எண்ணம்தான் கனவாகப் படுகிறது! ஒன்றுக்கொன்று முரண்பட்டுத் தன்னைத்தானே அடக்கிக் கொள்ளாது போனால் அரசை யார் லக்ஷியம் செய்கிறார்கள்?''

''நம்மவரை ஒடுக்கி அதன்மேல் ராஜ்ய ஸ்தாபனம் செய்வது விதவைகள் வேலை. அதன் முடிவு என்ன ஆகும் தெரியுமா? நமது ஜைனர்கள் பட்டண் நகர ராஜ்யத்திலிருந்து வெறுப்புத்தட்டி சந்திராவதியை நிறுவினார்கள். இங்கும் அவர்கள் இஷ்டப்படி நடந்தால் இங்கேயும் லேவாதேவி ராஜ்யத்தை ஏற்படுத்திவிடுவார்கள் அவர்கள் அதை ஏற்படுத்தியே இருப்பார்கள். அது என்னால்தான் நடக்காமல் இருக்கிறது.'' மகா மந்திரி பெருமையுடன் மார்பு நிமிர்ந்து சொன்னார்.

''அப்பொழுதும் என்ன பயம்? செட்டியார்—ராஜ்யம் ஏற்பட்டால் நீர் பட்டணத்து சேட் ஆகிவிடுகிறீர். உம்முடைய சிற்றப்பா விமல் மந்திரிதானே சந்திராவதியை ஆண்டார். உம் சித்தியின் அதிர்ஷ்டம் அங்கே அரசுபுரிகிறது. நீர் இங்கே செய்யுமேன்!'' ராணி குரலில் பரிகாசம் கலந்திருந்தது.

''நான் ஏன் செய்யவில்லை என்று தங்களுக்குத் தெரியாதா?'' என்று சொல்லி முஞ்ஜால் ராணியை ஒரு மாதிரி பார்த்தார். ராணியின் கண்கள் கீழே பார்த்தன. இருவரும் சற்றுநேரம் மௌனமாயிருந்தனர்.

''மற்றொரு காரணமும் உண்டு. அதாவது:'' முஞ்ஜால் முதல் காரணம் சொல்லி முடித்தவர்போல ஆரம்பித்தார்—''அங்கும் இங்கும் சந்திராவதி ஏற்படுத்துவதனால் என்ன பயன்? கேவலம் வியாபாரிகள் என்ன செய்யமுடியும்? அதிகாரம் தேசம் பூராவும் வேண்டும். மூலராஜதேவனின் (ஸோலங்கி வம்சத்தின் மூல அரசன்) அரசியல் முறையும் இதுதான். முழு குஜராத்தையும் ஒரு குடையின் கீழே கொண்டுவந்து எல்லாக் குடிகளையும் பலவந்தர்களாக ஆக்கிவிட்டால் அப்பொழுதுதான் பட்டண் ராஜ்யத்தின் புகழ் எங்கும் தேச தேசாந்தரங்களில் பரவும். வேறு எண்ணங்கள் இங்கே புகுந்துவிட்டன: காரியமும் கெட்டுவிட்டது. மாளவ, கச்ச தேசங்கள்கூட—மூலராஜதேவனின் பெயரைக் கேட்டு நடுங்கிக் கொண்டிருந்தவர்கள் இன்று வருஷமொரு முறை நம்மிடம் ஏதாவது கொஞ்சம் பிடுங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். எப்பொழுது படையே எடுத்து வருவார்களோ தெரியவில்லை.''

''ஏன் மாளவ அரசன்கூடத் தயாராகிவிட்டானா, என்ன?''

''அவன் எப்பொழுது தயாரில்லாமல் இருந்தான்? அவந்தியில்தான் குஜராத் மாளவ தேசத்துக்கடங்கிய மண்டலமென்று தாராளமாகச் சொல்லப்பட்டு வருகிறதே''

''அதனால்தானே பிரஸன்னாவை அவனுக்கு மணம் செய்யலாம் என்று எண்ணுகிறேன்,''

''அதனால் ஒன்றும் நல்ல பலன் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை. நான் சொல்லுகிறேன் கேளுங்கள். பதின்மூன்று வருஷங்கள்வரை நம்பினீர்கள். இன்னம் கொஞ்சம் காலம் நம்புங்கள். என் வழிப்படி செய்யவிடுங்கள். ஜயதேவனைப் பூரா குஜராத்துக்கும் அதிகாரியாக்கி விடுகிறேன்.''

''ஆனால் இந்த மண்டலேசுவரனை என்ன செய்வீர்?''

''அவன் தானே சரியாகிவிடுவான். ஏதாவது புயல் எழுந்தால் அவன் கைகள் வலுத்துவிடும். மூலை முடுக்கிலுள்ள ராஜபுத்திரர்கள் எல்லாம் அவன் பக்கம் சேர்ந்துவிடுவார்கள். நானோ அவன் கைகள் பலத்தையே ஒடுக்க விரும்புகிறேன். அவன் கட்சியிலுள்ளவர்களைப் பட்டண் சேவகர்களாக்க விரும்புகிறேன்.''

''நீர் எண்ணுவதுபோல அது அவ்வளவு சுலபமா?''

''மிகவும் சுலபம். நாம் அரசியலைப் பிறருக்கும் உபயோகமாகும்படி செய்துவிட்டால் மாளவ அரசனுக்கு நாம் யுத்த அழைப்பு அனுப்பலாம். உத்ஸாகமடைந்த நம் குடிகள் எல்லாம் ஒன்று சேர்ந்தால் பிறகு ஐந்தே வருஷத்தில் ராஜ்யம் முழுவதும் தங்கள் கையில்தான். நம்மிடம் உத்ஸாகம் இருக்கிறது; சக்தியும் இருக்கிறது; காட்டத்தான் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.''

''மேத்தாஜி! இது எல்லாம் மனக்கோவில்; ஆகாசக்கோட்டை; பகற்கனவு.''

''இந்தக் கனவுகளை நாளையே உண்மைப்படுத்திக் காட்டுகிறேன். ஒரு வார்த்தை நான் சொல்லுகிறபடி கேட்கிறீர்களா?''

"என்ன கேட்கவேண்டும்?"

"விமல்ஷாவுக்குப் பிறகு இங்கே சேனாதிபதியே அமர்த்தப்படவில்லை. தேவப்ரஸாத் அதைப்பெற முயன்று தோற்றுவிட்டான். அரசன் கொடுக்க மறுத்துவிட்டார். என்னைச் சேனாதிபதி யாக்கிவிடுங்கள். பிறகு பாருங்கள்."

"முஞ்ஜால்! ஆச்சர்யமா யிருக்கிறதே. பதவி ஆசை உம்மை எப்பொழுது திண்டிற்று? உமக்கு இங்கே என்ன குறை?"

"குறைவா—அதற்குத்தானே நிறைவு." முஞ்ஜால் ஒரு முறை தயை நிறைந்த கண்களுடன் பார்த்துவிட்டு மேலே சொன்னார்: "தேவி. நீங்கள் அறியாததா? எனக்குப் பதவி அவசியமில்லை. இந்த ராஜ்யத்தில் ஒரு அசட்டு நீதிமுறை ஆரம்பித்துவிட்டதே என்ற குறைதான். ஒருவரிடம் அதிகாரம் இல்லை; எல்லோரும் இஷ்டப்படி ஓடுகிறார்கள்."

"ஏன், உம் அதிகாரம்கூடவா அப்படி?"

"ஆம். அதுவும் குறைவுதான். தங்கள் அரசியல் முறையில் ஒருமுகமான அதிகாரம் கிடையாது. மந்திரி சாந்தி சந்திரரும், பொக்கிஷதாரும் சந்திராவதி பக்கம், உதயமதி சகோதரன் மதனபாலன் கர்ணவதியின் கோட்டை அதிகாரி.........அதாவது".........

"நீர் இவ்விடத்து அரசன்."

"இல்லை. என்றால் ஒன்றும் ஆவதில்லை. காரணம்......தங்கள் நடத்தை நாளுக்கு நாள் மாறிக்கொண்டு வருகிறது. சாந்திசந்திரன் தான் எல்லாம். நான் இங்கு வெறும் பேருக்கு.........ஒளியில்லாத........."

"ஆயினும் நீர்தானே உண்மையரசுப் புரிகிறீர்."

"காரணம், வேறு ஒருவருக்கும் புத்தி இல்லை. எல்லோரும் ஒருமுகமாக ஒருவனுக்குக்கீழ்ப்படிந்து, அந்த ஒருவன் அதிகாரியாயிருந்தால் அதன் விஷயம் வேறு. உங்கள் அதிகாரமும் உண்மையாகும்......... அதிகரிக்கும்.................."

"குறையும் என்று சொல்லக்கூடாதா?"

முஞ்ஜால் வருந்தும் குரலில் சொன்னார்: "இதுதானே எனக்கு வருத்தமாயிருக்கிறது. இவ்வளவு நாள் இவ்வளவு ஊழியத்துக்குப் பிறகும் தங்கள் சந்தேகம் அகன்றபாடில்லை. முழு அதிகாரத்தையும் கொடுத்தால் கெடுத்துவிடுவேன் என்று பயப்படுகிறீர்கள்."

"இல்லை மேத்தா. அப்படி ஒன்றுமில்லை."

"கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அரசன் இறந்த மறுக்ஷணமே தாங்கள் ஏதாவது செய்யவேண்டி வரும். இல்லாவிடில் இருப்பதும் இருள் சூழ்ந்துவிடும்; இதுவரை ஆனதும் மண்ணில் சேர்ந்துவிடும்."

"அப்படியானால் சந்திராவதியிலிருந்து வந்திருக்கும் சேனைக்கு நாயகன் யார்?"

"அதையும் யோசிக்கவேண்டியதுதான். அவர்கள் ஜைனர்கள் சொற்படித்தான் கேட்பார்கள். அதில்தான் நம் ரகஸ்யமும் இருக்கிறது. சாந்திசந்திரனுக்கு அந்த அதிகாரம் கொடுத்துவிட்டால் நல்லதாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது."

"எதனால்"

"ஏன் என்றால் அங்குள்ளவர்கள் அவனை வேண்டியவனாக எண்ணுகிறார்கள். தவிரவும் அவன் வயதும் ஆனவன். அதனால் அவன் வார்த்தைக்கும் மதிப்பிருக்கும். ஸோலங்கி அரசர்களிடம் அவனுக்குத் திடமான பக்தியும் உண்டு. ஆகையால் அவன் நீங்கள் சொன்னபடி கேட்காமல் இருக்கமாட்டான்."

"பார்க்கலாம். அந்தச் சமயம் தாமதித்து வரும்படி கடவுள் அருள் புரியட்டும்."

"தேவி. சௌபாக்யபாயி ஒரு யதியை அனுப்பியிருக்கிறார். அவரை இப்பொழுதே பார்க்கிறீர்களா? இல்லை காலையில் ஆகட்டுமா? அரச சேவைக்கு ஆசைப்பட்டு வந்திருக்கிறாராம்."

"ஆள் எப்படி? சுணையுள்ளவர்தானா?"

"ஆம். கெட்டிக்காரர் போல்தான் காணப்படுகிறார். சௌபாக்யரும் மிகவும் புகழ்ந்திருக்கிறார்."

"சரி இப்பொழுதே பார்க்கிறேன்."

"ஒருவிதத்தில் நமக்கும் உதவியாயிருப்பார். சாந்திசந்திரனையும் சந்திராவதியையும் அவர் மூலம் பிடிக்குள் வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஜாக்கிரதை. ஆசாமி சந்திராவதி மூட்டையை இங்கே அவிழ்க்கப் போகிறார்."

"முஞ்ஜால்! என்ன என்னிடம் நம்பிக்கை இல்லையா?"

½ கப் கோதுமைமாவு, 1 கப் மைதாமாவு, ருசிக்குத் தகுந்தபடி உப்பு இவைகளை கலக்கவும். 3 தேக் கரண்டி டால்டாவை மாவுக்கலவையில் தேய்த்து, பூரிக்கு தயாரிப்பதுபோல் பிசைந்தமா செய்து சிறிய பந்துகளாக உருட்டிக்கொள்ளவும். பந்துகளை 3 அங்குலம் குறுக்களவுள்ள வட்டவடிவமாக பரத்தி, இருபாதியாக துண்டிக்கவும். ஒவ்வொரு பாதியையும், விளிம்புகளை தண்ணீரால் நனைத்து ஒன்ருேடொன்று பொருத்தி திருகோணமாகச் செய்துகொள்ளவும். மசாலா சேர்த்து பொடிசெய்த உருளைக்கிழங்கும் பயறுமோ அல்லது சிறு மாமிசத்துண்டுகளோ இந்த திருகோணத்தினுட் திணித்து மூடி பொருத்தவும். சூடான டால்டாவில் சமோசாக்களை சிறு சிவப்பாகும் வரை நன்ருக பொரித்து எடுக்கவும்.

வடித்த கஞ்சி ஒரு உணவா?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது என்று வேண்டுமானுலும்— எழுதுங்கள் !

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ 353,
பம்பாய் 1

HVM. 96-23 TM

"அப்படி இல்லை. இப்படி ஒருவரை ஒருவர் மோதவிடும் தங்கள் அரசியலில் எனக்கு மதிப்பு இல்லை."

"சரி. போய்அவரை அனுப்பும். ஆனால் முஞ்ஜால்!........."

ராணி கொஞ்சம் தாழ்ந்த குரலில் சொன்னாள்: 'தேவப்ரஸாத் இங்கே வந்திருக்கிறானே. "அவனை" இங்கே கொண்டுவந்து வைத்துவிட்டால், எப்படி?........."

முஞ்ஜாலின் முகம் சுண்டிவிட்டது. நெற்றியில் சுமை தோன்றிற்று.

"யாரை?"

"அவனைத்தான்." ராணி ஜன்னல் வழியே விரல்களால் சுட்டிக் காட்டினாள்.

முஞ்ஜாலின் கண்கள் நெருப்புத் துண்டங்களாயின. "தேவி தங்கள் இஷ்டப்படி செய்யுங்கள். என்னை ஒன்றும் கேட்க வேண்டாம்."

"இந்த யதியிடம் ஒப்புவித்து விடுகிறேன். அவன் புதியவன். சந்தேகப்படாமல் சொன்னபடி கேட்பான்."

"அதுதான் சொன்னேனே! உங்கள் இஷ்டம்." என்று சொல்லி முஞ்ஜால் வெளியேறி ஆனந்தசூரியை அழைத்தார். ஆனந்தசூரி உள்ளே வந்தார்.

மதமும் சாம்ராஜ்யமும்

ஆனந்தசூரி ஜைனகுருவின் வழக்கப்படி "தர்மத்துக்கு ஜயம்" கூறினார். மீனல்தேவி நமஸ்காரம் செய்தாள்.



"தேவி. சௌபாக்யபாயி இந்த மஹானைத்தான் அனுப்பி யிருக்கிறார். நான் போகிறேன். அன்னதாதாவின் உடல் நிலையைப் பார்த்துவிட்டு வருகிறேன்."

"சரிபோம். நானும் இதோ வருகிறேன்."

முஞ்ஜால் யதியின் மேல் ஒரு பார்வை அம்பு வீசிவிட்டு வெளியேறினார்.

ஆனந்தசூரி ஆரம்பித்தார்: "தேவி! இன்று என் அதிர்ஷ்ட நாள். எங்கெங்கோ திரிந்தேன். தங்களைப் பார்க்கவேண்டும் என்ற

ஆவல் என்னை அரித்துக் கொண்டிருந்தது. இன்று நான் தன்யனானேன்.''

''தங்கள் பெயர்?''

''ஆனந்தசூரி''.

''இங்கே தாங்கள் வந்ததற்கு ஏதாகிலும் விசேஷ காரணம் உண்டோ?''

''மகாராணி'' உண்மையைச் சொல்லட்டுமா?'' யதியின் கண்களில் புத்தொளி மிளிர்ந்

தது. முஞ்ஜாலின் எதிரிலுள்ள கலக்கம் இப்பொழுது இல்லை. மெதுவாக அவர் உட்சுடர் பிரகாசிக்க ஆரம்பித்தது.

"என் வாழ்நாளையே ஜைன பகவானுக்காக அர்ப்பணம் செய்திருக்கிறேன்."

"பிறகு ஏன் இந்த அரசியலில் மோகம்?"

"என்ன? அரசியல் தர்மமல்லவா? தர்மத்தையும் வாழ்க்கையையும் பிரிக்கமுடியுமா தேவி? இப்படிப் பிரித்து வைத்ததனால் தானே நாம் வாழ்வு குன்றி விழ்ந்துவிட்டோம், ராணி?"

"யதிஜீ! என்ன உபதேசமா?" ராணியின் குரலில் கர்வம் எக்களித்தது.

"ஆம். ஏன் செய்யக்கூடாது? உம்மை விடக் கஜினியிலுள்ள யவனர்கள் கெட்டிக்காரர்கள். உலகின் கழுத்தை நெறிக்கவும் அவர்கள் சாஸ்திரங்களே சொல்லிக் கொடுக்கின்றன."

"முஞ்ஜால் மந்திரியின் அபிப்பிராயம் இதற்கு மாறுபட்டது."

"அதனால்தான் அவருக்குத் துயரம் ஏற்படுகிறது."

மீனல்தேவி ஆத்திரத்துடன் கேட்டாள்: "அப்படியானால் தங்கள் வழி?"

"மந்திரி 'சந்திராவதி அரசியல் கடையை இங்கே பிரிக்காதே' என்று தடுத்திருக்கிறார். நீரோ அதைக் கேட்கவேண்டும் என்று ஆவல் காட்டுகிறீர். சரி, இதைப்பற்றி எப்பொழுதாவது பேசிக் கொள்ளலாமே!"

"முடியாது, இப்பொழுதே கேட்கவேண்டும். பட்டண் சமாசாரம் சீர் குலைந்து நிற்கிறது. அனுபவம் வாய்ந்த தங்களைப் போன்ற பெரியாரின் அபிப்பிராயங்கள் மிகவும் உபயோகமாயிருக்கலாம்."

"ஊஹூம். மந்திரி முஞ்ஜால் ஒருவர் சொல்வதுதான் உபயோகமாயிருக்கும். நடக்கவும் நடக்கும்." யதி மெதுவாக விஷத்தை ஊற்றிப் பரவவிட்டுக்கொண்டே சொன்னார்: "ஆனால் எனக்கென்னவோ ஒரு தர்மமில்லாமல் ஒற்றுமை கிடையாது; ஒரு மதமில்லாமல் குடிகள் ஏது? அதன் தூண்டுதல் இல்லாமல் வீரம் எங்கிருந்து வரும்?"

"இப்பொழுது உம்மைப் பட்டண் நகரத்து முக்கிய அதிகாரி ஆக்கிவிட்டால் நீர் என்ன செய்வீர்?"

யதி சொன்னார்: "எனக்கு அதிகாரம் கிடைத்ததானால் நான் ஜைன தர்மத்தை ராஜதந்திரத்தின் முதல் மந்திரமாக்கிக் கொள்வேன். அதைப் பின்பற்றுபவர்களிடையே அதன் பேரால் ஒற்றுமையை உண்டாக்கி வளர்ப்பேன்; அதைக் காப்பாற்ற அவர்களிடம் வீரத்தை ஊட்டுவேன்; அதைப் பரப்புவதற்காகத் தேச தேசாந்தரங்களில் ஜைனபகவானுடைய காவி வஸ்திரக் கொடியை வானளாவப் பறக்க வைப்பேன்." மதப் பற்றின் உஷ்ண ஆவேசத்தால் யதியின் முகம் பளபளத்தது.

"நீங்கள் சொல்வது சரியாகத்தான் தோன்றுகிறது. ஆனால் ராஜபுத்திர வீரர்களை என்ன செய்வீர்?"

"ராஜபுத்திரர்கள் அதிகாரத்துக்கும் சூரத்தனத்துக்கும் தாசர்கள். மதம் அவர்கள் பிரதி நிதியாவதைக் கண்டால் அவர்களும் உடனே அதற்கு அடிபணிவார்கள்."

"மகாராஜா சொல்கிறாரே. கஜினி அரசர் நவகண்டத்தை ஜயித்து உலகம் முழுவதும் பேரை நிலை நாட்டினார் என்று அவர் தந்தை அவரிடம் சொல்லி யிருக்கிறாராம்."

"ஆம், அதற்குக் காரணமும் மதம்தான். அவர் அரசர்மட்டுமல்ல; தர்ம வீரரும்கூட. நான் வடக்கே சென்றிருந்தபோது அவர்களின் ஒரு தர்ம குருவைப் பார்த்தேன். அவர் எனக்குத் தம்முடைய அநேக சித்தாந்தங்களைப்பற்றிக் கூறினார். அந்த யவனர்களுக்கு 'ராஜ்யம் இல்லாமல் மதம் இல்லை. மதம் இல்லாமல் ராஜ்யம் இல்லை,' என்பதில் அபாரமான நம்பிக்கை."

"ஆனந்தசூரி! தாங்கள் தெரிந்தோ தெரியாமலோ எனக்கு வேண்டியதையே சொல்கிறீர்கள். ஆனால் ஜைனர்கள் அதிகாரம் பெற்றுவிட்டால் விமல்ஷா மாதிரி அரசரையே அவமதித்து, சேட்டுகள் கையில் அதிகாரத்தை நிலைநிறுத்திவிடுவார்கள். பட்டணும் இரண்டாவது சந்திராவதி ஆகிவிடும்."

யதி கொஞ்சம் தலைகுனிந்து பயங்கரமான அமைதியுடன் சொன்னார்: ராணி! உண்மையைச் சொல்லட்டுமா? தாங்கள் பயப்படுவது உண்மையே. ஆனால் நல்ல அம்சத்தை எடுத்துக் கொண்டு கெட்ட பாகத்தை எறிந்து விடலாம்."

"எந்த முறையில்?'.

"அந்த முறை தங்களுக்குப் பிடிக்காது."

"அதைப்பற்றி உமக்குக் கவலையேன்? சொல்லுங்களேன்."

"இவரை விரட்டிவிடுங்கள்"

மீனல்தேவி மிதிபட்ட பாம்புபோல் தலையைத் தூக்கினுள். கண்களில் ஒளிபடர ஆனந்தசூரியை ஒரு அம்புப் பார்வை பார்த்துச் சொன்னுள்: "யாரை? முஞ்ஜாலேயா? ஆம். நீங்கள் வேற்றுத் தேசத்தவர் தானே? முஞ்ஜால் எனது வலது கை என்று எப்படி அறிவீர்கள்? நான் சந்திரபுரியில் இருந்தபோது இவர்தான் என்னை முதன் முதலில் குஜராத்திப் பக்கம் இழுத்தார். மகாராஜாவுடன் என் திருமணத்தை முடிக்க உதவி புரிந்தார். மகாராஜா நான் அழகில்லாதிருப்பதைக் கண்டு என்னை ஏறிட்டுப் பார்க்காமல் இருந்தார்; அப்பொழுது இவர்தான் மறுபடி எனக்கு உதவி புரிந்தார். இன்று பதின்மூன்று வருஷங்களாக அசையாத பக்தியுடன் அவர் என் பக்கம் இருந்து வருகிருர் தெரியுமா?"

"ஆகா! இந்த இதயத்தின் சூக்குரல் தங்கள் பெருமையைப் பிரதிபலிக்கிறது. முஞ்ஜால் உண்மையுள்ள ராஜபக்தர்; அறிவாளி; ஆனுல் அவர் ராஜநீதி ஆழமில்லாத புத்தியினுல் செலுத்தப்படுகிறது. அவர் ஒப்புக்கொண்டால் சரி; இல்லாமற்போனுல் கொஞ்சநாளைக்கு முக்கியமான அதிகாரங்களை நீங்கள் உங்கள் கையில் வைத்துக் கொள்ளவேண்டும். முஞ்ஜால் மந்திரி தானே? ராஜாவின் நிலையிலிருந்து விஷயங்களை யோசிக்கக் கற்பனையும் புத்திபலமும் வேண்டாமா?"

"யதிஜீ! நீங்கள் மிகவும் நன்ருகப் பேசுகிறீர்கள். இதுவரையில் என் சொந்த விவகாரத்தை வேற்று மனிதரிடம் நான் பேசியதில்லை. ஆனுல் உங்கள் உண்மையில் நான் நம்பிக்கை கொள்கிறேன்."

"உங்களுக்குக் கொஞ்சம்கூடப் பயம்வேண்டாம். நான் தங்களுக்குச் சேவை புரியவே வந்திருக்கிறேன். என்னைப்போல உண்மையுள்ள ஊழியன் வேறு ஒருவனும் கிடைக்க மாட்டான்."

"சரி, சொல்லுகிறேன் கேளும். முஞ்ஜால் வைரம். அவரை ஒடிக்கலாம்; வளைக்கமுடியாது."

"வளைக்கிறபடி வளைத்தால் வளைந்துவிடுவார்."

"அது எப்படி?"

"சந்திராவதியிலிருந்து வந்திருக்கும் சேனைக்கு அவரைச் சேனுதிபதியாக்கி விடுங்கள். ஜைனர்கள் அவரைப் பார்த்துக் கொள்வார்கள். சாந்திசந்திரன் கெட்டிக்காரன். அவனைப் பட்டண் கோட்டையின் அதிகாரியாக்கி விடுங்கள்; முடிந்தால் சேனுதிபதியாகவும் செய்துவிடுங்கள்."

ராணி திடுக்கிட்டாள். "என்ன? சரி, யோசிக்கிறேன். நாளை சாந்திசந்திரனை அழைத்துக்கொண்டு இங்கே வாருங்கள்."

"அப்படியே தேவி! நான் செய்யவேண்டியது ஏதாவதிருந்தால், எப்போதும் தயார்."

"சரி ஒரு காரியம் செய்வீரா?.........பட்டணத்துக்கு வெளியே விமல்ஷாவின் ஜைன மடம் இருக்கிறதல்லவா?"

"ஆம். வரும்போதுகூட அங்கேதான் தங்கினேன்."

"அங்கே சென்று ஆசாரியரைத் தனியே அழையுங்கள். மீனல்தேவி அந்த அழகிய சன்யாசினியைக் கூப்பிட்டு அனுப்பினுள் என்று சொல்லுங்கள்."

"அழகிய சந்நியாசினியா?"

"ஆம். அவளைப் பல்லக்கில் வைத்து இங்கே அழைத்து வாரும். பல்லக்கைக் கோட்டை வாயிலில் கொண்டு வரவேண்டாம். இதோ பின்னுல் படிக்கட்டு இருக்கிறதல்லவா? அதனருகே கொண்டுவந்து தாதியிடம் ஒப்படைத்துவிடும்."

"தேவியின் விருப்பப்படியே."

"இது மிகவும் ரஹசியமான விஷயம். தெரியுமா?"

"இதுகூடச் சொல்ல வேண்டுமா?" என்று சொல்லி ஆனந்தசூரி போய்விட்டார்.

மீனல்தேவி அப்படியே அசைவற்று நின்ருள். ஒருகாதில் முஞ்ஜாலின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. மற்ருெரு காதில் யதி தம்முடைய ராகத்தை விட்டுச் சென்றிருந்தார். மனது கேட்டுக் கொண்டிருந்தது.

"எதைச் செய்வது?"

கர்ணதேவர்

தேவப்ரஸாதை ஜன்னலறையில் விட்டு விட்டு வந்தோமல்லவா? வாசஸ்பதியை எதிர்பார்த்துக்கொண்டு அவன் இன்னமும் அங்கேயேதானிருந்தான். அவன் தனக்குத் தானே வாசஸ்பதியையும், வைத்தியர் லீலாதரரையும் முஞ்ஜாலையும் மீனல்தேவியையும் ஒருவர் பின் ஒருவராகத் திட்டிக் கொண்டேயிருந்தான். கடைசியில் தன் விதியையும் திட்டினுன். அதற்கு ஒன்றும் பலன் ஏற்படுவதாகத் தெரியவில்லை. கொட்டாவிதான் வந்தது. கீழே உட்கார்ந்

தான்; கொட்டாவிக்குப் பின் நித்ரா தேவியும் வந்துவிட்டாள்; கண்ணயர்ந்தான். தூங்கி வழிந்துகொண்டே அவன் கனவுகள் காண ஆரம்பித்தான். கனவில் ஒரு அழகிய முகம் அடிக்கடி தரிசனம் தந்தது. மண்டலேசுவரன் உற்சாகமிழந்தான். வருத்தம் உள்ளத்தைக் கவர்ந்து இறுக்கிற்று. தூக்கத்தில்கூட இருதயம் நழுவிவிட்டது போல் உணர்ந்தான். இப்படியே நிரம்ப நேரம் சென்றுவிட்டது. நடு இரவும் ஆய்விட்டது. இரவு கழியும் நேரமும் வந்துவிட்டது. வர்ணனையை ஏமாற்றும் ஒரு மந்தமான ஒளி இரவில் இருட்டிலே வந்து கலக்க ஆரம்பித்தது. அந்தச் சமயம் வாசஸ்பதி வந்து மண்டலேசுவரன் தோளில் கைவைத்தான். தேவ ப்ரஸாத் திடுக்கிட்டு விழித்து எழுந்து நின்று அங்குமிங்கும் பார்க்க ஆரம்பித்தான்.

''வாசஸ்பதி! இரவு எவ்வளவு கழிந்துவிட்டது! அருணோதயம் ஆகிவிட்டதா?'' மண்டலேவரன் ஜன்னல் வழியாகத் தலையை நீட்டிக் கிழக்குப் பக்கம் பார்க்க ஆரம்பித்தான்.

''ஆம். கொஞ்சம் நேரம் ஆகித்தான் விட்டது.'' வாசஸ்பதி சொல்லிக் கொண்டிருந்தான். ஆனால் மண்டலேசுவரன் ஒன்றும் பதிலே சொல்லவில்லை. அவன் முகம் ஜன்னலில் குனிந்தபடியே இருந்தது. அவன் விழிகள் வெடித்து வெளியேறிவிடுவதுபோல கீழே தோட்டத்தில் ஒரு நிலைப்பட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உடல் காற்றில் இலைபோல் நடுங்கிக்கொண்டிருந்தது. நெற்றியில் பெரிய வியர்வைத் துளிகள் உருண்டு கொண்டிருந்தன.

''என்ன மண்டலேசுவரா?''

மண்டலேசுவரன் திடீரென்று இடுக்கியால் பிடிப்பதுபோல அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான். அமுக்கிக்கொண்டே, ''அதோ பார்.........அதோ உனக்கு ஏதாவது தெரிகிறதா?''

வாசஸ்பதிக்கு இருட்டில் ஒன்றுமே தெரியவில்லை.

''ஒன்றுமே காணவில்லையே'' என்றான் அவன்.

''அதோ ஒரு ஸ்திரீ...............போகவில்லை.........அதோ போகிறாளே; அதோ ....போய்விட்டாள்...............''

''இல்லை. எஜமானே! என் கண்கள் கொஞ்சம் மந்தம். இருட்டில் ஒன்றுமே பார்க்கமுடியவில்லை.''

''இன்றே இரண்டாவது தடவை பார்த்துவிட்டேன். இரு; நானே சென்று நன்றாய்ப் பார்த்து வருகிறேன்.''

''தெரிந்துகொள்ள எங்கே போவீர்கள்? விடியும் நேரம் ஆகிவிட்டது. மகாராஜாவுக்குக் கொஞ்சம் சுய உணர்வு வந்திருக்கிறது. மறுபடியும் மயக்கம் வந்தால் அவரைப் பார்ப்பதெப்படி?''

சிந்தனைச் சுழலில் சுழன்றுகொண்டே தேவப்ரஸாத் சொன்னான்: ''வாசஸ்பதி! இப்பொழுது என்ன செய்வது? என் மனம் நிலையிலில்லையே! சக்கரம்போலச் சுழலுகிறதே!''

''இது என்ன? யாரோ ஒரு பெண்ணைப் பார்த்தா இவ்விதம் பயப்படுகிறீர்கள்?''

''பண்டிதரே! நீர் என்ன அறிவீர்? பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு இன்றுதான் இரண்டு தடவைகள் பார்த்தேன்.''

''யாரைப் பார்த்தீர்கள்——மண்டலேசுவரா?''

மண்டலேசுவரன் நடுக்கம் தெறிக்கும் குரலில் சொன்னான்: ''என் ஆசை நாயகியை; உயிருக்குயிரை; அநேக வருஷங்களுக்கு முன் இறந்தும் மனக்கண்ணுக்கு மறையாத என் இதய தேவியை...............''

''மகாராஜா——இது பிரமையாயிருக்கலாம்.''

''பிரமையா? இல்லை, இல்லை; என் கண்கள் ஒளியிழக்கவில்லை. என் புத்தி குன்றிக் குறையவில்லை.........!

யோசனையில் ஆழ்ந்த வாசஸ்பதி சொன்னான்: ''அப்பொழுது என்ன அது? ஆவியா? ''சாந்தம் பாபம்.........சாந்தம் பாபம்''

''பண்டிதரே. இதில் ''சாந்தம் பாபம்'' அவசியமில்லை. என் தலையைச் சாவு சுற்றுகிறது. குஜராத்தில் தலைசிறந்த வீரனுடைய வாழ்நாட்கள் எண்ணி முடிவு பெறப்போகின்றன. ஒரு மனிதன் இன்றுதான் சொன்னான், நான் கொஞ்சநாளில் இறந்துபோவேன் என்று. இன்று இரு தடவைகள் தேவலோகத்தில் வாழும் அந்தப் பெண்ணும் எச்சரிக்கை செய்துவிட்டாள். கவலை இல்லை. வாழ்ந்தவிதமே உயிரை விடுவேன். எனக்கெதிரே ஐம்பத்திரண்டு நகரங்களும் பன்னிரண்டு மண்டலங்களும், என் வலியைத் தாங்காது துடிதுடித்து இறக்கும்போது நானும் அட்டஹாஸம் செய்து வெடித்து மடிப்பேன். செல். வாசஸ்பதி, சிற்றப்பாவினிடம் அழைத்துப்

போ." மண்டலேசுவரனின் குரல் பயங்கரமாயிருந்தது. வாசஸ்பதி முன்னே செல்ல ஆரம்பித்தான்.

சமீபத்திலேயே ஒரு அறையில் பட்டண் அரசர் கர்ணதேவர் மரணப் படுக்கையில் கிடந்தார். வைத்தியர் லீலாதரரும் அங்கே இருந்தார். மண்டலேசுவரன் வருவதைப் பார்த்த லீலாதரர் எழுந்து அருகில் வந்தார்.

"மண்டலேசுவரா? எவ்வளவு நேரம் போக்கிவிட்டீர்கள்? எவ்வளவு கஷ்டப்பட்டு மயக்கம் வராமல் நிறுத்தியிருக்கிறேன். இப்பொழுது மயக்கம் போட்டால்........... சரிதான் பிறகு முடிவுதான்."

மண்டலேசுவரன் சிற்றப்பா படுக்கையின் சமீபம் சென்றான். லீலாதரர் மற்றுமுள்ள மருந்தரைப்பவர்களை வெளியேற்றிவிட்டுத் தாமே மருந்தரைக்க உட்கார்ந்து கொண்டார்.

"சித்தப்பா, சித்தப்பா. நான் வந்திருக்கிறேன். அடையாளம் தெரிகிறதா?"

மரணப்படுக்கையிலும் அழகுத் தேவியிடம் வேலை வாங்கும் கர்ணதேவன் புரண்டு படுத்து, கஷ்டத்துடன் கண்ணைத் திறந்தார். அவர் உடல் பூராவும் செத்தே விட்டது! மருந்தின் வேகத்தால் கொஞ்சம் தெளிவு வந்திருந்தது.

"யார், தேவா?" வார்த்தைகள் அரசன் முகத்திலிருந்து பயந்துகொண்டே வந்தன!

"ஆமாம் சித்தப்பா. தேவாதான்! ஏதாவது சொல்ல வேண்டுமா? சொல்லுகிறீர்களா?"

"ஏதாவது வம்பு........." ஒளியிழந்த கண்களை ஒரு நிலையிட்டு நிறுத்தி அரசன் கேட்டான்.

"இல்லை அப்பா. நான் வம்பு செய்திருந்தாலும் பிறர் தொந்தரவால்தானே. என் இஷ்டப்படி எல்லாம் நடந்தால் சண்டையையே ஒழித்துவிடுகிறேன்.........இன்னம் ஏதாவது.........?"

"ஐ.........ய.........தே.........வ்"

"அப்பா. உங்கள் பிள்ளை என் தம்பி. அவனுக்கு ஒரு கெடுதியும் நேராமல் பார்த்துக்கொள்வது என் பொறுப்பு."

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:-	சென்ட்ரல் ஆபீஸ்:-
மாயவரம்	மதராஸ்

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம் ...	ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு	ரூ. 10,00,000

பிராஞ்சுகளும், ஸப் ஆபீஸ்களும் தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான பட்டணங்களில் இருக்கின்றன

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

S. N. N. சங்கரலிங்க அய்யர்
மேனேஜிங் டைரக்டர்

"சத்தியம்........."

"ஆகா. இதோ பிரமாணம் செய்கிறேன். எனக்கு அவமரியாதை நேராதவரை நான் ஜயதேவனின் நிழலுக்குக்கூட ஒன்றும் நேராமல் பார்த்துக்கொள்வேன்."

"உம்.........உம்...........தேவா..........."

"அப்பா.........சொல்லுங்கள்."

"அருகே வா..........." தேவப்ரஸாத் அருகே வந்து கீழே குனிந்தான்.

"ஹம்ஸா உயிருடன்தான் இருக்கிறாள்."

தேவப்ரஸாத் துடித்து எழுந்தான். "என்ன? எங்கே?" அவன் கண்ணெதிரே

அறையே சுற்றிவிட்ட பம்பரம்போலாயிற்று.

"வி.........வி............வி" கர்ணதேவர் ஏதோ சொல்ல விரும்பினார். அவர் கண்கள் தேவப்ரஸாதுக்குப் பின்னுள்ள ஏதோ ஒரு பொருளின்மேல் நிலைத்து நின்றன. தேவப்ரஸாத் திரும்பிப் பார்த்தான். நெருப்பைக் கக்கும் கண்களில் அசையாது நிற்கும் விழிகளால் மீனல்தேவி அரசனைப் பார்த்துக்கொண்டிருந்தாள். சாகும்பொழுதும் ராணிக்கெதிரே அவள் பார்வையில் வாய் ஊமையாகிவிட்டான் அரசன். அமைதியுடன் அவமதிப்பும் உரு எடுத்து ராணி அசையாமல் நின்றாள். அரசன் விழிகள் வெடிக்க ஆரம்பித்தன

ராணி அசைவற்ற குரலில் கேட்டாள். "வைத்யரே! இது என்ன மறுபடி அரசன் உணர்விழக்கிறாரா?"

தேவப்ரஸாத் ஏற்கனவே பொங்கிக் கொதிக்கும் குணமுடையவன். ஹம்ஸா உயிருடன் இருப்பது தெரிந்தது இன்னும் சூட்டை ஏற்றிவிட்டது. வருஷக் கணக்காகக் காணாத மனைவி உயிருடன் வாழ்கிறாள்! அவனுக்கு நாம் உயிருடன் தான்

இருக்கிறோமா என்றே சந்தேகம் வந்துவிட்டது. எதிரே மீனல் தேவியைப் பார்த்து அவன் உள்ளம் அதிகப் பதை பதைப்புக்கு உள்ளாயிற்று. மிகவும் கஷ்டப்பட்டுப் பதற்றத்தை அடக்கி, "என்ன சின்னம்மா, இது நிஜம் தானா?" என்று கேட்டான்.

"எது நிஜம் தானா?"

"என் ஹம்ஸா உயிருடனிருக்கிறாளாமே!"

"நான் என்ன கண்டேன்?"

"நான் இன்று அவளை இரு தடவைகள் பார்த்தேன். சித்தப்பாவும் சொன்னாரே."

மீனல்தேவி பரிகாசக் குரலில் சொன்னாள். "இப்பொழுது உன் சிறிய தந்தையார் சொல்வதை நீ தான் நம்பவேண்டும்! சரி, இதைப் பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம். இப்பொழுது என் மனது சரியான நிலையில் இல்லை!"

தேவப்ரஸாதுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. "உன் மனது நிலையிலில்லை என்றால் நான் மட்டும் சரியாக இருக்கிறேனா? அது சரி, ஹம்ஸா உன் அரண்மனைக்குள் தானே இருக்கிறாள்?"

"இது யார் சொன்னது?"

"நான் தான் பார்த்தேனே. என் கண்களாலேயே இப்பொழுது." ராணி அறியாமலேயே மின்சாரம் பாய்ந்தது.

"பிரமை. மண்டலேசுவரா, அது முற்றிலும் பிராந்தி. இந்தச்சமயம் நீ ராஜ்யத்தைப் பற்றி யோசிக்க வேண்டும். இல்லாததற்கெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது."

"சின்னம்மா! ராஜ்யத்தைப்பற்றி நான் என்ன யோசனை செய்ய இருக்கிறது? உனக்கு யோசனை சொல்லுபவர்கள் உன்னை மயக்கி ஆட்டுகிறார்கள். நீ நான் சொல்வதைக் கேட்கவா போகிறாய்? சித்தப்பாவுக்கு நான் இப்பொழுது தான் சத்தியம் செய்து கொடுத்தேன், ஜயதேவனுக்கு எப்பொழுதும் உண்மையாய் உழைப்பேனென்று."

தேவப்ரஸாதின் கபடமற்ற உள்ளத்தைக் கண்டு ராணி உள்ளம் மகிழ்ந்தாள்.

"நான் என்ன வேண்டாம் என்றா சொல்கிறேன்? நீ ஏதோ சாக்குப்போக்குத் தேடி வருகிறாய்?" ராணி வேஷம் போட்டாள்.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

தனக்கு ஒருவரும் துணையில்லை என்றுவெளிப்படுத்தி, தேவப்ரஸாத் மனதை அறிய அவளுக்கு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது.

'நான் சாக்குத்தேடுகிறேனா, உன்மந்திரியா சின்னம்மா? இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. போனதை மறந்து விடு. நீ சொல்வதைச் செய்யத் தயாராயிருக்கிறேன்." மண்டலேசுவரன் வெள்ளை உள்ளத்துடன் சொன்னான்.

"நான் தடுக்கிறேனா? நீ தானே காலம் கடத்துகிறாய்!"

"நானா? நீ இப்பொழுது என்ன சொல்கிறாய்?"

"ஒன்றும் வேண்டாம். என் ஜயதேவன் தனியரசு புரிய வேண்டும்." மீனல் தேவி குரலில் இனிமை சொட்டிற்று.

"சின்னம்மா, தனியரசு வேண்டுமென்றால் என்னைச் சேனாதிபதியாக்கிவிடு, நாளைக் காலையிலேயே பாரத தேசம் முழுவதையுமே உன் அடி பணிய வைக்கிறேன்". தேவப்ரஸாத் பெருமையும் நம்பிக்கையும் கொண்ட குரலில் கூறினான்.

"முழு பாரதமும் இருக்கட்டும்; ஸோரட் தேசமும் ஹாலாரும் என்ன ஆகும்? கோட்டைக்குள்ளேயே எலியிருக்கிறதே!"

இப்பொழுது தான் தேவப்ரஸாத் மீனல் தேவியின் விஷமத்தனத்தைப் புரிந்து கொண்டான். "அதாவது, 52 நகரங்களும் பன்னிரண்டு மண்டலங்களும் சுதந்திரம் கொண்டாடும் போது பட்டணத்துக்கு மதிப்பேது? யார் கேட்கிறார்கள்?"

"அப்படியானால் அவைகளை எல்லாம் தலை பணிய வைக்க விரும்புகிறாயா?" தேவப்ரஸாத் கை மீசையைத் தடவிக்கொடுத்தது.

"ஆமாம். இல்லாவிட்டால் என் மகன் ஒரு குடையரசனாவானா?"

"அப்படியானால் மண்டலேசுவரர்கள் எல்லாம் உன் தாஸர்களாக வேண்டுமா? சிங்கங்கள் மறைந்து உன் வீட்டுப் பூனைகளாக மாற வேண்டுமா?"

"அப்படி இல்லை. ராஜ்யத்துக்கு விரோதிகளாய் இல்லாமல் ராஜ்யத்தின் தூண்களாக ஆகவேண்டும்."

"அப்படிச் சொல்லு அம்மா! தேஹஸ்தலத்தையும் உன்னிடம் ஒப்புவிக்க வேண்டும்; என் சேனையை உன் வசமாக்க வேண்டும். என் தாத்தாவுடன் சேர்ந்து யவனர்களைக் குஜராத்திலிருந்து விரட்டி அவர்கள் சுதந்திரத்தைப் பறிக்க வேண்டும். அதானே நீ வேண்டுவது!"

மீனல் தேவி பேசவில்லை. லீலாதரரும் ராஜாவுக்கு உபசாரம் செய்து கொண்டிருந்தார். எல்லோரும் மௌனமாயிருந்தார்கள்.

"சரி, இந்தக் கடைப்பட்ட நீச வேலைக்கு என்ன கூலி தருவாயாம்?" மண்டலேசுவரன் பரிகாசம் செய்துகொண்டே குரூரமாகச் சிரித்தான். மீனல்தேவியின் கண்கள் அமைதியாய் அவனையே நோக்கிக் கொண்டிருந்தன.

அவள் மெதுவாகச் சொன்னாள்: "என் பிரதான சேனாதிபதியின் வேலை சிறியதா? அதுவும் உன்னைப் போன்ற சோலங்கி வீரர்களுக்குத் தானே ஏற்றது?"

"உன்னுடைய இந்தப் பதவிக்காக என் தேசம், அதிகாரம், சுதந்திரம் எல்லாவற்றையும் கை கழுவி விட வேண்டும்?" தேவப்ரஸாத் இதயத்துடன் சம்பந்தமற்ற குரலில் கேட்டான். அவன் கண்கள் நிலைமாறி நின்றன. அவன் முகம் ஏறு போல் சிலிர்த்து நின்றது. மார்தட்டிச் சொல்ல ஆரம்பித்தான். "சின்னம்மா! உன் புத்தியை நீயே வைத்துக்கொள். மண்டலேசுவரன் உடலில் உயிரிருக்கும் வரை ராஜபுத்திரர்களின் உரிமையைப் பறிக்க எந்தத்தாய் பிள்ளைபெற்று இருக்கிறாள் என்று பார்த்து விடுகிறேன். பரம்பரையாக வரும் அரசியல் முறையை யார் மாற்றி விடுவார்? பார்க்கலாம்!"

"நானும் குஜராத்தில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறதென்று பார்த்துவிடுகிறேன்,"

"பிறகு வருந்த வேண்டும். பதவி ஆசையில் முன்னோர்களின் வரையறையைக்கலைக்க முயன்றால் முயல்பவனுக்குத் தாங்க முடியாமல் போய் விடும்."

"மண்டலேசுவரா! பட்டண் ராணி உருட்டலுக்கு மிரளமாட்டாள்!"

"சரி தான், ஸோலங்கி பீம தேவனின் பேரனை யார் கூட்டிலடைக்கிறார்கள் என்பதையும் பார்த்து விடுகிறேன்." என்று ஆத்திரத்துடன் மீசை முறுக்கிச் சொல்லிவிட்டு, கொஞ்சம் குளிர்ந்த குரலில் "சின்னம்மா? செய்யாதே வீண் பிடிவாதம், நல்லது கேள்; சண்டையின் வேரை அறுத்துவிடு."

"அப்பா, எனக்குத் தேஹஸ்தலி வந்து நல்லது கேட்கவேண்டாம். நீ கவலைப்படாதே." என்று சொல்லிவிட்டு மீனல்தேவி அரசன் பக்கம் சென்றுவிட்டாள்.

தேவப்ரஸாதும் கோபத்தின் புயலில் தன்னை மறந்து அங்கிருந்து வெளியேறிவிட்டான்.

லீலாதரர் தலையைத் தூக்கிப் பார்த்தார், மீனல்தேவியின் முகம் களையிழந்து இருந்தது.

"மகாராணி! இந்தச் சிங்கத்துக்குக் கூடு செய்வது கஷ்டம்"

"காலம் வந்தால் அதுவும் ஏற்பட்டுவிடும்."

"எது வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் பட்டண் சிம்மாஸனத்துக்குக் களங்கம் மட்டும் ஏற்படுத்தாதீர்கள்." கிழ வைத்தியனுக்கு எங்கிருந்தோ தைரியம் வந்துவிட்டது.

மீனல்தேவி பதில் ஒன்றும் சொல்லவில்லை.

(தொடரும்.)

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை:—
15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

ஹம்பி

டாக்டர்
வே. ராகவன்.

ஹம்பி விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் தலைநகரம்; தென்னாட்டில் இந்திய வாழ்க்கையையும் இந்திய நாகரிகத்தையும் அழியாமல் காத்த, கடைசியான பெரிய இந்திய ஸாம்ராஜ்யத்தின் ராஜதானி; மகம்மதிய ஆக்ரமிப்பை வெற்றியுடன் தடுத்த விஜயநகரம், இந்திய தர்மத்தைப் புனருத்தாரணம்செய்த வித்யா நகரம். கி. பி. 1336 முதல் சுமார் 300 வருஷங்களுக்கு இத்தலை நகரான கலை நகரின் வீதிகளில் நடக்காத கவியோ கலைஞனோ அந்நாளில் இல்லை. ஸாயன—மாதவ—வித்யாரண்யர்களால் வேதமும், புராணமும் காவ்யமும், சாஸ்த்ரமும் வளர்க்கப்பட்ட இடம்; கவிகளுக்கிடையே தாமே கவியாய், காவ்யங்கள் எழுதிய அரசரும், ராணிகளும் ஆண்ட இடம்; 'அஷ்டதிக் கஜங்கள்' தெலுங்கு ப்ரபந்தங்களை ஆக்கிய இடம்; சதுரக்கல்லி நாதனும், லக்ஷ்மீநாராயணனும் தம் இசை நூல்களை எழுதிய இடம்; மந்திரி அப்பாஜியும், தெனாலிராமனும் தமது ஹாஸ்யங்களால் வயிறுவெடிக்கச் செய்து வந்தவிடம்; வீதிகளில் தம் ஏக்தாருடன் கர்னாடக ஸங்கீதத்திற்கே ஆதாரமாயும் ஆதர்சமாயுமுள்ள லக்ஷக் கணக்கான பதங்களை ஸ்ரீ புரந்தரதாஸர் பாடிக்கொண்டிருந்த இடம்; பாறையும் கல்லுமாயிருந்த திடல்—கோயிலும் கோட்டையுமாய் மாறி, அத்புதக் கலைக் கூடமாய் நின்ற ஹம்பி.

ஒரு நாகரிகத்திற்கும் நாட்டிற்கும் உயிராயுள்ள நாடிகள் இரண்டு—அவைவித்யை-விஜயம், அறிவு-ஆற்றல், கலை-வீரம், ப்ரம்மம்-க்ஷத்ரம்என்று ஒன்றுக் கொன்று பின்னிக் கொண்டு நிற்கும் இரட்டைத் தத்வங்கள். இவ்விரட்டை அடிப்படையை அஸ்திவாரமாகக்கொண்டே புக்கன்—ஹரிஹரன் என்ற அரசரும், வித்யாரண்யர் என்ற ஆத்மஞானியும் சேர்ந்து, விஜயநகரம், வித்யாநகரம் என்ற இரண்டு பெயரை வைத்து, மகம்மதிய எழுச்சிக்குத் தடையாய் இந்த ராஜதானியை எழுப்பினார்கள். நம் வாழ்க்கைக்கே புத்துயிர் அளித்த இந்த விஜய, வித்யாநகர ஸாம்ராஜ்யம் எழுந்த இடமும் மிகவும் புராதனமானது; எங்கே பார்த்தாலும் ராமாயண மணம் கமழும் நன்னாடு; காணாமற்போன ஸீதையைக் காண வழியில்லாமல் பம்பாஸரஸின் கரையில் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த ராமனுக்குத் திடீரென ஹனுமான் மூலம் ஸுக்ரீவ நட்பு ஏற்பட்டு, வழி பிறந்த நன்னாடு; ரிச்யமூகம், மால்யவத் பர்வதம், கிஷ்கிந்தை, மதங்க பர்வதம் என்று வால்மீகி வர்ணித்த மலைகளின் தேசம். 'ஹம்பி' என்ற சொல் 'பம்பை' என்ற சொல்லின் கன்னடத் திரிபு; 'பம்பா' என்ற பெயருடன் தேவி ஜடையும் மரவுரியும் கொண்டு, தவங்கிடந்து, பம்பாபதியான விரூபாக்ஷசிவனை மணம் புரிந்துகொண்ட இடம். இப்படிப்பட்ட 'ஆவிவந்த' இடத்தைத் தேடியே பம்

பாபதி விரூபாக்ஷரின் கோயிலை ஹ்ருதயமாய் வைத்து, புக்க—ஹரிஹரர்களும், வித்யாரண்யரும் தம் ராஜதானியைக் கட்டினர்.

ஹம்பியிலிருந்து விரிந்த விஜயநகர ஸாம்ராஜ்யம் வடமேற்கில் கோவாவிலிருந்து தெற்கே தஞ்சை வரைக்கும் ஓங்கி விளங்கி, பின் சென்னை, செஞ்சி, தஞ்சை, மதுரை முதலியவிடங்களில் கிளை ராஜ்யங்களைப்பெற்றெடுத்து, அவற்றின் மூலம் நம் கலைகளைப் பிற்காலம் வரைக்கும் நமக்கு விட்டுப் போகாமல் பாதுகாத்துக் கொடுத்தது. இந்த ஸாம்ராஜ்யம் தலைசிறந்து நின்ற காலத்தில் செல்வச் செழிப்பும் ஜனப் புழக்கமும் மண்டிக்கிடந்தன. பல மைல்கள் பரவிக் கிடந்த ஹம்பி ராஜதானியில், அந்நாளில் கிறிஸ்துவரும், யூதரும், மூர்ஜாதியினரும், மகம்மதியரும் ஊரில் கூடி, யதேச்சையாய், தம் வர்த்தகத்தையும் வ்யவஹாரங்களையும் நடத்தி வந்தனர். அப்துல் ரஸ்ஸாக், பார்போஸா, நூனிஸ், பீஸ் முதலிய அயல்நாட்டு யாத்ரீகர் இந்த ராஜதானிக்கு வந்து, இதன் அரசனையும் ஆட்சியையும், மக்களையும், வாழ்க்கையையும், கோட்டையையும் படையையும், கோவிலையும், விழாவையும், விரிவாய்த் தாம் கண்டபடி தம் நூல்களில் வர்ணித்திருக்கின்றனர். இப்படி அயல் நாட்டினரும் கண்டு வியக்கும்படி செழித்திருந்த இந்த ராஜதானி கி. பி. 1564-ல் மகம்மதியரால் தாக்கப்பட்டு, அழிக்கப்பட்டது; ஊரைக் கொள்ளையாடி, இடித்துக் கொளுத்திய மகம்மதியர் தம் வேலையை விடாமல் ஐந்து மாதம் செய்தனர்; அப்படியும் முழுதும் அழிக்க முடியவில்லை என்றால் ஹம்பியின் சிறப்பும் பெருமையும் எவ்வளவு இருந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

அன்று நின்ற நகரத்தின் நினைவுகளை மூட்ட இன்று ஹம்பியில் கிடப்பன ஏதோ சில சிற்பச் சிதைவுகளே; இச் சிதைவுகள் இன்று கிடக்கும் பிரதேசம் ஒன்பது சதுர மைல் விஸ்தாரங் கொண்டது; ஆனால் அந்நாளில் நகரத்தின் கோட்டைகளும் சுற்றுப்புறமும் சேர்ந்து இன்னும் பல மைல்கள் விஸ்தாரங் கொண்டிருந்தது இந் நகரம்.

இந்த ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலேயே வித்யாரண்யரும் ஹரிஹரனும் இருக்கும்போதே, இந்த நகரில் பம்பாபதி கோயில் விரூபாக்ஷதேவருக்கு நடந்த தேர் உத்ஸவத்தை வர்ணித்து அஹோபலன் என்ற கவி 'விரூபாக்ஷவஸந்தோத்ஸவ சம்பூ' என்ற காவ்ய மொன்றை இயற்றினன்; ஹம்பியின் வஸந்தோத்ஸவ, ரதோத்ஸவ விமர்சையை அயல் நாட்டு யாத்ரிகரும் கண்டு வர்ணித்திருக்கின்றனர். அஹோபலனின் சம்பூ காவ்யம் ஏட்டுப் பிரதியில் உள்ளது, அதை ஆராய்ந்து நான் ஆராய்ச்சிப் பத்திரிகைகளில் (Journal of Oriental Research, Madras) எழுதியிருக்கிறேன். இந்த விரூபாக்ஷ வஸந்தோத்ஸவ சம்பூவில் விஜயநகர ராஜதானியில் உட்பட்டதாகப்பலகிளை நகரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. விரூபாக்ஷரின்கோயில் இருக்கும் பம்பாம்பிகா நகரம், வித்யாநகரம் கமலாபுரம் முதலியனவும், ஆற்றின் அக்கரையிலுள்ள ஆனகுந்தி முதலியன

கிருஷ்ண தேவராயரும் அவருடைய இரு மஹிஷிகளும்.

வும், பின் கிருஷ்ணதேவ ராயர் தம் மனைவிக்காகவும் அன்னைக்காகவும் ஏற்

படுத்திய திருமலதேவி பட்டணம் என்ற ஹோஸ்பெட்டும், நாகேனஹல்லி என்ற நாகலாபுரமும், கிழக்கே கம்பிலியுமடங்கியது இவ்விசாலமான ராஜதானி.

மலைகளுக்கிடையே வேகமாகச் சப்தித்துக் கொண்டு ஓடும் துங்கபத்ராநதி; அதன் தென்கரையை ஒட்டி எழுந்த இந்த ராஜதானியைக் காலையிலோ மாலையிலோ, பக்கத்திலுள்ள மதங்கபர்வதத்தின் மேலேறிப் பார்த்தால் மிகவும் அழகான கண்விருந்து ஏற்படும். வெறும் கற்பாறையான இத்தலத்தை இவ்வத்புதத்தில் நகராய்ச் செய்த விஜயநகர மன்னரின் ஆவம்தான் என்ன! இங்குள்ள சிற்ப வேலைகளைக் கவனித்தால் சுற்றுப் புறத்தில் கிடைக்கும் கற்களைத் தவிர மற்ற விடங்களிலிருந்தும் சிற்ப வேலைகளுக்கு உகந்ததான வேறுவிதமான கற்களையும் கொண்டுவந்து ராயர்கள் தம் கோட்டைகளையும் கோயில்களையும் கட்டினர் என்று தெரிகிறது.

மதங்க பர்வதமும், சூளை கடை வீதியும்.

பயிர் வளத்தை இப் பிரதேசத்தில் அதிகப்படுத்த ஆதியிலிருந்தே அரசர்கள் ஏற்பாடுகள் செய்து வந்தனர். புக்க மஹாராஜன் துருத்து வாய்க்கால், அதாவது விரைவாய்ப் பாயும் வாய்க்கால் ஒன்றை நிலங்களின் பாய்ச்சலுக்காக, துங்கபத்திரையிலிருந்து வெட்டினான். கிருஷ்ணதேவ ராயன் மேலும் பல நீர் வஸதிகளை ஏற்படுத்தினான்: வல்லபாபுரம் என்றவிடத்தில் துங்கபத்திரைக்கு அணைபோட்டான்; பஸவண்ண வாய்க்காலை வெட்டினான்; கோவா நகரிலிருந்து ஜோ ஆடெல்லா பாண்டீ என்ற போர்சுகீஸ் சில்பியை அழைத்து இரண்டு மலைகளுக்கிடையே பெரிய ஏரி ஒன்றையும் கட்டினான்; இவ்வேரியிலிருந்து பலவாய்க்கால்கள் சென்று சாகுபடிக்கு உதவி 20,000 பொன் வரும்படியைக் கொடுத்தன. இது இப்போது பொட்டைத் திடலாகக் கிடக்கிறது.

இவ்வேரியிலிருந்து ஊருக்கு நீரைக் கொண்டுவந்த உயர்ந்த கருங்கல் குழாய் ஒன்று கட்டப்பட்டிருந்தது; இக்குழாய் வழியின் சிதைவுகள் இன்றும் தென்படுகின்றன.



அரண்மனைக்கு நீர் கொண்டுவரும் கல் வாய்க்கால்.

கோயில்கள்: ஹோஸ்பெட்டிலிருந்து கமலாபுரம் வழியாக வந்து, வடக்கே

ஹம்பிக்குச் சென்றால் ஹம்பி ராஜ்யத்தின் சிற்பச் சிதைவுகளையும் கோயில்களையும் நன்றாய்ப் பார்க்கலாம். ஸலே-திருமல மஹாராயபுரம் என்ற அனந்த சயன குடியையும், பெரிய அனந்த சயனர் கோயிலையும் தன் மைந்தனைக் குறித்துக் கிருஷ்ணதேவ ராயன் கி. பி. 1524 ல் கட்டினான். இக்கோயிலுக்காக ஏற்பட்ட அனந்த சயன மூர்த்தி தற்போது ஹடகல்லி தாலுக்காவில் ஹொளலு என்ற



ஹஸாரா ராமஸ்வாமி கோவில்.

விடத்தில் கிடக்கிறது. இக்கோயிலின் விமானம் புது மாதிரியானது. கமலாபுரத்தை அடைந்ததும் அரைமைல் தூரத்தில் அழகிய குளமும் பட்டாபி ராமஸ்வாமி கோயிலும் தென்படும்; இப்பெரிய கோயிலை அச்யுத ராயன் 16ஆவது நூற்றாண்டின் மத்தியில் கட்டினான். கொஞ்சம் சென்றால் சந்த்ர சேகரர் கோயில்; மேலும் சென்றால் தென்படுவது ஹஸாரா ராமஸ்வாமி கோயில்; இதைக் கிருஷ்ணதேவ ராயன் கி. பி. 1513ல் கட்டி இதற்கென்று 6-கிராமங்களை விட்டிருந்தான்; இங்கேதான் ராஜ குடும்பத்தினர் தினம் தொழுது வந்தனர்; இந்தக் கோயிலில் நடு மண்டபத்தில் நகாசு வேலை செய்து நன்றாய்ச் செதுக்கப்பட்ட நான்கு கறுப்புக்கல் தூண்களும் விமானமும், ராமாயண மஹாபாரதக்கதைச் சிற்பங்களும், கல்யாண மண்டபமும் பார்க்கத்தக்க காட்சிகள். அடுத்த படியாய்க் காணப்படுவன தரை மட்டத்திற்குக் கீழே அமைக்கப்பட்ட சில கோயில்கள்: இங்கே பிரஸன்ன விரூபாக்ஷர், பாதாள விரூபாக்ஷர் காணப்படுகிறார்கள். ஸமீபத்திலேயே ஒரு பள்ளத்தில் குஞ்ஜா மாதவரின் கோயிலும் இருக்கிறது. மேலே அரை மைல் தூரத்தில் லிங்காயதர்கள் வழிபடும் உத்தான வீரபத்ரரின் ஆலயம்; ரஸ்தாவுக்கு அப்பால் அருகாமையில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட 22அடி உயரமுள்ள நரஸிம்ஹ விக்ரஹம் ஒன்று ஒரு பிராகாரத்திற்குள் நிற்கிறது; இதைப் பிராமணன் ஒருவன் கி. பி. 1528ல் ஸ்தாபித்தான்; மடியிலுள்ள லக்ஷ்மியும் சில அங்கங்களும் பின்னமாய்ப்போயின; பெரியதாய் இருந்தாலும் நெருங்கிப்பார்த்தால் நுட்பமான வேலைப்பாடுள்ள சிற்பமென்று



கிருஷ்ணன் கோவில்.

தெரியும்; இதற்குப் பக்கத்தில் எப்போதும் ஜலத்திலிருக்கும் சிவலிங்கத்தின் ஆலயம் ஒன்று. வடக்கே மேட்டுப்பூமியில் 1513ல் கிருஷ்ணதேவ ராயன் களிங்கப் போரில் வெற்றியுடன் திரும்பியதும் தான் உதய கிரியிலிருந்து கொண்டுவந்த பாலகிருஷ்ண மூர்த்திக்காகக் கட்டிய கோயில்; இந்தப் பாலகிருஷ்ண மூர்த்தி தற்போது கையொடிந்து சென்னை மியூஸியத்தில் உட்கார்ந்திருக்கிறது. இதற்குமேல் சேஷனால் சுற்றப்பட்ட விஷ்ணு பாதத்தோடு கூடிய ஆலயம் ஒன்று. 'சாசிவ கல்லு' கணேசர் என்று ஒரே கல்லில் செதுக்கிய பெரிய பிள்ளையார் விக்ரஹம் ஒன்று; இதற்குமேல் 'கடலைக்கல்லு என்று சொல்லப்படும் மற்றொரு பிள்ளையாரின் கோயில்.



வடக்கே ஹேமகூட மலையிலிருந்து ஒரு காட்சி.

இவற்றையெல்லாம் கடந்து நாம் இப்போது ஹேமகூடமலைக்கும் அதன் உச்சியிலுள்ள பம்பாபதியின் கோயிலுக்கும் வந்துவிட்டோம். இதே இவ்வூருக்குப் புராதனமாய் ஏற்பட்ட பழம் கோயில். இக்கோயிலுக்குள் தமக்கு விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க உதவிய வித்யாரண்யருக்கும் ஒரு ஸந்நிதியை ஹரிஹரராயன் கட்டியிருந்தான். பின்னால் வந்த மன்னர் இக்கோயிலுக்குப் பல மண்டபங்களையும், கோபுரங்களையும் கட்டிச் சேர்த்தனர், இக்கோயிலுக்கு எதிரில் தேர் ஓடும் வீதி; அதன் கிழக்கு நுனியில் ஒரு பெரிய நந்தி; இவ்வீதியில் நடந்த ரதோத்ஸவத்தைத் தான் அஹோபலகவி வெகு விரிவாய், தம் சம்பூ காவ்யத்தில் வர்ணித்திருக்கிறார். உத்ஸவ காலங்களில் பல தன வணிகர்கள் கோயில்களைச் சுற்றியுள்ள இம்மலைகளில் ஆயிரக்கணக்கான தீபங்களை ஏற்றி வைப்பார்களாம்; இக்காட்சி மிகவும் அழகாகவே இருந்திருக்க வேண்டும்.

கிழக்கே வந்தால் துங்கபத்ரைக்கரையில் கோதண்டராமனின் கோயில் காணப்படும். இதிலிருந்து சென்றால் சூளை என்ற தேவதாஸி வீதியும் அச்சுத ராயர் கட்டிய ஆலயமும் வரும். இதற்குப் பின்னால் மதங்க பர்வதம். சூளைக் கருகில் வராஹஸ்வாமியின் கோயில்; பக்கத்தில் மற்றுமோர் அனந்த சயனர் கோயில்; இந்தக் கோயிலுக் கெதிரில் ஸுக்ரீவன்குஹை என்று ஓரிடம்; இதில்



அரசர் துலாபாரம் செய்து கொள்ளும் கல் தராசு.

தான் ராவணனால் கொண்டுபோகப்படும் ஸீதை விட்டெறிந்த ஆடையாபரணங்களை ஸுக்ரீவன் எடுத்து வைத்திருந்தானாம். இதற்கப்பால் துங்கபத்ரை



விட்டல ஆலயத்திற்குள்ள வேலைப்பாடுகள்.

யைத் தாண்டுவதற்கான பாலம்; இது சிதைந்து கிடக்கிறது. இதற்கப்பால் காணப்படும் கருங்கல் தராசு அரசரின் துலா புருஷதானத்திற்காக ஏற்பட்டது. இதற்கப்பால் காணப்படுவதே விட்டல ஸ்வாமியின் கோயில்; இங்குள்ள கோயில்களில் மிகவும் சிறந்தது; வேலைப்பாடு நிறைந்த கட்டிடம்; பல சிற்பங்களும், தூண்களும், மண்டபங்களும் இங்கு அழகாய் அமைந்திருப்பினும், இங்குள்ள கல் தேரே எல்லாவற்றையும் விட அழகு வாய்ந்தது. இதைப் பார்த்துவிட்டுத் தெற்கே திரும்பி வந்தால் மால்யவந்த ரகுநாதரின் ஆலயம்; இதில் ராமபாணம் விழுந்து பிளந்த இடம் என்று ஒன்று காண்பிக்கப்படுகிறது.

ஹம்பியின் அருகாமையில் ஜைனமதம் வளர்ந்து வந்ததும், ஜைனருக்கும் வைஷ்ணவருக்கும் வந்த சண்டையை அரசரே தீர்த்து வைத்ததும் தெரிய வருகின்றன. பம்பாபதி கோயிலுக்கருகில் சில ஜைன ஆலயங்கள் இருககின்றன; தெற்கே கமலாபுரத்திற்கு ஸமீபத்தில் காணிகிட்டி என்ற ஜைனர் கோயில் இருக்கிறது. இதன் விமானம் வேறுமாதிரியாய் அடுக்கடுக்காய் அமைக்கப்பட்டிருக்கிறது.

விஜயநகர அரசருககும் மகம்மதிய அரசருக்கும் சண்டை இருந்து வந்தாலும், ஹம்பியில் பல மகம்மதியர் வேலையில் இருந்து வந்தனர். அவர்களுக்கு ஒரு மசூதியும் கட்டிக்கொடுத்த பெருந் தன்மை தேவராயனுக்கு இருந்தது. இந்து—முஸ்லீம் சில்ப பாணியை அனுஸரித்த சில கட்டிடங்களும் விஜயநகரத்தில் காணப்படுகின்றன; இவற்றுள் முக்கியமானவை சில நகர வாசல்கள், ராணி ளின் அந்தப்புரம், ராணிகளின் ஜலக்ரீடை மாளிகை, எட்டு மூலை மாளிகை, ராணிகள் வேடிக்கை பார்க்கும் கோபுரங்கள், பத்ம மஹல் என்ற அழகிய கட்டிடம், யானைகளுக்கான 11 பெரிய லாயங்கள், ஸேனாதிபதி மஹல். இங்கே கோட்டைக்குள் 40



விட்டல் ஆலயத்திலுள்ள தேர்.

அடி நீளம் ஒரு பெரும் கல்தொட்டி காணப்படுகிறது; விசேஷ நாட்களில்

இதில் பாலை நிரப்பி ஏழைகளுக்குக் கொடுத்து வந்தனராம்.

கோட்டையின் சிதைவுகளைப் பார்ப்போம்: மரத்தில் செய்வதுபோல் கல்லில் வேலை செய்த பெருங்கதவு ஒன்று கீழே கிடக்கிறது. ஒரு பெரும் கருங்கல் மேடையில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன; இம்மேடையின்மேல் உட்கார்ந்து அரசர் நவராத்ரி, மகா நவமி உத்ஸவங்களை நடத்துவர்; இங்குள்ள சிற்பங்களில் மல்யுத்தம், ஆடல்-பாடல், யானை குதிரை காலாட்படை வேட்டை முதலியவற்றின் காட்சிகள் செதுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த இடத்தில் நிகழ்ந்த நவராத்ரி, மஹா நவமி விழாவின் சிறப்பை அன்னிய நாட்டு யாத்ரீகர்கள் கண்டு விரிவாய் வர்ணித்திருக்கிறார்கள். இந்த மேடையைப் போலவே வேலைப்பாடுள்ள ராஜதர்பாரின் சிதைவுகளும் காணப்படுகின்றன. இந்தத் தர்பார் மண்டபத்தின் மேல் கட்டிடம் மரத்தால் செய்யப்பட்டிருந்தது. இதற்குப் பக்கத்தில் தங்கசாலை இருந்தது.

விஜயநகரக் காட்சிகளில் நாம் இன்று இருந்திருந்தால் அவசியம் பார்த்தே தீரவேண்டிய அம்சம் இங்கு முன் இருந்த நாட்டிய மண்டபம். இந்த அற்புதத்தின் வர்ணனையே நமக்கின்று 'பீஸ்' என்ற யாத்ரிகரின் நூலிலிருந்து கிடைக்கிறது. இம்மண்டபத்தின் ஒரு பக்கத்தில் நாட்டியப்



பம்பாபதி கோயிலுக்குத் தெற்கே ஜைனக் கோயில்கள்,



பத்ம மஹல்.



யானை லாயங்கள்.



அரசரின் ஆஸ்தான மண்டபத்தின் அஸ்திவாரம்.

பெண்கள் பயிற்சி செய்து கொள்வதற்கான இடமிருந்தது; நாட்டியம் கற்கும் இடத்தில் ஒவ்வொரு தூணிலும் ஒரு நாட்டிய நிலையுள்ள நர்த்தகியுருவம் செதுக்கப்பட்டிருந்தது; இந்த மண்டபம் ஒன்று மட்டும் நமக்கிப்போது இருந்தால் சிதம்பரத்திலுள்ள நாட்டிய சில்பங்களைவிட அதிகமாக நம் நாட்டியவாராய்ச்சிக்கு உதவும் என்பது திண்ணம்.



ஹேமகூட மலையிலிருந்து ஹம்பியின் தோற்றம்.

ஹம்பியின் ஸ்திரீகள் நாட்டியமாடுவதோடு நிற்கவில்லை; மல்யுத்தம் செய்தனர்; வில்வித்தை பயின்றனர்; 'நூனிஸ்' என்ற யாத்ரிகர் வர்ணித்திருக்கிறார்,— அரண்மனையில் 4,000 ஸ்திரீகள் இருந்தனர்; இவர்களுள் சிலர் ஆடுபவர், பாடுபவர், சிலர் மல்யுத்தம் செய்பவர், சிலர் சோதிடம் பார்ப்பவர், சிலர் கணக்குப் பிள்ளைகள், சிலர் நடக்கும் வர்த்தமானங்களை 'டைரியாய்'க் குறிப்பவர். அரசரின் தாஸிகளும், ராணிமார்களும் ஸ்வயம் கவிகளாய்க் காவ்யம் எழுதி இருக்கிறார்கள். ஸ்திரீகள் அடைந்த முன்னேற்றம் ஒரு நாகரிகத்தின் மேன்மைக்கு முக்கிய அடையாளமென்றால் ஹம்பி நம் நாகரிகத்தின் உயர்ந்ததோர் சிகரமென்றே சொல்ல வேண்டும்.

அகப் பகை

வே. ரங்கராஜன்.

வீதிக்கு வந்த கண்ணனின் அழுகை அண்டைவீட்டு வாயிலில் நின்று கொண்டிருந்த தன் 'அத்தையை'க் கண்டதும் உச்சஸ்தாயியை எட்டியது. "அத்தை! அத்தை! அம்மா அச்சா!" என்று சொல்லிய வண்ணம் வாயிற்படிகளைக் கடந்து அவளிடம் போய்விட்டான்.

குழந்தையின் படபடத்த நிலையையும் கலங்கிய கண்களையும் கண்ட சீதாவின் உள்ளத்தில் வேதனை உண்டாயிற்று. 'குழந்தை அருமை தெரியாதவர்களுக்கெல்லாம் சிசுவைக் கொடுத்து இப்படிச் சித்திரவதைக்கு உள்ளாக்குகிறாயே பகவானே!' என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்டு பெருமூச்செறிந்தாள். தன்கால்களைப் பின்னிக் கட்டியபடி முகத்தைப் பரிதாபத்துடன் பார்த்த கண்ணனைத் தூக்கிக் கொண்டாள். சீதாவின் மார்மீது முகத்தைப் பொத்திக் கொண்டு ஆறுதலடைந்தான் அவன். பிறகு உள்ளே சென்று, தன் கணவர் திருச்சியிலிருந்து கொணர்ந்த ரஸ்தாளி வாழைப்பழம் ஒன்றைக் கொடுத்து, சாந்தப்படுத்தினாள். பழத்தை உரித்துத் தோலைத் தெரு வாயிலில் கொண்டுவந்து போட்டுவிட்டு, அங்கேயே ஒரு படியின்மீது அமர்ந்து கொஞ்சங் கொஞ்சமாகப் பழத்தைச் சுவைக்கத் தொடங்கினான் கண்ணன். சீதா உள்ளே காப்பி போட்டுக் கொண்டிருந்தாள்.

'பாவம், குழந்தையை நன்றாக அடித்து விட்டேன்! சந்தடியே காணோமே! எங்கே போய்விட்டான்?' எனத் தன் மகன் கண்ணனை நினைத்துக் கொண்டே கோமளம் எழுந்து தெருவாயிலுக்கு வந்தாள்.

வாழைப் பழத்தின் இனிய சுவையில் தன்னை மறந்திருந்த கண்ணன் தாயைப் பார்க்க வில்லை. ஆனால் அவனை அந்நிலையில் கண்ட கோமளத்தின் முகம் மீண்டும் சிவந்தது. "கர்மம்! கர்மம்! அவர் கையால் தொட்டு வாங்கி வருவதை எல்லாம் தின்றால்?" இரண்டெட்டில் பக்கத்து வீட்டு வாசலுக்குப் போய், கண்ணன் கையிலிருந்த பழத்தை வெடுக்கென்று பறித்து வீதியில் வீசினாள். குழந்தை பிரமித்து நின்றான்; விழவிருந்த அடிக்கும் தன்னைத் தயார் செய்து கொண்டான். ஆனால் அடி விழவில்லை. "வா' சனியனே! தொட்டிலில் படுத்துத் தூங்கு!" என்று பையனை இழுத்துக் கொண்டு வேகமாக நடந்து தன் வீட்டுக்குள் போய் விட்டாள் கோமளம். சீதா சப்தம் கேட்டு வாயிலில் வந்து நின்றதைக்கூட அவள் கவனித்ததாகத் தெரியவில்லை.

சீதாவின் கண்கள் வீதியில் கிடந்த பழத்தின்மேல் குத்திட்டு நின்றன. காகம் ஒன்று வளைய வந்து அதைக் கொத்தியது. "அதற்கும் குஷ்டம் தொத்திக் கொள்ளக்கூடுமோ? அதைக்கூடத் துரத்தி விடலாமா? இவ்விதம் அவமானப்படத்தானா அவ்வளவு அன்புடன் குழந்தை கையில் பழத்தைக் கொடுத்தேன்?"

தூணைப் பிடித்து நின்ற சீதா மெல்லத் திண்ணை மீது உட்கார்ந்தாள். புண்பட்ட அவள் மனம் சஞ்சலித்தது.

2

"இது என்ன வாழ்வு அமைப்பு? யாவருக்கும் ஏதேனும் ஒரு தீராத குறையை மற்றச் சுகங்களுடன் பின்னிப் பிணைத்து வைத்துவிடுவதுதான் அவனுடைய நியதியா?"

சீதா தன் சிறு வயதில் எவ்வளவோ கஷ்டப் பட்டாள். அவளுடைய தந்தைக்குக் குசேலர் என்ற பெயர் இல்லாததுதான் குறை! அவருக்குப் பன்னிரண்டு பெண் குழந்தைகள்! சீதாதான் கடைசிப் பெண்.

பஞ்சாங்கம், ஜோஸியம், ஜாதகம், வைத்தியம், கல்யாணத் தரகு, கிராமத்தைவிட்டுப் பட்டணவாசம் போய்விட்ட இளம் மிராசுதார்களின் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்தல்—இத்யாதி பிரவிருத்திகளில் ஈடுபட்டு, இரவு பகலாக ஓடித் திரிந்து அலைந்து குடும்பத்தில் வறுமை தலைகாட்டாமல் இருக்கப் பகீரதப் பிரயத்தனங்கள்

செய்து வந்தார் அவர். எவ்வளவு வந்த போதிலும் சம்சார சாகரத்தில் அலை ஓய்ந்த பாடில்லை. வரவுக்கும் செலவுக்கும் சரியாகவே இருந்தது. சமயா சமயங்களில் செலவின் இனமே துடித்து நின்றது.

அவரும் கல்யாண உலகில் தம் நீண்டகால அனுபவத்தை உபயோகித்து அலைந்துதிரிந்து தான் பார்த்தார். இருந்தபோதிலும் சீதாவின் தலையெழுத்து என்னவோ தன் போக்கில்தான் போயிற்று!

* * *

கல்யாண சந்தடியில் பெண்கள் குழுவிலிருந்து 'கசமுச' சப்தம் பலமாக எழுந்தது. கடைசியில் சீதாவின் அத்தை தன் சகோதரனை வாய்விட்டே கேட்டுவிட்டாள்.

"ஏண்டா அப்பாவி, கடைசியிலே கிளியாட்டமா உள்ள நம்ம சீதாவுக்குப் பெருவியாதி உள்ள மாப்பிள்ளையைத்தானு தேடிப் பிடித்தாய்? இன்னும் கொஞ்ச நாள் போனல்......... ஐயோ, ராம! ராம! அந்தக் கண்ணராவிக் கோலத்தை நம்ம பெண் பார்த்துக் கொண்டும் வாழணுமா? இது என்னடா இப்படிச் செய்துவிட்டே? ஊரார் கல்யாணங்களை எல்லாம் உருப்படியாகச் செய்து வைத்த நீ, உன் பெண் வாழ்வை சோடையாக்கி விட்டாயே............"

"போடி, போ! பெருவியாதியாவது ஒன்ருவது? மூச்சு விடாதே அக்கா; அது அவருடைய உடல்வாகு. ஆனல் பார்ப்பவர்களுக்கு அப்படித் தோணும். இந்தக் கல்யாண சந்தடி அடங்கிய பின், ஒரு மண்டலம் சாப்பிடும்படி ஒரு பச்சிலை மூலிகை லேகியம் செய்து கொடுத்து, மாப்பிள்ளையின் தோற்றத்தையே மாற்றி விடாவிட்டால், நான் வைத்தியம் செய்வதையே நிறுத்திவிட மாட்டேனு? அவர் அந்தஸ்து எங்கே, நாம் எங்கே? அவர் கச்சேரி செய்யும்போது கேட்டதில்லையே நீ! அடடா, அந்தக் கல்யாணியையும் சங்கராபரணத்தையும் என்ன பாடு படுத்துகிருர் தெரியுமா? அபாரம்! அசாத்திய சங்கீத ஞானம். எத்தனை புதுப்பணக்காரர்கள் அவர் வீட்டின் முன் கார் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டு காத்துக் கிடக்கிருர்கள் தெரியுமா? என்ன மரியாதை, என்ன உபசாரம்! இதெல்லாம் அவர் உடலுக்கா? இல்லை. அவர் சங்கீதத்திற்கு, அவருடைய மேதைக்கு. அவருடைய வீட்டில் லக்ஷ்மி தாண்டவம் செய்கிருள்; ஒரு குறைவும் இல்லை. பிறந்தது முதல் நம்ம வீட்டில் கஷ்டப்பட்ட சீதா சௌக்கியமா இருப்பாள். ஸ்வர்ண புஷ்பம் கைவந்த பெண்களுக்குச் சஞ்சலமேது?............"

"என்ன இருந்தாலும் குழந்தை மனத்திலே கணவனைப்பற்றிய எண்ணமிருக்காதோடா, அப்பா? நீ என்னமோ ஸ்வர்ணத்தை மேலாகச் சொல்றே! ஆனல் வயசு பெண்ணுக்கு................."

"போதுண்டி அக்கா, போதும்! உனக்கு உலக விவகாரம் தெரியாது. நான் வேணுமென்றேனு? ஜாதகப் பொருத்தம் அப்படி வந்து சேர்ந்ததே சொல்! நீயும் அசடாட்டமா பேசாதே! என் கையில் பரம்பரையாக வந்த வாகட வைத்திய சாஸ்திர ஓலைச் சுவடி இருக்கும் வரையில் எந்த வியாதியைப் பற்றிய கவலையும் வேண்டாம் உனக்கு. போ, போய் ஆகவேண்டிய காரியங்களைப் பார்! மற்ற யாரும் வாய்த் துடிக்கப் பேசவிடாதே!"

* * *

கல்யாணம் முடிந்துவிட்டது. மற்றக் காரியங்களும் சீதாவின் தந்தை போட்ட பிளான்படி நடந்தேறிவிட்டன. ஆனல், பரம்பரையாகக் கைவந்த அவரது வாகட வைத்திய சாஸ்திரத் திறமையையும் அனுபவ ஞானத்தையும் பெரும் சோதனைக்கு உள்ளாக்கிவிட்டார் அவருடைய மருமகன் சிவராம பாகவதர். மணமான இரண்டொரு வருஷங்களில் கைகளும் கால்களும், சுருங்கிக் கோணி, பெருவியாதியைப் பறைசாற்றின.

எது எவ்விதமிருந்தபோதிலும் பாகவதர் அவர்களின் பெரும் புகழும் சங்கீத உலகில் அசைக்கமுடியாத உன்னத ஸ்தானத்தை அடைந்துவிட்டன. சீதா ஸ்வர்ணத்தின் நடுவே, அதனுல் விளையும் ஹிதமான சுகங்களிலேதான் இருந்தாள். இருந்தும் அவள் மனம் வேதனையைப் பயிரிட்டுக் கொண்டிருந்தது.

சீதா வேதனை அடைவதை யாரும் லக்ஷியம் செய்வதாகத் தெரியவில்லை; உலகின் காரியங்கள் கிரமமாக நடந்து வந்தன. சிவராம பாகவதர் நாள் தப்பினுலும் கச்சேரி தப்பாமல், தமிழ் நாட்டில் இங்கும் அங்கும் எங்குமாக அமுதவாரியான சங்கீத மழை பொழிந்து கொண்டிருந்தார். மாதத்தில் ஒரு நாள் வீட்டில் தங்கினுல் அபூர்வம். அப்படித் தங்கும் அன்று நோட்டுகளும், நாணயங்களுமாக இருக்கும் பணப்பையைச் சீதாவிடம் கொடுத்து, பணத்தை எண்ணி இரும்புப் பெட்டியுள் வைத்துக் கொள்ளச் சொல்லுவார். தாம் வாங்கி வந்திருக்கும் விதவிதமான சாமான்களைச் சீதாவுக்கு

அளித்து மகிழ்வார். இப்படியாக எத்தனையோ வருஷங்கள் ஓடிவிட்டன.

3

பெரும்பாலும் தனிமையில் இருக்கும் சீதாவுக்கு விளையாட்டுத் துணையாகவும் பேச்சுத் துணையாகவும் இருப்பான் கண்ணன். அவன் அம்மா கோமளத்திற்கு நாள் முழுவதும் வீட்டுக் காரியங்கள் இருக்கும். சற்று ஓய்ந்தால் நாவல் படிக்கத்தான் அவள் மனம் போகுமே தவிர, சீதாவிடம் பேச அவளுக்குப் பிடிப்பதில்லை.

தன் பி. ஏ. படித்த கணவர் இரவு எட்டு மணிவரை காரியாலயத்தில் உழைத்து விட்டு வந்து, மீண்டும் காலையில் எழுந்ததும் காகிதக் கட்டுகளுடன் மாரடித்து மல்லுக்கு நின்றும் வருவாய் குடும்பத்தை நடத்தப் போதாமல் இருப்பதும், பக்கத்து வீட்டுப்பாகவதர் இப்படியும் அப்படியும் இரண்டாவது வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்துவந்து பணம் பணமாக அவிழ்த்துக் கொட்டுவதும் கோமளத்திற்கு அசாத்தியப் பொறுமை. சீதாவிடம் அவள் மனம்விட்டுப் பேசமாட்டாள். தன் கணவர்தான் உயர்ந்தவர், அவர் உத்தியோகமும் அந்தஸ்துமேதான் உயர்ந்தவை என்னும் தோரணையிலே எடுப்பாகப் பேசுவாள்.

ஆனால் இருபது இருபத்திரண்டாம் தேதிகள் வந்துவிட்டால் பேச்சின் ஸ்தாயி சற்று மட்டுப்படும். சீதாவிடம் கைமாற்றுகப் பணம் வாங்கும்போது சற்று ஆதரவு காட்டிப் பேசுவாள். அவளை வீட்டினுள் அழைத்துப் பின்னலிட்டுப் பூச்சூட்டிக்கூட விடுவாள். ஆனால் மீண்டும் முதல் தேதி வந்து, கைமாற்றுக் கடனைத் திருப்பிக் கொடுத்த பிறகு, பழைய கோமளமும் எடுப்புப் பேச்சுமாகத்தான் இருக்கும்!

சீதா இதையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. கண்ணனுடன் பேசுவதும் அவன் சிறுபிள்ளைப் பேச்சில் மகிழ்வதும் இருந்தால் அவளுக்குப் போதுமென இருந்தது. கண்ணனைத் தன் வீட்டுக்குப் போகாமல் இருக்க வேண்டும் என்று கண்டித்து நிறுத்தாமல் இருப்பதே பெரிய காரியம் என்று சீதாவுக்கு அவளிடம் ஒரு விசுவாசம்.

* * *

இப்போது சீதாவின் மனத்தில் உறுத்தியதெல்லாம் கோமளத்தின் துடிப்பான செய்கைதான். முதல்நாள் திருச்சியில் ஒரு கச்சேரி செய்துவிட்டுத் திரும்புகையில் ரஸ்தாளி வாழைப்பழம் வாங்கி வந்தார் பாகவதர். அதைச் சாப்பிட்டபொழுது கண்ணனின் ஞாபகம் வந்துவிட்டது சீதாவுக்கு. அவனுக்கென்று ஒரு பழம் எடுத்து வைத்து இருந்தாள். அதைத்தான் இப்பொழுது எடுத்துக் கொடுத்தாள். கோமளம் இப்படிச் செய்வாள் என்று சீதா எதிர்பார்க்கவே இல்லை. 'கர்மம்,! கர்மம்!' என்று கோமளம் தலையிலடித்துக் கொண்டது சீதாவின் கண் முன்னாலேயே இருந்தது. அந்தச் சொல் அவள் மனதில் இல்லாத பொல்லாத கற்பனைகளைக் கிளறிவிட்டது. 'தனக்கு ஒரு குழந்தை பிறந்தால், ஆம்! அதற்கும் அந்தக் கர்ம வியாதி தொடர்ந்துதான் வரும். குழந்தை இல்லாமல் இருப்பதே எவ்வளவோ மேல்!'

தனி மரமாக இருந்து அத்தனை செல்வங்களையும் அனுபவிக்க அவள் மனம் விரும்பவில்லை. அவள் பெண்மை கண்ணனைப் போன்ற ஒரு சிறு குழந்தையைப் பெற்றெடுக்கவே இத்தனை நாட்களாக விரும்பியது. ஆனால் அகப் பகையின் பிறப்பான அச்சொல் இப்போது அவள் ஆசையை நசிக்கச் செய்து விட்டது. திடீரென இரு கண்களும் அவிந்து விட்டதைப் போன்ற பேர் இருள் அவள் மனத்துள் சூழ்ந்தது.

முதுகுப்புறத்தில் தூளி கட்டிக் குழந்தையைப் போட்டுக் கொண்டு, சிரிப்பும் பேச்சுமாகச் செல்லும் நரிக்குறத்தியின் வாழ்வு தன் வாழ்வைவிட எவ்வளவோ உயர்ந்ததாகக் கற்பனை செய்தது அவள் மனம். தன் தந்தை மட்டுமென்ன, உலகே, கடவுளே, தன்னை வேண்டுமென்றே வஞ்சித்து விட்டதாக எண்ணியது நெஞ்சம்.

விரக்தியின் உச்ச நிலையை அடைந்த சீதா எழுந்து வீட்டினுள் நுழைந்தாள். கதவைப் படாரெனச் சாத்தித் தாழிட்டாள். கட்டில்மீது படுத்து விம்மி விம்மி அழத் தொடங்கினாள். தன்னையறியாது புரண்டு புரண்டு படுத்தாள், தெருப் புழுதியிலே புரண்டுகிடந்த பழத்தைப் போலே!

4

இந்தச் சம்பவம் நடந்த நான்கு நாட்களுக்குப் பிறகு கண்ணன் சீதாவிடம் ஓடி வந்தான். "அத்தே அத்தே! அம்மா கூப்பிடறு. வா! வா!" என்று சொல்லி அவள் சேலைத் தலைப்பைப் பிடித்துத் தெருப் பக்கம் இழுத்தான்.

அகம் கருகிய நிலை வெளியாகாதிருக்க முகமலர்ச்சியை வருவித்துக்கொண்டு தெரு வாயில் வராந்தாவில் நின்றுகொண்டிருந்தாள் கோமளம். ''என்னம்மா சீதா! என்ன செய்திண்டிருக்கே? ஏன் தலை அலங்கோலமா இருக்கு? வா, தலை பின்னிவிடுகிறேன்!'' என்று அழைத்தாள். சீதா மறுக்கவில்லை: சென்றாள்.

தலைவாரிக்கொண்டிருக்கும்போதே தன் காரியத்திற்கு வந்தாள் கோமளம். 'சீதா! இந்த மாதம் ரொம்ப சிலவா போச்சு! ஒரு ஐம்பது ரூபாய் கொடு! மாதம் இருபத்தைந்தா கொடுத்துடறேன்!'' என்று ஆரம்பித்தாள்.

சீதா மௌனமாக இருந்தாள். அவள் மனம் வாழைப்பழச் சம்பவத்தை எட்டிப் பிடித்தது.

''என்ன சீதா, ஏன் பேசல்லே? பெட்டி சாவி உன்னிடம் இல்லையா என்ன?''

''என்னிடம்தான் இருக்கிறது. ஆனால்.........''

''நான் சொன்னபடி திருப்பிக் கொடுக்க மாட்டேனோ என்று.........''

''சேச்சே, அதெல்லாமில்லை!''

''பின்னே என்ன?''

''அது.........''

''என்ன அது?''

''பணமும் அவர் கைதொட்டு வாங்கி வந்ததாயிற்றே.........''

கோமளம் துணுக்குற்றாள். அகப் பகையின் விளைவான வாழைப்பழச் சம்பவத்தை எட்டிப் பிடித்தது. ''அதற்கென்ன சீதா? பணத்திற்கேது மாசு? லக்ஷ்மியைக் குறை சொல்லலாமா?'' என்று மழுப்பினாள்.

''ஹூம்ம்! சரி. தருகிறேன்!'' என்று சொல்லிவிட்டு, ஆழ்ந்த பெருமூச்சுவிட்டாள் சீதா. அது வேரூன்றிவிட்ட கோமளத்தின் அகப் பகையை நீக்குமா என்ன?

கேள்வி 4-க்கு ரூ2, ஒரு வருட வாரப் பலன் ரூ. 9.

ஜோதிஷ மகுட வர்த்தனர்.

9-5-38ல் சென்னை ஜோதிஷர் மகாநாட்டின் சபைத்தலைவர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர், பீமகவி, சுகர் புஜண்டர், சாஸ்திர நிபுணர், ஜாதகம் கணிக்க ரூ. 3 ஒரு வருஷத்திற்கு ஆதாயம் விரயம், குடும்பம், தொழில், கடன், ஆரோக்கியம், காதல், சத்ரு, பிரயாணம், சுபம், அதிஷ்டம்:- மாதம், நாள், திக்கு, ரத்னம், நெம்பர், வேளை, உலோகம், புஷ்பம், லாட்டரி, ரேஸ், ஒவ்வொரு காரியம் சித்திபெறும். சந்திரனின் நாட்களும், மணிக்கு மணி பலன் அட்டவணையுடன் மற்றும், பலாபலன்கள் மாதவாரியாக எழுத ரூ. 5 ஓர் திசைக்கு புத்திபலன் ரூ. 5. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரபஸர் N. V. சுப்ரமணியம், J. M., J. A. மிராஸ்தார்

நெ. 10, ஜோதிஷ ஆசிரமம், வாலாஜாபாத், P. O., S. I. R., (சென்னை.)

ஜகத்ரக்ஷக ஸ்ரீ ஷண்முக யந்திரம்

12,58,400 ஜனங்கள் போற்றுவது

நவநாயகரின் கொடுமை ஒழியும். ஜன வசிகரம், லாட்டரி பந்தயம், வியாபாரம், உத்தியோகம், பலன் தரும். பேய், பிசாசு, துர்சொப்பனம் நீங்கும். விவகாரம் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திர மகிழ்வும், கரும வியாதிகள் குணமாகும். சத்ரு பணிகுவர், தரித்திரம் விலகிவிடும். உண்மையில் (ஸ்திரீ புருஷர்) காதல் வெற்றி தரும். ஸ்திரீகள் அணிந்தால் மேல் சொல்லிய பலன் தருவதும் சூதக வலி உற்பவ சின்னங்கள் தீரும். குழந்தைகள் அணிந்தால் சகடை, பாலாரிஷ்டம், பக்ஷிதோஷம் முதலிய 4,448 தோஷங்கள் தீரும். ரூ. **3-0-0** திக்கு விஜயம் அஷ்ட ஐஸ்வரிய ஜெயவசீகர் சத்ரு சம்ஹாரி. வெற்றி வெற்றி வெற்றிவேல் ரூ. **9**

மாந்திரீக மருத்துவ ஆபீஸ், (A)

வாலாஜாபாத் P. O., S. I. R., சென்னை.

சென்ற இதழ் தொடர்ச்சி.

விருப்பம் என்ன

ஆர். எஸ்.

7

அக்பருடைய சிந்தனை விரிந்தது.

1542ஆம் வருஷம் நவம்பர் மாதம் இரண்டாம் தேதி. நல்ல வெயில். பசுந்தழைகள் கூடக் கருகி விடக்கூடிய வெப்பம். எங்கே பார்த்தாலும் மணல் வெளிதான். புல்லோ, சிற்றாறோ, மரமோ ஒன்றையும் காணவில்லை.

அலைகடலில் பாய்விரிக்கும் கப்பலைப்போல் அந்த மணல் வெளியில் ஒரு கூடாரம் மிதந்தது. அதனுள்ளிருந்து ஒரு குழந்தை அழும் சப்தம் கேட்டது. அப்போது பிறந்த குழந்தை. கஸ்தூரியின் மணம் நிலவிய அந்த இடத்திலிருந்து ஒரு ஆள் இளம் வயதினனான ஒருவனை வெளியே அழைத்துச் சென்றான்.

"ஹுமாயூன் சாகேப்! அதோ பாருங்கள்" என்று வடக்குத் திசையைச் சுட்டிக்காட்டினான்.

அங்கே ஒரு புள்ளி தெரிந்தது. வர வர அது பெரிதாகியது. மணற்புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஒரு குதிரை அங்கே வந்து நின்றது.

"உங்கள் சகோதரர் அஸ்காரி, காந்தஹாரிலிருந்து இங்கே படையெடுத்து வருகிறார்."

கண நேரத்தில் அந்தக் கூடாரம் கலைந்தது. பச்சிளங்குழந்தையை ஜோஹர் என்ற பணியாளிடம் விட்டுவிட்டு எல்லோரும் விரைந்து சென்று தப்பித்துக் கொண்டார்கள்.

அந்தக் குழந்தை அஸ்காரியின் கைக்குப் போய், பிறகு காபூலிலிருந்த காம்ரானின் கைக்கு மாறியது.

அக்பரின் பிறப்பு இப்படி இருந்தது. வளர்ப்பு அதைவிட வினோதமாக இருந்தது. சிறு வயதிலிருந்து வஞ்சகம், பொறாமை, இவைகளின் நடுவே சிக்கி அபாயத்தில் மூழ்கியிருந்து அவர் வளரவேண்டியிருந்தது. துரோகிகளின் வஞ்சகம் அவரைக் கணத்துக்குக் கணம் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

இருபது வருஷங்களுக்குப் பிறகு இன்று மட்டும் என்ன வாழ்ந்தது? உலகத்திலேயே அவர் மிகவும் நம்பியது ஒரு சிலரைத்தான். பைராம்கானைப் பெரிதும் நம்பினார். அவர் தகப்பன் என்று எண்ணினார். அவன் வாழ்க்கையின் இறுதியில் அவரை எதிர்த்துக் கலகம் செய்தான். ஒரு கணம் அயர்ந்திருந்தால் அவர் உயிருக்கே உலைவைத்துப் பட்டம் சூட்டிக் கொண்டிருப்பான். அது அவர் வாழ்க்கையில் முதல் ஏமாற்றம். யாரை நம்புவது என்று தெரியாமல் அவர் திண்டாடினார்.

அடுத்தபடியாக, தாய் ஹமீதாவைக்காட்டிலும் அருமையாக அவர் மதித்தது மகாம் அனகாவைத்தான். ஜோஹரிடமிருந்து அக்பரை வாங்கிக்கொண்டது முதல் அவர் பட்டமேறும்வரை அவரைப் போற்றிப் பாதுகாத்த பெருமை அவளுக்குத்தான் உரியது. அப்படிப்பட்டவள் என்ன செய்தாள்? ஒரு கணம் தப்பியிருந்தால் கத்தி அவர் கழுத்திலோ மார்பிலோ பாய்ந்திருக்கும். அவளிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்? ராஜ்யத்தின் பிரதம மந்திரிக்கு உரிய பொறுப்பை அவள் கையில் அவர் விட்டு வைத்திருந்தார். அது எவ்வளவு தூரம் பலன் தந்தது?

அவருடைய உள்ளம் திடுக்கிட்டது. எவ்வளவு பெரிய பொறுப்பு? தலைமேல் பெரிய பாரத்துடன் கணவாயின் இரு பக்கங்களையும் பிடித்துக்கொண்டபோது ஒரு பக்கம் சரிந்தது; பிறகு இன்னொரு பக்கமும் சரிந்துவிட்டால் எப்படி இருக்கும்? யாரையும் நம்ப முடியவில்லை. எதையும் உறுதியாக நினைக்க முடியவில்லை. எந்தக் குணத்தையும் சாசுவதமென்று முடிவுகட்ட இயலவில்லை. எது உண்மை? எது பொய்? எது தணற்

கட்டி? எது வைரக்கல்? தொட்டுப் பார்த்துக் கை சுடும்வரை எதையும் தீர்மானிக்க முடியவில்லையே?

தம் நிலையை அவர் உணர்ந்தார். பைராமை நம்பி ஏமாந்தார். வளர்ப்புத்தாயிடம் வைத்த நம்பிக்கை பாழ்த்தது. வேறு யாரையும் நம்பமுடியவில்லை. நம்பவும் தயாராக இல்லை. அவரை மட்டும்தான் அவர் நம்ப முடியும். தன் உயிரின் மெய்ப்பாதுகாப்பாளன் தன் உயிர்தான். இந்த நிலையில் தாய் நாட்டினின்றும் விலகி யிருக்கும் இந்தச் சாம்ராஜ்ய முழுதையும் அவர் காக்க வேண்டுமா? எவ்வளவு பெரிய சுமை? உண்மை எங்கே? அல்லா அதை அவருக்குக் காட்டுவாரா?

8

அவருடைய பதினான்காவது வயதில் நிகழ்ந்த சம்பவம் அது.

புதிதாகப் பழகியிருந்த குதிரை அது. உலகம் வெறுத்துப் போனதாக மனதுக்குத் தோன்றியது. குதிரைமேல் ஏறி ஆக்ராவிலிருந்து சுமார் முப்பது மைல்களுக்கு மேல் போய்விட்டார். அடர்ந்தகாடு. அங்கே இறங்கிவிட்டார். குதிரையைக் கவனிக்கவில்லை. அல்லாவைத் தொழத் தொடங்கினார்.

கண் விழித்தபோது கதிரொளி சுருங்கியிருந்தது. இரவின் தனிமையும் கானகத்தின் பயங்கரமும் அவரைப் பயமுறுத்தின. குதிரையைக் காணோம். தொழுகைக்குப் பயன் திகைப்பும் குழப்பமுமா? உலகத்தின் மேல் ஏற்பட்ட வெறுப்பெல்லாம் பறந்துவிட்டது. பயம் ஒன்றுதான் மீக்கூர்ந்து நின்றது.

திடீரென்று குதிரைக் குளம்படிச் சத்தம் கேட்டது. குதிரை வந்து அவர் அருகே நின்றது. யார் அதை அனுப்பியது?

“அல்லாதான் அனுப்பினார்!” என்று அவர் மனம் பதில் சொல்லியது.

குதிரைமேல் ஏறி ஆக்ராவுக்குத் திரும்பினார்.

* * *

வெகு நாட்களுக்கு முன் நடந்த சம்பவம். ஆனால் அப்போதிலிருந்துதான் அல்லாவின்மேல் அவருக்குப் பரிபூரண நம்பிக்கையும் பக்தியும் ஏற்பட்டன.

இன்று அந்த அல்லா அவருக்கு வழிகாட்ட மாட்டாரா? உண்மையை அறிந்துகொள்ள

விரும்பும் அவருடைய அடங்காத தாகம் தணிய வழியே இல்லையா?

* * *

அன்று நாடு முழுவதும் குதூகலத்தில் ஆழ்ந்து கிடந்தது. அன்று அக்பர் பட்டமேறிய திருநாள். சக்கரவர்த்தி அன்று நகர் முழுதும் பவனி வருவார்.

சாயங்கால நேரமாயிற்று. இன்னும் கொஞ்ச நேரத்தில் பவ்னி தொடங்கிவிடும். திடீரென ஜனங்களினிடையே பரபரப்பு ஏற்பட்டது. தெருவில் குழப்பம் உண்டாயிற்று. அரசருடைய பட்டத்து யானையும் மற்ருெரு யானையும் மதம் பிடித்தலையத் தொடங்கினதுதான் இதற்குக் காரணம். தெருவில் கட்டியிருந்த தோரணங்களெல்லாம் பிய்ந்து போயின. ஜனங்கள் சிதறி ஓடினூர்கள். கடைகள் மூடப்பட்டன. பழக்கடைகளும் பூக்கடைகளும் உருவிழந்து போயின.

ஒருவராலும் அவைகளை அடக்க முடியவில்லை. அந்த நகரம் முழுவதிம் அவைகளை அடக்கவல்லவர் ஒருவர்தான், அவர்தான் அக்பர் சக்கரவர்த்தி.

யானையேற்றத்தில் அவர் நிகரில்லாதவர். மதயானைகளின் மனதையும் நிர்ணயிக்கக்கூடியவர். ஆனுல் அக்பருடைய பட்டாபிஷேக தினத்தன்று அவர் அங்கு வருவாரா? யாராவது எதிர்பார்க்க முடியுமா? ஆனுல் இந்தக் குழப்பம் எப்படி முடிவடைவது?

ஆக்ரா நகரம் முழுவதும் கலங்கி நின்றது. நகரத்தில் குழப்பமேற்படுத்திவிட்டு யமுனை நதிக் கரையைப் பார்க்க விரைந்தன அந்த இரண்டு யானைகளும். இன்னும் சிறிது நேரம் ஆகியிருந்தால் எவ்வளவோ உயிர்கள் பலியாகியிருக்கும். ஒரு யானை சட்டென்று நின்றது. அதன் முதுகில் யாரோ துணிந்து ஏறிக்கொண்டிருந்தார். சந்தேகமில்லை அவர் சக்கரவர்த்திதான்!

யானையின் உடலில் அங்குசம் அணு அணுவாகப் பாய்ந்தது. அதன் பிளிறல் கணத்துக்குக் கணம் கோரமாக மாறியது! அதைக் கேட்க யாருக்கும் தைரியமில்லை. அதைப் பார்க்க ஒருவருக்கும் துணிச்சல் இல்லை. ஆனுல் ஒரு உயிர் மட்டும் அலட்சியமாகத் தன் காரியத்தைத் தொடர்ந்தது. மற்ருெரு யானை, யமுனை நதியின் குறுக்கே இருந்த படகுப் பாலத்தின் மேல் கால் வைத்து ஓடத் தொடங்கி விட்டது. அதை நோக்கித் தம்முடைய யானையை விரட்டினூர் அக்பர். யானைகள் மோதின, இரத்தம் சிந்தியது. யமுனையே கலங்கிச் சிவந்தது. செதிள் செதிளாக நீர்த்திவலைகள் கிளம்பிக் கண்ணை மறைத்தன. எல்லோருடைய மனத்திலும் பயம் ஓங்கி நின்றது. அக்பர் இனி பிழைக்க முடியாது!

அவர் பெரிய வீரராக இருக்கலாம். ஆனுல் அங்கே யமுனையின் ஆழம் நாலு ஆள் உயரம். சண்டையிடும் யானைகளுக்கிடையே விழுந்தாலோ காலில் சிக்கினுலோ உடல் கூடக் கிடைக்காது. ஆனுல் யமுனையின் சுழியிலோ முதலைகளிடமோ சிக்கினுல் போனகதி கூடத் தெரியாது! என்ன பயங்கரம்!

யானைகளின் உக்கிரம் அதிகமாகியது. ஒரு யானையிலிருந்து மற்ருெரு யானைக்குத் தாவித் தாவி அடக்கத் தொடங்கினூர் அக்பர்.

இரண்டு யானைகளும் சீறி அவரை நோக்கித் திரும்பின. ஆனுல் அக்பரைக் காணேம்!

யானைகள் கரைக்குத் திரும்பவில்லை. ஏதோ ஒரு சக்தி அவைகளின் வெறியை அடக்கிக் கொண்டிருந்தது. அவைகளின் பிளிறலில் இருந்த பயங்கரம் வேதனையாக மாறிக்கொண்டிருந்தது. யமுனை தெளிய ஆரம்பித்தது. ஆனுல் அக்பரைக் காணேம்!

இவ்வளவு பெரிய குழப்பத்தைச் சமாளித்தவர் எங்கே! யானையேற்றத்தில் சாதிக்க முடியாத செய்கைகளைச் சாதித்த மன்னர் எங்கே? அவரை யமுனை விழுங்கிவிட்டதா?

கூட்டம் திக்பிரமித்து நின்றது. எங்கும் பயங்கரமான அமைதி நிலவியது. திடீரென்று ஒருவன் "அதோ!" என்று கத்தினுன். கையில் அங்குசத்துடன் சொட்டச் சொட்ட நனைந்தவாறு அக்பர் நின்று கொண்டிருந்தார்.

"சக்கரவர்த்திக்கு ஜே!" என்ற கோஷம் வானைப் பிளந்தது.

9

இரவு உப்பரிகையின் திறந்த முற்றத்தில் இன்னும் நிலவின் கதிர்கள் தவழவில்லை. ஆனுல் அங்கே தென்றல் வீசியது. மசூதியில் குர்-ஆன் வாசிக்கும் சப்தம் 'முணு முணு' வென்று காதில் விழுந்தது. அங்கிருந்து கிளம்பிய அகிற்புகை தென்றலில் மிதந்து வந்தது.

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங் காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

சாதாரண கேஸ்களுக்கு ... ... ரூ. 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு ... ... ரூ. 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு ... ... ரூ. 8

(வி. பி. அணா 12 கூட)

தயாரிப்பவர்கள்:-

Mrs. P. DEVEE, F.D.S. (C.M.)

Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோடு, மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு, பங்களூர் ஸிடி.
நாதம் & கம்பெனி, மட்டஞ்சேரி, கொச்சி.
ஷா கம்பெனி, மங்களூர். (S: K.)
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட், 167, தராம்தோலா தெரு, கல்கத்தா.
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல் தெரு, கொழும்பு, & 768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

தேவாம்ருதம்

"பீம-வீர்"

சாஸ்வத சக்தியை கொடுக்கும்

देवामृतम्

'भीम-वीर'

शाश्वत शक्ति देनेवाला है

RESTORES MAN HOOD

Nectar of Life

MAKES MEN YOUNG

"BHEEMA—VEER"

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகைச் சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தைச் சுத்தி செய்து, சாசுவதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40நாள் மருந்து ரூ. 3-12-0. பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா, 31/2, வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை 4.

அக்பருக்கு முன் அபுல்பாஸல் உட்கார்ந்திருந்தார். அவர்தான் முதலில் பேசினார்.

"சாகேப்! உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. என்ன எண்ணத்துடன் இப்படிப் பயங்கரமாக விளையாடினீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தப் பெரிய மொகலாய சாம்ராஜ்யம் இன்னும் சரியாக நிறுவப்படவில்லை. அதற்கு நாங்கள் உங்களை நம்பியிருக்கிறோம். எங்களைத் தவிக்க விட்டுவிடாதீர்கள்".

அக்பர் மறுமொழி கூறினார்.

"அபுல்பாஸல்! கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக என் மனதில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. சிறு வயதிலிருந்து வஞ்சகம் பொறாமை இவைகளிடையே வளர்ந்து எதிரிகளிடமிருந்து தப்பிப்பட்டமேற்றேன். ஆனால் யாரை என்னுடைய நண்பர்களென்றும் ரக்ஷகர்களென்றும் நம்பி என் தந்தையென்றும் தாயென்றும் போற்றினேனோ அவர்கள் கூட என்னைத் தொலைக்கப் பார்த்தார்கள். என் மனம் குழம்பியது,

அப்படியானால் எனக்கு ஆதரவு எங்கே? பற்று எங்கே? யாரை நம்புவேன்? உண்மை எது? பொய் எது? நான் தன்னந் தனியன் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. அலைகடல் தாலாட்டும் கப்பலைப் போன்று என் நிலை ஆயிற்று. என் ஆத்மா எதைப்பற்றி வாழ்வது? என் வாழ்க்கைப் படகின் நங்கூரம் எங்கே?

எனக்குப் பிறவியைக் கொடுத்தவர் அல்லா. எனக்கு வாழ்வைக் கொடுத்தவர் அவர்தான். என் தலையில் இந்தப் பொறுப்பை ஏற்றியவர் அவரே. அவருடைய விருப்பம்தான் என்ன? நான் உயிரோடு இருந்து இந்த நாட்டில் ஆளவேண்டும் என்று அவர் விரும்புகிறாரா? அல்லது மடிந்து ஒழிய வேண்டுமென்று அவர் நினைக்கிறாரா?

மதம் பிடித்த யானைமேல் ஏறினேன். மிகப் பயக்கரமான நிலையில் யமுனையை நோக்கி அதை விரட்டினேன். யமுனையின் படகுப் பாலம் பாதி முழுகிவிட்டது; என் உடல் சலித்தது. உடல் குலுங்கியது. ஆனால் உள்ளம் சலிக்கவில்லை. யானைகளின்மேல் என் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தபோது என் ஆத்மா மட்டும் நிரந்தரமான சாந்தியுடன் இருந்தது.

எல்லோருக்கும் தந்தையான அல்லாவின் சித்தப்படி நான் இறந்து ஒழியவேண்டும் என்று இருந்தால் நான் மடிந்து போவேன். என்னை நம்பி வாழும் அவனுடைய பிரஜைகளைக் காக்க நான் உயிர் வாழவேண்டுமானால் அவர் என்னைக் காப்பார். அவருடைய விருப்பத்தை அறியப் பரிசோதனை செய்தேன்.

என்னுடைய உயிருக்கு எல்லாவிதமான ஆபத்துக்களையும் தேடிக்கொண்டேன். என் உயிரை அல்லா எடுத்துக்கொள்ள வேண்டிய அளவு சந்தர்ப்பங்கள் கொடுத்தேன். ஆனால் அவர் என்னைக் காப்பாற்றினார். அவருடைய விருப்பத்தை நான் அறிந்தேன். கோடிக் கணக்கான மக்களைப் பாதுகாக்க என்னை அவர் நம்புகிறார் என்று தெரிந்துகொண்டேன். என் மனம் நிலைபெற்றது. என் மன அமைதி எனக்குக் கிடைத்தது. இனி மேல் நான் தயங்கமாட்டேன் என்னைக் காக்கும் இறைவனின் விருப்பத்துக்கு மாறாக நடக்கமாட்டேன். தன்னந் தனியனாக இருந்தாலும் துணிந்து நின்று என் மக்களைக் காப்பேன்!"

அபுல்பாஸர் உருகினார்; கைகளைச் சிரமேற் குவித்தார். அவருடைய முத்தனைய மொழிகளில் "அக்பர் நாமா"வில் ஒரு புதிய அத்தியாயம் எழுந்தது.

* * *

நாம் கூறியதை அக்பர் நிறைவேற்றினார் என்பதற்குச் சரித்திரம் அத்தாட்சி.

முன் இதழ் தொடர்ச்சி

ரஜியா

ஹரிணி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு

அன்று நகரத்திலிருந்து திரும்பி வந்த யூசப், ரஜியா எங்கேயோ புறப்படத் தயாராகிக் கொண்டிருப்பதைக் கண்டான். "என்ன ரஜியா, நேற்று முழுவதும் ஜுரம்; இன்று எங்கே போகப் புறப்படுகிறாய்?"

"அப்பா! இப்பொழுது ஜுரமில்லை. இந்தப் பழங்களையும், புஷ்பத்தையும் பேகம் சாகிப்புக்கு நேரில் கொண்டுபோய்க்கொடுக்க விரும்புகிறேன்." என்று சொல்லிக் கொண்டே கிளம்பிவிட்டாள். கிழவனால் தடுக்க முடியவில்லை.

மோதிரத்தின் உதவியினால் அவள் அந்தப்புரத்திற்குள் சென்றாள். அங்கே அரசனும் இருந்தான் அச்சமயம். ரஜியாவின் இணையற்ற அழகைக் கண்டு ராணி அதிசயமடைந்தாள். "மஹதாப்பீபி! இவள்தான் நான் சொன்ன அந்த ரஜியா" என்றான் அரசன். ரஜியாவின் புருவம் சுருங்கியது. "ஓ இவள் தானா அந்தக் கற்பரசி!" என்று ராணி சொன்ன பதிலைக் கேட்டு ரஜியாவின் உள்ளம் கொதித்தது.

அரசன் பேசிய மாதிரியிலிந்து அவன் தன்னைப் பற்றி ஏதோ பொய் சொல்லி அவளை ஏமாற்றியிருக்க வேண்டுமென்று ஊகித்தாள். கோபத்தினால் உடல்நடுங்கியது.

"ரஜியா! நாளைக்கும் பழங்கள் கொண்டு வருகிறாயா? எனக்கு முடிந்தால் உன்னுடைய அழகான தோட்டத்தைப் பார்க்க வருகிறேன்" என்றாள் அரசி.

"அம்மணி! உத்தரவு. ஆனால் இந்த அடிமைக்குப் பல தினங்களாக ஜுரம், மன்னிக்க வேண்டும்."

"என்ன ரஜியா! என்னைப் பார்த்துங் கூட உனக்கு உடம்பு சரியாக வில்லையா?" அவன் குரலில் பரிகாசம் தொனித்தது. ரஜியாவுக்கு இந்தக் குறும்புப் பேச்சு பிடிக்கவில்லை, கை கத்தியின் பிடியைத் தடவியது. மஹதாப்பீபீ உரக்கச் சிரித்தாள். ஆனால் அடுத்த வினாடி ரஜியாவின் பயங்கர முகம் அவள் சிரிப்பைத் தடை செய்து நிறுத்தியது.

"சரி! ரஜியா! உடம்பு சரியில்லாவிட்டால் நீ வரவேண்டாம்." என்றாள் மெதுவாக.

"உத்தரவு ராணிசாகிபா!" என்று சலாம் செய்து பின்னால் நகர்ந்தாள். பிறகு திரும்பிச் செல்ல ஆரம்பித்தாள். அதைக் கண்ட நவாப், "ரஜியா! நில்!" எனக் கர்ஜித்தான். அவள் கம்பீரமாக நிமிர்ந்து நின்று அவனை உற்றுப் பார்த்தாள்.

"இவ்வளவு அலக்ஷ்யமா? எனக்கு ஏன் ஸலாம் செய்யவில்லை?" அரசனின் அதிகாரக் குரல் அவளை உலுக்கியது. மனம் வேதனையினாலும், ஆத்திரத்தினாலும், துடித்தது. பல்லைக் கடித்துக் கொண்டு 'சலாம்' செய்துவிட்டு வேகமாகச் சென்றாள்.

"ஓடு! வேகமாக ஓடு ரஜியா! நீ செய்த தவறுக்குப் பயந்து ஓடுகிறாயா? ஓடு! உனக்கு வேண்டும். இன்னும் வேண்டும். ஓடு, ஓடு" என்று தன்னைச் சுற்றிலுமுள்ள வஸ்துக்கள் யாவும் கூக்குரலிடுவது போல் தோன்றியது அவளுக்கு.

அன்று முழுவதும் அவள் சாப்பிடவில்லை. பழிவாங்கும் எண்ணம் அவள் மனதில் கொழுந்து விட்டெரிந்தது. வெகு நேரம் யோசனையிலாழ்ந்திருந்தாள். நடு இரவு. சட்டென்று எழுந்து தந்தையை எழுப்பினாள். கிழவன் திடுக்கிட்டான். "என்ன ரஜியா? எங்கே போகிறாய்?" என்றான்.

"அப்பா, உடனே புறப்படு. அரசன் என்னைக் கொல்ல ஏற்பாடு செய்திருக்கிறான். ஓடு, இங்கேயிருந்து ஓடிவிடு. இந்தச் சாமான்களையும், பணத்தையும் எடுத்துக் கொண்டு நம்முடைய நாட்டிற்கு ஓடிவிடு. உம், சீக்கிரம்!" என்று அவசரப் படுத்தினாள்.

"ரஜியா! என்கண்ணே! உன்னைத் தனியே விட்டுப் போவதா? நீயும் புறப்படு. ஏன் அரசன் உன்னைக் கொல்லவேணும்? நீ என்ன குற்றம் செய்தாய்?"

"அப்பா! நான் சொல்லுவதைக் கேள்; நான் பிறகு வருகிறேன். நீ உடனே புறப்பட வேண்டும்."

இரவோடு இரவாக எல்லாச் சாமான்களையும் மட்டக் குதிரையின்மீது ஏற்றி அவனையும் அனுப்பிவிட்டாள்.

கிழவன் கண்ணீர் பெருக்கிய வண்ணம் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான். அங்கே நிலைத்து நின்ற ரஜியாவின் கன்னங்கள் கண்ணீரால் நனைந்தன. "அப்பா! உன்னை அல்லா காப்பாற்றுவார். போய்வா அப்பா!" என்றாள் மெதுவாக.

* * *

குளிர்ந்த தென்றல் வீசும் மனோகரமான மாலைவேளை, பச்சை நிறப்பட்டு 'பிஜாமா'வும், சட்டையும், கைநிறைய வளையும், சரிகை நக்ஷத்திரப் பொட்டுப் போட்ட ஆகாய வர்ணமுள்ள மேலாடையையணிந்து, முதுகில் நீண்ட கூந்தல் புரள, புவன மோகினியாக நின்றாள் ரஜியா. ஒரு முறை அக்கரையைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள். கத்தியை எடுத்து முத்தமிட்டாள்.

"என்னுடைய சகியே! பட்டாணியப் பெண்ணை மோசம் செய்து ஏமாற்றிவிட்டு ஒரு நாளும் உயிர் வாழ முடியாது. பட்டாணியப் பெண்ணுக்குக் கெஞ்சவோ, கொஞ்சவோ தெரியாது. அவள் சத்தியத்திற்கும், நீதிக்கும்தான் கட்டுப்பட்டவள். என் பிரிய சகி! நேற்று நடந்த அவமரியாதையை அவளால் பொறுக்க முடியாது. 'அன்வர்! என் பிரிய அன்வர்! உன் கதி இப்படியா ஆக வேண்டும்? உன்னிடம் அன்பு கொண்டு உள்ளத்தைப் பறி கொடுத்து, உன் சிரிப்பைக் கண்டு பொங்கிப் பூரித்து நின்ற ரஜியா இன்று உன்னைக் காணக் கூட விரும்பவில்லை.' துரோகி! அவன் உயிருடனிருக்கக் கூடாது" என்று முணு முணுத்துக் கொண்டே எழுந்து நடந்தாள்.



ரஜியா ராணியைப் பார்த்தபோது அவள் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தாள். அஸ்தமன சமயம். அரண்மனை எங்கும் பிரகாசமான விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ரஜியாவின் இணையற்ற சௌந்தர்யத்தைக் கண்டு மஹதாப் சற்றுப் பொறாமைகொண்டாள். ஆனாலும், "ரஜியா! நீ நல்ல அழகி. உன் அழகுக்கு ஈடு மெடுப்பும் கிடையாது" என்றாள்.

ரஜியா மெதுவாகச் சிரித்துச் 'சலாம்' செய்தாள்.

"ஆமாம் ரஜியா! ஒரு விஷயம். நீ கூட அரசரை மிக விரும்புவதாகக் கேள்விப் பட்டேன். அவரைக் காண நீயும் என்னைப் போல் தானே துடித்துக் கொண்டிருப்பாய்?"

ரஜியாவின் முகம் வெட்கத்தினால் சுருங்கியது. தலை குனிந்து, "ஆமாம் அம்மணி! இன்றுகூட நான் அரசரைக் காண ஆவலுள்ளவளாகத் தானிருக்கிறேன்."

அதே சமயம் அன்வர்கான் அங்கு வந்து நின்றான். மெருகிட்ட தங்கப் பதுமைபோல் நிற்கும் அழகி ரஜியாவைக் கண்டு மயங்கி நின்றான். பிறகு சமாளித்துக் கொண்டு, "மஹதாப்! நான் சொல்லவில்லையா? அவள் என்னதான் உடம்பு சரியில்லாவிட்டாலும், கட்டாயம் இங்கு வருவாள் என்று நான் சொல்லவில்லையா?" என்று சொல்லும் போது அவன் குரலில் ஏளனம் காணப் பட்டது.

ரஜியா நெஞ்சில் கைவைத்து, "மனமே பொறு. அவன் உன்னை நன்றாக அவமானம் செய்யும் வரை பொறுத்திரு. அப்பொழுது தான் அவன் மார்பில் கத்தியைச் செலுத்த உனக்கு மனதில் உறுதி ஏற்படும்." என்று சொல்லிக் கொண்டாள்.

அரசன் மேலும் மேலும் அவளைத் தூற்றினான். "மஹதாப்! பெரியவர்கள் சொல்வது உண்மைதான். மனிதன் எப்பொழுது கீழே விழத் தொடங்குகிறானோ உடனே

அவன் மிருகமாக, முட்டாளாக ஆகிவிடுகிறான். இவள் அன்று............" ரஜியாவின் கை கத்தியைத் தொட்டது.

நவாப் உலாவிக் கொண்டே பரிகாசமாகச் சிரித்து, "என்ன ரஜியா! ஏன் பேசவில்லை? என்மேல் கோபமா? நான் அன்று வரவில்லை என்று கோபமா?" என்றான்.

ரஜியா பாய்ந்து சென்று அவன் எதிரே நின்று, "சீ! பேசாதே! போக்கிரி! வஞ்சகா! பட்டாணிப் பெண்ணின் காதலை எப்படி அனுபவித்தாயோ அப்படியே அவள் பழியையும் ஏற்றுக்கொள்." கண்ணிமைப்பதற்குள் கத்தி அவன் மார்பில் நுழைந்தது. "ஐயோ! ரஜியா!" என்று அலறிக் கொண்டே தடாரென்று விழுந்தான் அரசன்.

"மகாராணி அவர்களே! பணக்காரர்கள் மனிதனை மனிதன் என நினைப்பதில்லை. நான் ஏழை! ஆனாலும் உனக்கு இருப்பதைப்போல்தான் எனக்கும் இதயம் உண்டு. நீயும் ஒரு பெண்தான். அப்படியிருந்தும் இன்னொரு பெண்ணை அவமானப் படுத்துவதைச் சிரித்துக்கொண்டு பார்த்துக் கொண்டு நிற்கிறாய். அதற்குப் பலன் இது தான்" என்று சொல்லிக் கொண்டே நடந்தாள்.

ராணி பயத்தினால் மூர்ச்சையடைந்தாள்.

* * *

மூன்று மாதங்கள் ஓடி மறைந்தன. சோகக் கடலில் ஆழ்ந்து கிடந்த மஹதாப், மந்திரியின் தூண்டுதலினால் விசாரணைக்கு நாள் குறிப்பிட்டாள்.

அதே இடம். தர்பார் ஹால். நியாய விசாரணை. அதே ரஜியா. அதே மந்திரி. சர்தார்கள். ஆனால் சிம்மாசனத்தில் வீற்றிருந்தவள் அரசி. அன்று அரச குமாரனைக் கொன்ற குற்றவாளி ரஜியா. இன்று பேகம் சாகிபாவின் அன்புக் கணவனை, நாட்டின் நல்லரசனைக் கொன்ற குற்றவாளி. விசாரணை தொடங்கியது. அன்றைய தினமே குற்றத்திற்கு ஏற்ற தண்டனையை அளித்திருந்தால் மேலும் இந்தக் குற்றம் நடக்கச் சந்தர்ப்பமிருந்திருக்காது. சட்டப்படி குற்றவாளிகளைத் தண்டிக்காவிட்டால் நாட்டில் குற்றங்கள் மிகுதியாகிவிடும். அரசர் தயவுள்ளவர். விடுதலையளித்து விட்டார். குற்றவாளிகளிடம் தயவு காட்டுவதின் பலன் இதுதான். நான் அப்பொழுதே சொன்னேன், பட்டாணியனுக்கு இடம் கொடுக்க வேண்டாமென்று. இந்தச் சனியன்களுக்கு ஒவ்வொரு வார்த்தைக்கும் அவமரியாதை வந்துவிடும். உடனே கத்தியைத் தூக்கி விடுவார்கள்," என்று மந்திரி சொல்லிக் கொண்டே போனான்.

"மந்திரி! அதிருக்கட்டும். இம்முறை இந்தப் பெண் நம்முடைய அரசர் மீது என்ன குற்றம் சாட்டுகிறாள்? கேளுங்கள்," என்றாள் மஹதாப்.

ரஜியாவின் கண்கள் சிவந்தன. "ஏ பெண்ணே! உன்னுடைய மனு என்ன? அரசர் உனக்கு என்ன கெடுதல் செய்தார்?"

"ஒரு கெடுதலும் செய்யவில்லை."

அவ்வளவுதான். அவள் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் ராணியின் மனம் அதை ஒப்புக் கொள்ளவில்லை. அவள் ரஜியாவைத் தனியாக அழைத்துச் சென்று எல்லா விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டாள். அவள் மனம் தன் கணவனின் அக்ரமத்தை அறிந்து துடித்தது. அவனை ஏறெடுத்துப் பார்ப்பதற்குக்கூட அவளுக்குத் தைரியமில்லை.

பிறகு மந்திரியைக் கூப்பிட்டு, "நீங்கள் கூறுவது உண்மைதான். குற்றவாளியைத் தண்டிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் இதில் யார் குற்றவாளி என்று தீர்மானிப்பது கஷ்டமாயிருக்கிறது. நான் சொல்லுவதைக் கேட்டு, பிறகு யார் குற்றவாளி என்பதை நீங்கள் தீர்மானிக்கலாம்.

"முதல் தடவை ரஜியா குற்றம் செய்த போது பெரிய மகாராஜா விசாரணை செய்தார். அப்பொழுது பணத்திமிர் பிடித்த, வாலிப முடுக்கினால் அடங்காத குணமுள்ள, விவாகமாகாத இளவரசன் குற்றவாளி. அவர் ஒரு ஏழைப் பெண்ணை அவமதித்தது குற்றம் என மதிக்கப்பட்டது, அதுகூட சகஜம். ஆனால் இம்முறை நிலைமை மிக்க சிக்கலாயிருக்கிறது: மனிதன் என்னவோ குற்றங்களின் உருவம்தான். குற்றம் நடந்து விட்டது. அதை ஒப்புக் கொள்ளாவிட்டால் குற்றம் மேலும் மேலும் விருத்தியடையும். மெக்காவில் படித்தவர்-குரு ஜமால்கானிடம் உபதேசம் பெற்றவர்—வீட்டில் தாசியைப் போல் பணிவிடை செய்ய ஒரு மனைவியைப் பெற்றவர் நமது அரசர். நல் நடத்தையில் பிரசித்தி பெற்றவர் என்றுதானே ரஜியா அவரை நம்பினாள். அப்படிப்பட்ட அரசன் ஏழை ரஜியாவை மோசம் செய்திருக்கிறார். ஆம், நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனால் இது உண்மை. பரிசுத்தமான—புண்ணியமான நமது குரானை முன்வைத்து இவளை விவாக ஒப்பந்தத்தில் சிக்க வைத்தார். அவளை

ஒரு நாளும் மோசம் செய்வதில்லை என்று சபதம் செய்திருக்கிறார். பிறகு இவளுடைய இணையற்ற பொக்கிஷத்தைக் கொள்ளையிட்டிருக்கிறார். நீங்களே சொல்லுங்கள், இப்பொழுது யார் குற்றவாளி என்று. இளவரசருடைய குற்றம் நவாபினுடைய குற்றத்திற்கு முன் உறை போடக்காணாது. மோகவெறி தணிந்தது, இவளை உதறித் தள்ளி விட்டார். என் முன்னிலையில் கௌரவமுள்ளவர்போல் நடித்து, குற்றத்தை இந்த ஏழை மீது சுமத்தினார். அது மோசமில்லையா? அவள் ஒரு பெண். பெண்ணாகவும், அழகாகவும் இருப்பதுதான் அவளுடைய குற்றம். இப்பொழுது யார் குற்றவாளி?" என்று ஆவேசத்துடன் பேசினாள்.

ஒருவரும் பேசவில்லை. சபை முழுவதும் ஒரே நிசப்தம். ரஜியா ராணியை ஆச்சரியத்துடன் உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

ராணி மறுபடியும், "சபையோர்களே! தன்னுடைய கண நேரத்திற்காக ஒரு ஏழையின் வாழ்க்கையில் சுகமும், நிம்மதியுமில்லாமல் செய்து, அவளை அலக்ஷ்யம் செய்து தள்ளுவது நியாயமா? அது குற்றமல்லவா? ஆகவேதான் ரஜியா அவளுடைய மோசக்காரக் கணவனைக் கொன்று விட்டாள். அவள் செய்தது சரி என்பது என் அபிப்ராயம். ஆகவே நான் அவளை விடுதலை செய்கிறேன்" என்றாள்.

இதைக்கேட்ட ரஜியாவின் உள்ளம் உணர்ச்சியினால் துடித்தது. கண்ணீர் பொங்கி வழிந்தது. "அம்மணி! தங்கள் கருணை இணையற்றது. இளவரசனின் விஷயத்தில் நான் உண்மையில் குற்றமற்றவள். ஆனால் இம்முறை நான் என் கணவனைக் கொன்ற குற்றவாளி; காதகி. என்னைத் தண்டிப்பதுதான் நியாயம். என் சம்மதத்திற்குப் பிறகுதான் விவாகம் நடந்தது. ஆனால் அவர் என்னைத் தந்திரத்தில் சிக்க வைத்தார். நான் மயங்கி விட்டேன். அவரைத் தெய்வம் என நினைத்தேன். ஏமாந்து விட்டேன். ஆனாலுமென்ன? நான் ஏன் பொறுமையாக இருக்கக்கூடாது? அவர் என் கணவர்தானே. நான் ஏன் அவர் குற்றத்தை மன்னிக்கக் கூடாது? அவரைக் கொல்ல என்ன உரிமை இருக்கிறது? எனக்கு நியாயம் வழங்கும்படி ஏன் கெஞ்சிக் கேட்கக் கூடாது? கணவனிடம் பணிவாகக் கேட்பது, கெஞ்சுவது

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	,,	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	,,	53,00,000
ரிஸர்வ் நிதி	,,	62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன.

N. கோபால அய்யர்
ஸெக்ரெடரி.



தி இந்தியன் பாங்க் லிட்.

குறைவா? ஹுஜுர்! நான் ஆத்திரக்காரி, தவறு செய்து விட்டேன், எனக்கு விடுதலை வேண்டாம். என்னைத் தண்டித்து விடுங்கள். அம்மணி! என்னை விடுதலை செய்து தங்களுடைய நியாயத் திர்ப்புக்குக் களங்கம் உண்டாக்க வேண்டாம்.'' என்று உருக்கமாகச் சொன்னாள்.

மஹதாப் அதிசயமடைந்தாள். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. ரஜியா சொல்லுவதும் சரியாகத்தானிருந்தது. ''ஆம் தன்னைப் பலவந்தப்படுத்தியவனைக் கொல்லுவது நியாயம். ஆனால் தன் கணவனின் மோசத்திற்கு அவனை நியாய பிக்ஷை கேட்டிருக்கலாமல்லவா?'' வெகு நேரம் யோசித்தாள். ''சரி, ரஜியாவுக்கு ஏழுவருடம் கடின காவல் தண்டனை விதித்திருக்கிறேன்'' என்று கூறி, சட்டென்று எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

*　　*　　*

நடு இரவு. உலகமே நித்திரையிலாழ்ந்திருந்தது. ரஜியா அன்வர்கான் அளித்த மோதிரத்தை உதட்டருகில் வைத்துக் கொண்டு விம்மி விம்மி யழுதுகொண்டிருந்தாள். அடிக்கடி அதைமுத்தமிட்டு, ''ஐயோ என் பிரிய அன்வர்! நான் முட்டாள். உன்னிடம் தயவுகாட்ட எவ்வளவோ முயன்றேன். ஆனால் அவமானத்தைத் தாங்காத இந்த உள்ளம் உன்னை மன்னிக்கத்தயாராயில்லையே, நான் என்னசெய்ய! உன்னுடைய அந்தப் பழிச்சொல்லை என்னால் பொறுக்க முடியவில்லையே. ஐயோ! அன்வர்! நீ என்னை ஏன்கெடுத்தாய்? என் அழகுதானே உனக்குப் பிடித்தது, மயக்கியது. என் உள்ளம்–அன்பு நிறைந்த உள்ளம்—தாஹிரின் அன்பைக் கூட உதறித்தள்ளி உன்னிடம் அன்பு வைத்த அந்த உள்ளம், உனக்குப் பிடிக்கவில்லையா? உன்னுடைய கபடமும், என்னுடைய உயர்ந்த அன்பும்தான் நம்மை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது. அன்வர்! கடவுளிடம்கூட உனக்குப்பயமில்லையா? ரஜியா சத்யத்திற்குக் கட்டுப்பட்டவள், பொய்யை, வேஷத்தைச் சகித்துக் கொள்ள மாட்டாள். அவள் பட்டாணியப் பெண் என்பதை மறந்து விட்டாயா?

''அன்று ஆத்திரம் என் கண்ணை மறைத்து விட்டது. இன்று மஹதாப்பீபிக்காக மனம்வருந்துகிறேன், ஐயோ! பேதை, அவள் சந்தோஷத்தை அழித்து விட்டேனே அன்வர்! நான் உயிர்வாழ விரும்பவில்லை, உயிர் வாழ்வது ஆனந்தமாக இருப்பதற்காகத்தானே. அழுது கொண்டு வாழ எனக்கு விருப்பமில்லை. இதோ நானும் உன்னிடம் வருகிறேன். இனிமேல் என்னை நீ மோசம் செய்யமாட்டாயல்லவா?'' என்று பிதற்றினாள். ''எப்பொழுது என்னைப்பார்க்க விரும்புகிறாயோ அப்பொழுது இந்த மோதிரம் உன்னை என்னிடம் சேர்ப்பிக்கும். என்று சொன்னாயல்லவா? இதோ இதன் உதவியினாலேயே உன்னிடம் வருகிறேன்.'' என்று கூறி மோதிரத்தைக் கட்டிலின் காலடியில் வைத்து நெறித்தாள். அதிலிருந்து பெயர்ந்து வந்த வைரத்தை விழுங்கி விட்டாள். பிறகு வெகு நேரம் கடவுளைத் தியானித்துக் கொண்டே தூங்கி விட்டாள்.

காலையில் வெகுநேரமாகிவிட்டது. கைதி கதவைத் திறக்கவில்லை. எவ்வளவோ இடித்தும் பயனில்லை. ராணிக்கு அறிவிக்கப்பட்டது.

பேகம் அதிசயமடைந்தாள். அவள் அங்கு வந்ததும் கதவு உடைக்கப்பட்டது. மஹதாப் அவசரமாக உள்ளே நுழைந்தாள். ரஜியா நிம்மதியாகக் கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளைப் புரட்டினாள்; பேச்சில்லை, மூச்சுமில்லை. அவள் விழிப்பற்ற தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். மார்பின் மீது படிந்திருந்த அவள் கைகளை அகற்றினாள். அங்கே அவள் இதயத்தில் அரசனுடைய மோதிரம் இருந்தது. அதிலுள்ள வைரத்தைக் காணவில்லை. ராணி விஷயத்தை அறிந்து கொண்டாள்.

''ரஜியா! நீ உயர்ந்தவள். தைர்யமுள்ளவள். துரோகம் செய்தவனைத் தண்டிக்க எப்படிப் பின் வாங்கவில்லையோ, அப்படியே உன்னையும் நீ தண்டித்துக் கொள்ள அஞ்சவில்லை. கத்தியை எடுத்த நான் இந்த மோதிரத்தைக் கவனிக்காமல் விட்டு விட்டேன். சகோதரி! உன் நினைவும், என் அன்புக் கணவனின் நினைவும் எனக்கு என்றுமே அழியாது. போ! ரஜியா! போ. இம்முறை உன் அன்பன் உன்னை ஏமாற்ற முடியாது.'' என்று கூறி மஹதாப் அவள் நெற்றியில் முத்தமிட்டாள். அவள் கண்களில் கண்ணீர் பெருகி ஓடியது. ''ரஜியா! பேதை ரஜியா!'' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

WE LOOK BACK WITH PRIDE
AND AHEAD WITH CONFIDENCE

கேரளா விசேஷ ரகங்கள்

1. **சந்தன சோப்** - சரும சௌந்தரியத்திற்குகந்தது. சந்தனத் தைலம அடங்கியது.
2. **வில்லிங்டன்** - அனைவரும் விரும்பும் உயர்தர டாய்லெட் சோப்.
3. **ரோஸ்** - பிரபலமான, குறைந்த விலையிட்ட, ரோஜா ஸெண்ட் சேர்ந்த டாய்லெட் சோப்.
4. **வேப்** - மிக உயர்தர சரும சோப். வாசனை நீக்கப்பட்ட வேப்பெண்ணெய் அடங்கியது.
5. **கோல்டார்** - சரும உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளைக்கொல்லுகிறது.
6. **வாஷ்வெல் பார்** - துணிகளைச் சுத்தமாக நன்கு சலவை செய்கிறது. சிக்கனமானது.
7. **ஷேவிங் ஸ்டிக்** (பேக்லைட் உறை) - மிகப் பிரபலமானது. ஏராள நுரை அளிக்கிறது, பேக்லைட் உறையில் (ரீபில்களும் கிடைக்கும்.)

KERALA SOAP INSTITUTE, CALICUT.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

தற்கால கட்டிட நிர்மாணம்

தானியக் குதிர்கள்.

உற்பத்தியாகும் எல்லா உணவுப்பொருள்களையும் சேமித்து பாதுகாக்க வேண்டிய அவசியம் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ள இத்தருவாயில், எலிகளினாலும் ஆயிரக்கணக்கான டன் தானியங்கள் நாசமாய்ப் போகும்படி விட்டுவிட முடியாது.

கான்கிரீட்டின் உதவியால் எலிகளைத் தடுக்கலாம். தனி உபயோகத்திற்கும் தேவையுள்ள சாஸ்வதமான தானியக் குதிர்கள் (தரைமட்டத்திற்கு மேலாகிலும் பூமிக்குள்ளாகிலும்) கட்டுவதற்கு, எலிகளினாலும், நெருப்பினாலும், பாதிக்கப்படாததும், சுகாதாரமான தன்மை மிகுந்ததுமான சாதனம் கான்கிரீட். தவிர கான்கிரீட் குதிர்கள் ஈரத்தினால் பாதிக்கப்படா. சொற்ப சிலவில் நீடித்த உழைப்பைக் கொடுக்கும். உங்களுக்கு உதவி தேவையானால் ஸி. எம். ஐ. யின் டெக்னிகல் ஸ்தாபகமான தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா (9 மவுண்ட் ரோட், P.O. Box 312 மதராஸ்) வுக்கு எழுதுங்கள்.

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லி.
டிஸ்டரிபூடர்ஸ் போர்
தி அஸோஸியேடெட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லி.

ADARTS CMI. 156 TAMIL

நாகரீக
நங்கையர்
விரும்புவது
டி.எஸ்.ஆர்.
கோகுல் ஹேர் ஆயில்
சந்தனாதி தைலம்
அரைக்கீரைவிதை தைலம்
கோகுல் அம்பர் வத்தி
டி.எஸ்.ஆர். & கோ,
கும்பகோணம்.
இணையிலா வாசனை
தயாரிப்புகளுக்கு
டி.எஸ்.ஆர்.
FAS-390.